செப்டெம்பர் 2012

# ஞானம்

148

## கலை இலக்கியச் சஞ்சிகை



**நடைமுறை காலத்துப் பெண்ணியச் சிந்தனைகள்**

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

**சிறுகதைகள்:**

- தெ. ஈஸ்வரன்
- சூசை எட்வேட்
- உ.நிசார்
- தேவ. முகுந்தன்

- செங்கை ஆழியான்
- வே. தில்லைநாதன்
- கெக்கிராவ சஹானா



பாலம் லக்ஷ்மணன்

விலை : ரூபா 65/=

www.gnanam.info

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தரமான தங்க நகைகளுக்கு...


# NAGALINGAMS

*Jewellers*



**Designers and Manufacturers of 22KT Sovereign Gold Quality Jewellery**





101, Colombo Street, Kandy
Tel : 081 - 2232545

# CENTRAL ESSENCE SUPPLIERS

**SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS**

**Dealers in all Kinds of Food Essences, Food Colours, Food Chemicals, Cake Ingredients Etc.**

76 B, Kings Street, Kandy
Tel : 081-2224187, 081-2204480, 081-4471563

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்

பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்

ஒளி - 13 சுடர் - 04

**ஆசிரியர்**
*தி.ஞானசேகரன்*

**இணை ஆசிரியர்**
*ஞானம் ஞானசேகரன்*

**ஓவியர்**
*சிவா கௌதமன்*

**தொடர்புகளுக்கு**
*'ஞானம்' அலுவலகம் :*
*3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.*

**தொலைபேசி**
*0094 - 11 2586013, 0094 - 777 306506*
*0061 - 2 80077270 (Aus)*

**தொலைநகல்**
*0094 11 2362862*

**மின்னஞ்சல்**
*editor@gnanam.info*

**இணையத்தளம்**
*http://www,gnanam.info*
*http://www.t.gnanasekaran.lk*

**உள்நாட்டு சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | : ரூபா | 1,000/= |
| ஆறு ஆண்டுச்சந்தா | : ரூபா | 5,000/= |
| ஆயுள் சந்தா | : ரூபா | 20,000/= |

| *வெளிநாட்டு சந்தா* | *ஓராண்டு* |
|---|---|
| Australia(AU$) | 50 |
| Europe(€) | 40 |
| India(Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada($) | 50 |
| UK(£) | 35 |
| Singapore(S $) | 50 |
| Other(US $) | 50 |

**வெளிநாட்டு உள்நாட்டு**
**வங்கித் தொடர்புகள்**
SwiftCode :- HBLILKLX
T.Gnanasekaran
Hatton National Bank, Wellawatha Branch
A/C No.009010344631

மனியோடர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் அதனை **வெள்ளவத்தை** தபாற் கந்தோரில் மாற்றக் கூடியதாக அனுப்புதல் வேண்டும் - ஆசிரியர்

# ☞ இதழினுள்ளே ...

- **கவிதைகள்**

புலோலியூர் வேல்.நந்தன் 04
நீலா பாலன் 15
ச. முருகானந்தன் 18
அன்புடீன் 22
அன்புமணி 37
வே. ஐ. வரதராஜன் 43
நா. ஜெயபாலன் 45

- **கட்டுரைகள்**

முருகபூபதி 03
இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் 08
வே. தில்லைநாதன் 34
கெகிறாவ ஸஹானா 38
கலாநிதி நா.சுப்பிரமணியன் 40

- **சிறுகதைகள்**

தெ. ஈஸ்வரன் 05
சூசை எட்வேட் 16
P.D. பாலரட்ணம் (குறுங்கதை) 22
உ. நிசார் 27
தேவமுகுந்தன் 31

- **அணிந்துரை**

செங்கை ஆழியான் 23

- **பத்தி எழுத்து**

மு. பொ. 46
கே.ஜி. மகாதேவா 47

- **சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**

கே. பொன்னுத்துரை 53

- **கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்** 36

- **நூல் அறிமுகம்**

தியாகராஜன் சர்மா/குறிஞ்சி நாடன் 49

- **வாசகர் பேசுகிறார்** 55

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. - ***ஆசிரியர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்.
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப்பதவி கொள்வார்.

# உதவிக்கரம் வேண்டிநிற்கும் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள்

“அன்றும் போராளி, இன்றும் போராளி” என்ற தலைப்பில் ‘பதிவுகள்’ என்ற இணையத்தளத்தில் பதிவாகியிருந்த ஒரு சிறுகுறிப்பை அவுஸ்திரேலிய நண்பர் முருகபூபதி ஞானத்துக்கு அனுப்பியிருந்தார். பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் அதனை எழுதியிருந்தார். அவர் விடுமுறையில் மட்டக்களப்புக்கு வந்தபோது, அங்கிருந்து 25 கி. மீ. தொலைவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் தான் சந்தித்த புனர்வாழ்வுபெற்ற ஒரு சில முன்னாள் போராளிகள் மற்றும் மனிதர்களின் சோகம் பற்றியதாக அந்தக்குறிப்பு இருந்தது.

“‘விபச்சாரம் செய்யும் முன்னாள் பெண்போராளிகள்’

‘ஏழ்மையினால் குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு வழங்க முடியாது முகாம்களில் தவிக்கும் முதுகெலும்பு பாதிக்கப்பட்ட முன்னாள் போராளி’

‘தொடைக்கு மேற்பகுதியுடனேயே காலை இழந்து, மனைவி குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக வீதியோரத்தில் சுண்டல் விற்கும் முன்னாள் போராளி’

‘திருமணமாகி பத்தே மாதத்தில் கடல் மோதல் ஒன்றில் காணாமல்போன கேர்ணல் தரத்திலான தனது கணவன் இன்னும் உயிருடன் இருப்பார் என்னும் நம்பிக்கையுடன் தனது 4 வயதுப் பெண்குழந்தையுடன் வாழ்வாதாரம் இன்றி தம்பி தங்கையுடன் முகாமில் தவிக்கும் பெண்போராளி’

‘இருகைகளையும் தோள்மூட்டுடன் இழந்த முன்னாள் போராளியான மகனை பராமரிக்கும் வயதான தந்தை’

‘இருகண்களையும் இழந்த முன்னாள் போராளி’

‘குழந்தைப் போரளியாய் இயக்கத்தில் இணைக்கப்பட்டு இறுதிப்போரில் பெற்றோர் சகோதரிகளை இழந்த முன்னாள் போராளி’

புனர்வாழ்வு பெற்றிருந்தாலும் இவர்களின் வாழ்வில் அமைதியில்லை. மகிழ்ச்சி என்பது எள்ளவும் இல்லை. எப்பொழுதும் கண்காணிக்கப்டுகிறார்கள். எவ்வித கொடுப்பனவுகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. தொழில் வாய்ப்புகள் குறைவு. கூலிவேலைகளும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. வயல் வேலைகள், அறுவடை இயந்திரங்கள் அறிமுகப்பட்டிருப்பதால் குறைந்துள்ளது. இவ்வாறு இருப்பவர்களிடம் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துப் போகிறோம் என்று பணம் பிடுங்கும் மனிதர்களுக்கும் குறைவில்லை.

இப்படியான போராளிகள் வடக்கு கிழக்கு எங்கும் நிறைந்திருக்கிறார்கள்.”

மேற்குறிப்பிட்ட பதிவினை வாசித்தபோது, பல்வேறுவகைகளில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினரில் உடனடியாக உதவிக்கரம் வேண்டிநிற்கும் ஒருசாரார் பற்றிய உணர்வு மேலோங்கியது.

மேற்குறிப்பிட்டவர்களின் வாழ்வாதாரத்தை அரசாங்கம் கவனிக்கும் என்று இன்னும் காத்திருக்கத் தேவையில்லை. சமூக அமைப்புக்களும், அரசு சார்பற்ற நிறுவனங்களும், புலம் பெயர்ந்த தமிழர்களும்தான் இவர்களது உயிரோசையைக் கேட்க வேண்டும். இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டும்.

**‘ஞானம்’ 150ஆவது இதழ் “ஈழத்துப் போர்க்கால இலக்கியச் சிறப்பிதழா”க மலர்கிறது.**

**படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்களை எதிர்ப்பார்க்கிறோம்.** - ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டைப் படஅதிதி

# பழந்தமிழ் இலக்கியத்திற்கும் நவீன தமிழ் இலக்கியத்திற்கும் பாலமாக விளங்கும்

# பாலம் லக்ஷ்மணன்

முருகபூபதி

பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன தமிழ் இலக்கியத்திலும் மிகுந்த பரிச்சியமுடனும், சமய இலக்கியங்கள் தொடர்பான பரந்த ஞானத்துடனும், அவுஸ்திரேலியா சிட்னியிலும் மெல்பனிலும் கலை,இலக்கிய நிகழ்வுகளில் முடிந்தவரையில் தவறாமல் கலந்துகொள்ளும் கலா ரஸிகையாகவும் எம்மத்தியில் நடமாடுபவர் திருமதி பாலம் லக்ஷ்மணன்.

இலங்கையில் ஒரு கால கட்டத்தில் தமிழ்க் கல்வித்துறையிலும் இலக்கிய வட்டாரத்திலும் பிரபல்யம் பெற்று விளங்கிய வித்தியாதிபதியாக கல்வி அமைச்சில் நீண்ட காலம் பணியாற்றிய கி.லக்ஷ்மணஐயரின் அன்பு-அருமைத் துணைவி யாரான பாலம் அவர்கள், கணவரின் கல்விப்பணிக்கு பக்கபலமாக மிளிர்ந்தவர்.

இலங்கையில் பல பாகங்களிலும் தமிழ்ப் பாடசாலைகளில் நடக்கும் விழாக்களுக்கு பிரதம அல்லது சிறப்பு விருந்தினராக கணவர் அழைக்கப்படும்பொழுதெல்லாம் மனைவி பாலம் அவர்களுக்கும் விழா ஏற்பாட்டாளர்களினால் அழைப்புவிடுக்கப்படும்.

திருமதி பாலம் அவர்களின் கைகளினால் பரிசுகள்- தங்கப்பதக்கங்கள் வாங்கிய தமிழ் மாணவர் சமுதாயம் இதனை மறக்கமாட்டாது.

இந்தியாவில் காசி சர்வகலாசாலையில் பி.ஏ. பட்டத்தில் அதிக கூடிய புள்ளிகளைப்பெற்றமைக்காக தங்கப்பதக்கம் பெற்றிருக்கும் பாலம், முறையாக கர்நாடக சங்கீதமும் சித்தார் இசையும் கற்றவர்.

வேலூரில் கல்விப்பாரம்பரியமும் கலை,இலக்கிய உணர்வும் மிக்க குடும்பத்தில் பிறந்த இவரின் வயதையொத்த இரத்த உறவினர்கள்தான் எழுத்தாளர் சார்வாகன் என்ற பத்மஸ்ரீ ஸ்ரீனிவாசன், பல திரைப்படங்களில் தோன்றியிருக்கும் நடிகர் கல்கத்தா விஸ்வநாதன், இந்திய பாதுகாப்புத் துறையில் உயர் பதவியிலிருந்த கேர்ணல் ஹரிஹரன் ஆகியோர்.

பாலம் அவர்களின் தமிழ்க்கல்வி-சமயம்-இசை முதலான துறைகளிலிருந்த ஆற்றலினால் பெரிதும் கவரப்பட்டுத்தான், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் பெற்று படிக்கச்சென்ற லக்ஷ்மண ஐயர், அவரை வாழ்க்கைத் துணைவி யாக்கிக்கொண்டார்.

திருமணத்தின் பின்னர் இலங்கை வந்த பாலம் ஆசிரியையாகத் தனது கல்விப்பணியைத் தொடர்ந்தார்.

சுமார் நாற்பது ஆண்டுகள் இலங்கையில் கொழும்பில் வாழ்ந்தார். கல்வி அமைச்சு சமய விவகாரம் தொடர்பாக பாடத்திட்டங்களை உருவாக்க முனைந்தபொழுது இந்து சமயப்பாட நூல்களை எழுதும் ஆசிரியர் குழுவில் முக்கியபங்காற்றினார். இலவசமாக பாட நூல்களை மாணவர்களுக்கு விநியோகித்த அந்தக்காலப்பகுதியில், இந்து சமயம் 1 முதல் 10 வரையிலான பாட நூல்களை எழுதும் பணியில் பலருடனும் இணைந்து சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்.

1970-80 காலப்பகுதியில் கொழும்பில் நடந்த பல இலக்கிய நிகழ்வுகளுக்கும் பாலம் தலைமை தாங்கியிருக்கிறார்.

1975 இல் புதுக்கவிதை மிகுந்த வீச்சுடன் எழுச்சிகொண்ட வேளையில், புதுக்கவிதைக்காகவே **அக்னி** என்ற இதழை கவிஞர் ஈழவாணன் நடத்தினார்.

**அக்னி** முதலாவது இதழின் வெளியீட்டுவிழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்தபொழுது அதற்குத் தலைமை தாங்கி இலக்கியக் கூட்டங்களுக்கு பெண்களையும் தலைமை தாங்கச்செய்யவேண்டும் என்ற புதிய மரபை அந்த புதுக்கவிதை ஏட்டின் விழாவில் உருவாக்கினார்.

ஈழத்தில் கவிஞர் முருகையன் தமிழகத்தில் சிதம்பர ரகுநாதன் கி.வா.ஜகந்நாதன் போன்றோர் புதுக்கவிதையை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்திருந்த அக்காலகட்டத்தில், இலக்கணத்தை தெரிந்துகொண்டு புதுக்கவிதையில் மீறல்கள் இடம்பெறவேண்டும் என்ற கருத்துப்போராட்டம் நடந்துகொண்டிருந்த சர்ச்சைமிக்க வேளையில் பாலம் அவர்களின தலைமையுரை இலக்கிய ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்தது.

கல்வி, இலக்கியம் என தனது சிந்தனைகளை வளர்த்துக்கொண்டிருந்த பாலம், பெண்கள் சமூகப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த சிரத்தைகொண்டிருந்தவர். அதற்கு தாமே முன்மாதிரியாக இயங்கியவர்.

கொழும்பில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சாரதா சமிதியை வளர்த்தெடுத்தார். இந்த அமைப்பில் சில வருடங்கள் தலைவராகவும் பணியாற்றினார். அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னரும் இலங்கையில், கொழும்பில் மட்டக்களப்பில் இயங்கும் இராமகிருஷ்ண மிஷனுடனான தொடர்புகளைப் பேணிவருகிறார்.

அவுஸ்திரேலியாவில் பல இலக்கியக்கூட்டங்களில் சமய நிகழ்வுகளில் இவர் வழங்கும் கருத்துரைகள் பயன் மிக்கவை. நூல் வெளியீட்டுவிழாக்களில் நூல் ஆய்வுரை நிகழ்த்தவரும்பொழுது குறிப்பிட்ட நூலை முழுமையாகப்படித்து எளிமையாகவும் நயமாகவும் பேசுவார்.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் தொடர்ச்சியான வருடாந்த எழுத்தாளர் விழாக்களுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்கிவருகிறார்.

சிட்னியிலிருந்து ஒலிபரப்பாகும் இன்பத் தமிழ் வானொலியில் பல வாரங்கள் **யாத்திரை** என்ற தலைப்பில் இந்தியத்திருத்தலங்களைப்பற்றி உரையாற்றியிருக்கிறார்.

தொடர்ச்சியான வாசிப்புப்பழக்கத்தை இயல்பாக்கிக் கொண்டிருக்கும் பாலம், அவுஸ்திரேலியாவிலிருந்து எழுதிக்கொண்டிருக்கும் பலரதும் படைப்புகளைப் படித்துவிட்டு, தமது கருத்துக்களை நேரடிச் சந்திப்பின்போது அந்தப்படைப்புக்குரியவரிடம் தெரிவிக்கும் நல்லியல்பு கொண்டவர். இந்த இயல்பு முன்மாதிரியானது.

எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் கனிவாகப்பேசும் பாலம் லக்ஷ்மணன், யேசு பாலகன் அவதரித்த கிறிஸ்மஸ் தினத்தன்றுதான் பிறந்தார்.

எண்பது வயது கடந்திருக்கும் இவரிடமிருந்து இலக்கியவாதிகளும் கலா ரஸிகர்களும் தமிழ்க கல்வியியலாளர்களும் அறிந்துகொள்ளவும் கற்றுக்கொள்வதற்கும் நிறையவுண்டு.

இலங்கையில் நீடித்த போரினால் பெற்றவர்களை இழந்து கல்வியைத் தொடரமுடியாமல் தவித்த ஏழைத் தமிழ்மாணவர்களுக்கு அவுஸ்திரேலியா விலிருந்து இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நிதியுதவி வழங்கிவரும் **இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின்** தொடக்க கால உறுப்பினராக விளங்கும் பாலம் அம்மையார், இலங்கை செல்லும் சந்தர்ப்பங்களிலெல்லாம் பாதிக்கப்பட்ட மாணவர்களை சந்தித்து கலந்துரையாடுவதையும் தம்மாலியன்ற ஆதரவுகளை வழங்குவதையும் வழக்கமாகக் கொண்டவர்.

அவருடன் கலந்துரையாடும்போது, அவரின் ஆழ்ந்த தமிழ் இலக்கியப்புலமையை அறிந்து கொள்ள முடியும். இலக்கியத்தேடல் அவரது இயல்பு.

கவிதை

# மனமுண்டானால்...

- புலோலியூர் வேல் நந்தன்

உங்களுக்குத்
தர மனமில்லை
மனமிருந்தால்
எப்போதோ
தந்திருப்பீர்கள்

கேட்டுக் கேட்டு
வாழ்வதே எங்கள்
சந்ததியின் விதியாச்சு
தந்தை செல்வா காலம் முதல்
இதுவே எங்கள் கதியாச்சு

வார்த்தைகளில் மட்டும்
எல்லாம் பேசுகிறீர்
யுத்தச் சாட்டில் எதற்காய்
காலத்தை ஓட்டுகிறீர்

சோதரர்களே
ஒரு தேசத்திற்குள்
உரிமை பகிர்ந்து
ஒன்றாய் வாழக்கூட உங்களுக்கு
மனமில்லையா
மீண்டும் மீண்டும் எதற்காய்
மதவாதமும் இனவாதம்

தெரிவே இல்லாத உங்கள்
தெரிவுக் குழுவிற்கு
வருவதால் மட்டும்
தெருவில் நிற்கும் எம் வாழ்வு
விடிந்திடுமா?
மனமுண்டானால்
இடமுண்டு - இது
எங்கள் பழமொழிதான்
உங்களுக்கு மட்டுமேன்
இன்னும் புரியவில்லை.

சந்தர்ப்பங்களை தவறவிட்ட
வரலாறு நம்முன்
ரத்த ஆறாய் விரிந்து கிடக்கிறது.
மீண்டும் தேவையா அது
யாருக்கும் வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**



# அவன் தானா?

**தெ. ஈஸ்வரன்**

வவுனியாவில் ஒரு பெரிய பள்ளிக்கூடம். அதில் ஆயிரத்தியிருநூறு மாணவர்கள். மணி பதினொன்று இருக்கும். இரு மாணவர்கள் பள்ளிக்கூட அதிபரின் அறைக்குள் வேகமாக ஓடிவந்தார்கள். "சேர் பள்ளிக்கூடத்தை உடனடியாக மூடும்படி மோட்டார் சைக்கிளில் வந்து சொல்லிவிட்டு" போகிறார்கள் என்றார்கள். அதிபர் உமாவின் முகத்தில் பயம் தோன்றியது. அருகே இருந்த கணவர் "ஏன் பயப்படுகிறாய்? அவர்கள் பாடசாலையை மூடச்சொன்னால் மூடிவிடுவோம்" என்றார்.

"ஐயோ! அத்தான் நாம் மூடினால் இராணுவத்தினர் வந்து திறக்கச் சொல்லுவார்களே" என்ன செய்வதென்று அறியாது பதைத்தாள்.

செய்தி வேகமாகப் பரவியது. எல்லா மாணவர்களும் பாடசாலையை விட்டு வெளியேறினர். ஒரு சில ஆசிரியர்கள் "ஏன் பாடசாலையை மூடுகிறீர்கள்" என்று கேட்டுவிட்டுச் சென்றார்கள். பதினைந்து நிமிடங்களில் பாடசாலை வெறிச்சோடியது. அதிபரின் அறையில் உமாவும், கணவரும் பைல்களை எடுத்து வைத்துவிட்டு அறைக் கதவை மூடிவிட்டு வெளியேறினர்.

மறுநாள் பள்ளி வழமைக்குத் திரும்பியது. உமா அன்று O/L வகுப்பு மாணவர்களுக்கு மும்முரமாகக் கணித பாடம் நடத்திக் கொண்டிருந்தாள். அன்றைய புறச் சூழல்



காரணமாக அவள் முகத்திலே ஒரு பயந்த சாயல் இருந்தது. மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவள் தயங்கித் தயங்கியே பதில் சொன்னாள்.



உமாவின் வகுப்பிற்குள் ஒரு பையன் ஓடி வந்தான். "உங்களுக்கு அவசரமாக ஒரு தொலைபேசி வந்திருக்கிறதாம். பாடத்தை நிறுத்திவிட்டு உங்களை உடனே உங்க சேர் வரச்சொன்னாங்க" என்றான்.

உமாவின் முகம் வெளிறியது, கைகள் ஆடின. தடுமாற்றத்துடன் தனது அறையை நோக்கி நடந்தாள்.

அவளது கணவர் தொலைபேசியை கையில் பிடித்துக்கொண்டு "இந்தா பேசு உன்னிடம் தான் அவர்கள் பேச வேண்டுமாம் " என்றார். கடுமையான குரலில் ஒரு ஆண் பேசினான்.

"வங்கியிலே வைப்புக் கணக்கிலும், சாதாரணக் கணக்கிலும் நீங்கள் பல இலட்ச ரூபாவிற்கு மேல் வைத்திருக்கிறீர்கள். ஒரு பத்து இலட்சத்தைக் எங்களுக்கு கொடுத்துவிடுங்கள். எல்லோரும் தருகிறார்கள். கொடுக்காமல் தப்பித்துக் கொள்ள முயற்சிக்காதீர்கள். எங்களுக்கு இந்தப் பணம் வேண்டும். உடனடியாக தயார் செய்யுங்கள். திரும்பவும் பேசுவோம்" என்றான். உமாவிற்கு மயக்கம் வருவது போல் இருந்தது. அப்படியே அசந்து நாற்காலியில் பொத்தென்று விழுந்தாள்.

அரவிந்தன் மிகவும் பயந்து போய், "என்ன? என்ன?" என்று வினவினார். கணவருக்கு நிலைமையை விளக்கினாள்.

"சரி மற்றவைகளை வீடுபோய்ப் பேசுவோம்" என்று அவர் உமாவை எதுவும் பேசவிடவில்லை. அதிபரைப் பார்க்கச் சில மாணவர்களும், ஆசிரியர்களும் வெளியே காத்திருந்தார்கள்.

உமா வாளிப்பான உடற்கட்டுக் கொண்டவள். சிவந்த மேனி. கருமையான நீண்ட கேசம் அதைப் பின்னிப் போட்டிருந்தாள். ஒரு முறை பார்த்தவர்கள் மறுபடியும் திரும்பி உற்றுப் பார்க்க நினைப்பார்கள். அவளும், கணவரும் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள்.

வீட்டிலே இரவு உணவை முடித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்கள். அரவிந்தன் பேசத் தொடங்கினார். "உமா பணத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வங்கியிலே வைப்புக் கணக்கிலும், சாதாரணக் கணக்கிலும் நீங்கள் பல இலட்ச ரூபாவிற்கு மேல் வைத்திருக்கிறீர்கள். ஒரு பத்து இலட்சத்தைக் எங்களுக்கு கொடுத்துவிடுங்கள். எல்லோரும் தருகிறார்கள். கொடுக்காமல் தப்பித்துக் கொள்ள முயற்சிக்காதீர்கள். எங்களுக்கு இந்தப் பணம் வேண்டும். உடனடியாகதயார் செய்யுங்கள். திரும்பவும் பேசுவோம்" என்றான்.



கொடுத்துவிடுவோம் இல்லாவிடில் நம்மை இங்கு இருக்கவிடமாட்டார்கள். உயிர் ஆபத்தும் ஏற்படலாம். என்ன சரிதானே?" என்று மனைவியின் தோள்களை உலுப்பிக் கேட்டார்.

உமா கண்ணீர் வடியச் சொன்னாள். "அத்தான் என்னுடைய வாழ்க்கை உங்களுக்கு தெரியாததல்ல யாழ்ப்பாணத்திலிருந்து இந்திய இராணுவம் வந்த நேரங்களில் ஏற்பட்ட சொல்லொண்ணா பிரச்சனைகளின் காரணமாக, நாதியற்றுப் போய் நாங்கள் கண்டியில் எனது அக்காவுடன் குடியேறியதை நீங்கள் மறந்துவிட்டீர்களா? நாளை உயிர் வாழ்வோமா என்ற நிலையில் கண்டிக்குச் சென்றோம். அன்று இந்தக் கத்தோலிக்க நிறுவனம் தானே கைக்கொடுத்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு என்னை அனுப்பியது. அவர்கள் உதவிக்கரம் நீட்டாவிட்டால் என் நிலைமை என்னாயிருக்கும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

"அவர்கள் தந்த கல்விச் செல்வத்தினாலும், உங்கள் பாதுகாப்பிலும் தான் நான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்கே தெரியும். அந்த நிறுவனத்தின் பணத்தை எடுத்து யாருக்கும் கொடுக்க நான் சம்மதிக்கமாட்டேன். அவர்கள் தந்த இந்த வாழ்வுக்காக நான் ஏழேழு ஜென்மமும் கடப்பாடு உடையவளாக இருக்கிறேன். என்றோ ஒரு நாள் போக வேண்டிய உயிர் இன்று போனால் என்ன" என்று கூறித் தேம்பித்தேம்பி அழுதாள். அரவிந்தன் மலைத்துப் போய்ப் பேச்சற்று இருந்தார்.

மறுநாளும் வழமையைப் போல் பள்ளிக்குச் சென்றார்கள். அவர்கள் பயந்த மாதிரியே மறுபடியும் அதே தொலைபேசி அழைப்பு வந்தது. "எங்களுக்குப் பணம் வேண்டும். உங்களுக்கு உயிர் மேல் ஆசை இருக்கும் என்று நம்புகிறோம் உங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதை மறந்து விடாதீர்கள்" என்று மிரட்டியது அந்தக் குரல். தொலைபேசியை வைத்துவிட்டு அசந்து போய் நாற்காலியில் நாற்காலியில் விழுந்தாள்.

மறுநாள் இரவோடு இரவாகப் பதினான்கும், பதினெட்டுமான வயதுகளை யுடைய மகளையும், மகனையும் அழைத்துக் கொண்டு கொழும்பிற்கு பயணமானார் அரவிந்தன். மூன்று நாட்கள் கழித்து உமாவிடமிருந்து தொலைப்பேசி அழைப்பு வந்தது "அப்பா குழந்தைகள் போய் சேர்ந்து விட்டார்களா?" என்று கேட்டாள். "ஆம் சுதர்ஷன் இருவரையும் இறங்கியவுடன் விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்று விட்டான். அங்கு மிகவும் குளிராம். குழந்தைகள் பற்றிய கவலை வேண்டாம். நேற்றுக் காலை தொலைபேசி வந்த பிறகு தான் புறப்பட்டேன்" என்றார் அரவிந்தன்.

ஒரு வாரத்திற்கு அமைதி நிலவியது. எந்தவித தொலைபேசி அழைப்பும் வரவில்லை. இருந்தாலும் இருவரும் மனப்பயத்துடன் தான் தங்கள் கடமைகளை செய்துகொண்டிருந்தார்கள். உமாவின் கணவர் அரவிந்தன். அன்று காலை காரைப் பழுது பார்த்து, சர்விஸ் பண்ணுவதற்காக கொழும்பு எடுத்துச் சென்றார். அன்று இரவு அவர் உமாவிற்கு தொலைப்பேசியில் பேசினார். "உமா காரைப் பழுதுபார்த்து முடிக்க ஐந்து நாட்களாகுமென்று கம்பனியில் சொல்லுகிறார்கள். ஆகவே நான் காலை பஸ்சில் புறப்பட்டு வவுனியா வந்துவிடுகின்றேன்" என்றார் அரவிந்தன்.

இனம் தெரியாத ஒரு பயம். காலை பத்து மணியிருக்கும். உமா தனது கணவரின் கைப்பேசியில் தொடர்பு கொண்டாள். "அத்தான் எங்கிருக்கிறீர்கள்?" என்றாள். "உமா நான் மதவாச்சி தாண்டி வந்து கொண்டிருக்கிறேன், சீக்கிரம் வந்துவிடுவேன்" என்றார் அரவிந்தன்.

இவள் தொலைபேசியை வைத்த சில நிமிடங்களுக்குள் அந்த ஆபத்தான டெலிபோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. அதே குரல் "என்னம்மா எங்களுக்கு கொடுக்காமல் தப்பிவிடலாம் என்று எண்ணுகிறீர்களா? காரியங்கள் நடந்த பின் அழுதுகுளறுவதில் பயனில்லை. உங்களிடம் பலமுறை கேட்டாயிற்று. மயிலே மயிலே இறகுபோடு என்றால் அது நடக்கிற மாதிரியில்லை செய்யவேண்டியதைச் செய்தால் எல்லா இறகுகளும் கிடைத்துவிடும். கடைசியாக என்ன சொல்லுகிறீர்கள்" என்றது அந்த குரல்.

உமா அழுதாள், கெஞ்சினாள், தனது இயலாமையை எடுத்துச் சொன்னாள். படிக்கும் குழந்தைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கிவைத்த பணம் என்று மன்றாடினாள். கடைசியாக "இரக்கம் இல்லையா உங்களுக்கு" என்ற வார்த்தையைச் சொன்னவுடன் தொலைப்பேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டது. அவளுக்கு தலைச்சுற்றியது. யாரிடம் போய் சொல்லுவது? ஒன்றுமே புரியவில்லை. மயங்கிய நிலையில் அப்படியே மேசைமீது சாய்ந்தாள். இரவு விழித்திருந்த அசதியில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் கண்ணயர்ந்து விட்டாள்.

திடீர் என்று விழித்துக்கொண்ட அவளுக்கு அரவிந்தன் ஞாபகம் வந்தது. அவரது கைபேசி எண்ணைச் சுழற்றினாள். அரவிந்தனுடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. அரவிந்தனும் பேசவில்லை. மின்கலம் முடிந்துவிட்டது போலும் என்று தன்னை தேற்றிக்கொண்டாள். இன்னும் இரண்டு மணிநேரத்திற்குள் வந்துவிடுவார் தானே என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். மாலை ஆறு மணியாயிற்று. அரவிந்தன் இன்னும் திரும்பவில்லை. இரவு எட்டு மணியாயிற்று. கணவனைத்தேடிப் பல இடங்களில் சென்று அலைந்துவிட்டு கண்ணீருடன் முருகன் படத்தின் முன் அமர்ந்து அழுதாள். துடித்தாள்! காவல் நிலையத்திற்குச் சென்றாள். அங்கு ஒரே கூட்டம் "நாளை வாருங்கள்" என்று சொல்லிவிட்டார்கள். இராணுவமுகாமிற்குச் சென்று முறையிட அவளுக்குப் பயமாக இருந்தது. பலமுறை முயற்சித்தும் அரவிந்தன் கைப்பேசியுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

விடியவிடியத் தூங்காததினால் கண்கள் சிவந்து போயிருந்தன. காலையிலிருந்து தனக்குத் தெரிந்த எல்லா இடங்களுக்கும் சென்றாள். தெரிந்த அரசியல் தலைவர்களிடமும் சமூகத்தில் பெரியவர்களிடமும் போய் நடந்ததைச் சொன்னாள். எல்லோரிடமும் வந்த பதில் "ஐயோ! ஆகட்டும் பார்க்கலாம்". என்பதே.

ஒரு மாதமும் உருண்டோடிவிட்டது. எந்த விபரமும் தெரியவில்லை. யாரால் தேடிக் கொடுக்கமுடியும் என்று நம்பினாளோ அவர்கள் அவள் படுக்கையில் பங்கு கேட்டனர். கடவுள் மேல் நம்பிக்கையை இழந்தாள். பெரியவர்கள் என்று நினைத்து யாருக்கெல்லாம் வணக்கம் செலுத்தினாளோ அவர்கள் அந்தக் கையை பிடித்து இழுத்தனர்.

போர் முடிந்து விட்டது. இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. தன் கணவர் உயிருடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையை இழந்தாள். வவுனியாவில் நிலைமை வழமைக்குத் திரும்பியது. மனதை தேற்றிக்கொண்டு இனி வாழுகின்ற வாழ்க்கை முடிவதற்குள் ஆதரவற்ற கைம்பெண்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று திட நம்பிக்கை கொண்டாள்.

அகதிகள் முகாம்களுக்குச் சென்று உதவிக்கரம் நீட்டினாள். அங்கே குழந்தைகளின் அலறலும் , கைம்பெண்களின் ஆதரவற்ற நிலைமையும் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு காளியாக மாற்றியது.

கணவரைத்தேடி எல்லாத் தலைவர்களிடமும், உதவி நிறுவனங்களிடமும், அரசாங்கத்திடமும் கையேந்தினதால் அவளுக்கு எல்லா உதவி நிறுவனங்களும், அரசாங்க அமைச்சு நிறுவனங்களும் அத்துப்படியாகிவிட்டது. அகதிகளுக்கும் முக்கியமாக கைம்பெண்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளை செய்ய முற்பட்டாள்.

வெறுங்கையை வைத்து முழம் போடமுடியாது என்பதை உணர்ந்தாள். தன் மக்களுக்கு உதவி செய்யப் பணமும், பதவியும் தேவை என்ற கசப்பான உண்மை புரிந்தது.

அரச கட்சியின் அலுவலகத்திற்குச் சென்றாள். "தன்னை ஒரு சமூக சேவகியாக, தன் இழப்புக்களையெல்லாம் கூறி, தன் மக்களுக்குத் தொண்டாற்றக் கட்சியில் இணைந்து உழைக்கத் தயார்" என்று சம்மதம் தெரிவித்தாள். அவளது உண்மையான குறிக்கோள் சரியான இடத்திற்கு போய்ச் சேர்ந்தது.

அரச கட்சியின் வவுனியா ஒருங்கிணைப்பாளர் என்ற பதவியும் அவளுக்கு கைக்கூடிற்று. அதைக் கேடயமாக வைத்துக்கொண்டு அவதியுறும் குடும்பங்களை தேடியலைந்தாள். அவளது தன்னலமற்ற சேவையால் குழந்தைகளின் அழுகைச் சத்தம் குறைந்தது. பல வீடுகளில் அடுப்பெரிய ஆரம்பித்தது. இன்னும் குவிந்து கிடக்கின்ற கைம் பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டப் பலவித வேலை ஏற்பாடுகளைத் துணிந்து செய்தாள்.

ஒரு நாள் தன் மக்கள் இந்த கஷ்ட காலத்திலேயும் தங்களுக்குள் ஒற்றுமையின்றி அடிபடுவது உமாவிற்கு மனவேதனையைத் தந்தது. இவர்கள் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அந்த பகுதிக்குப் பொறுப்பான இராணுவ முகாமிற்குச் சென்றாள். அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பிரிகேடியரை ஓமந்தை இந்துக்கல்லூரி முகாமில் போய்ப் பார்க்கும்படி சொன்னார்கள். அவள் அங்கு சென்றாள்.

பிரிகேடியர் ஏதோ வேலையில் இருப்பதாகவும் "அறையினுள் இருங்கள் இப்போது வந்துவிடுவார்" என்று சொன்னார்கள். அவரது அறையினுள் அமர்ந்தாள். அந்த அறையின் ஜன்னல்கள் விரிந்து கிடந்தன. அவை முகாமை நன்றாகக் காட்டின. அந்த முகாமிலே அலைந்து கொண்டிருந்த பல ஊனமுற்ற போராளிகளை அவள் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவர்களில் பலரும் சிலையாக அறைக்குள் அமர்ந்திருந்த உமாவை உற்றுப் பார்த்துவிட்டு கடந்து சென்றார்கள்.

ஜன்னலுக்கு சற்றுத் தூரத்தே ஊன்றுகோலை வைத்து நின்று கொண்டிருந்த ஒருவனின் கண்களிலிருந்து மடை திறந்த வெள்ளமெனக் கண்ணீர் கொட்டியது. தன் நண்பனின் உதவியுடன் நொண்டி, நொண்டி ஜன்னலுக்கு அருகே நெருங்கினான். அவனது நண்பன் ஊனமுற்றவனின் தோள்களை உலுப்பி "நீ யார் என்று அவளுக்கு சொல்லிவிடு, சொல்லிவிடு" என்று கண்ணீருடன் தனது நண்பனின் தோள்களை உலுப்பினான்.

இவர்கள் ஜன்னலை நெருங்குவதைக் கண்ட ஒரு இராணுவ வீரன் "உங்கள் இடத்திற்குப் போங்கள்" என்று சத்தமிட்டான்.

அப்போழுது பிரிகேடியர் அறையினுள் வந்து உமாவை வரவேற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைகாலத்துப் பெண்ணியச் சிந்தனைகள்

● இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்,

நடைமுறை காலத்துப் பெண்ணியவாதச் சிந்தனைகளையும் கருத்துக்களையும் பற்றி விவாதிப்பதற்கு முதற்கண்ணாக, எப்படிப் பெண்ணியவாத சிந்தனைகள் உருவாகின. மாற்றமடைந்தன. பெண்ணியவாதக் கருத்துக் களாலும் செயற்பாடுகளாலும். பெண்களுக்கும் அவர்கள் சார்ந்திருந்த சமுதாயங்களுக்கும் கிடைத்த அரசியல்.பொருளாதார.சமுதாய மாற்றங்களைப் பற்றி ஆராய்வது இன்றியமையாத விடயமாகும்.

பெண்ணியச் செயற்பாடுகளின் அடிப்படைத் தத்துவம், 'பெணிணியவாதம் என்பது, ஒடுக்கப்பட்ட பெண்கள், தங்களைச்சுற்றியிருக்கும் ஒடுக்குமுறை களிலிருந்து விடுபடவும், அதேபோல், இன, சாதி, மத, சமய, பொருளாதார விடயங்களில் ஒடுக்கப்படும் ஒட்டுமொத்த மக்களுக்கும், ஆண்பெண் என்ற பேதமற்ற போராட்டங்களை முன்னெடுக்கும் முற்போக்கு சிந்தனையாகும்' . இந்தக் கோட்பாட்டில் 18, 19, 20ம் நூற்றாண்டுகளில்,உலகம் பரந்து நடந்த

இவற்றையும் விட இன்னும் சிலர் தங்கள் பாலியல் சமத்துவம் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்கள். இன்று உலகில் பல நாடுகளில் பெண்களைக்கடத்திப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் கொடிய நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடும் பெண்கள், அதற்கெதிரான சட்டதிட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று குரல் எழுப்புவார்கள். எனவே நடைமுறைகாலப் பெண்ணியவாதங்கள் என்பன பல தரப்பட்டவை, பல கோணங்களில் பரிசீலனை செய்யப்படவேண்டியவை என்பதை மனதில் வைத்துக்கொண்டு இந்தக் கட்டுரையைத் தொடரலாம் என நினைக்கிறேன்.

மனித நாகரிகம் தற்போதைய நிலைக்கு வளரமுதல் மனிதர்கள் கூட்டமாக வாழ்ந்தார்கள். அந்தக் கூட்டங்களுக்குப் பெண்கள் தலைவிகளாக வாழ்ந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையென்பதைப் பல அறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தின் பாதுகாப்பு, தலைவியின் ஆளுமையிலமைந்திருந்தது.

பல தரப்பட்ட போராட்டங்களிற் முற்போக்குக் கருத்துடைய ஆண்களுடன் பெண்கள் தங்களைப் பிணைத்துக்கொண்டார்கள்.

ஆனால்,தற்போதைய நடைமுறைக்கால பெண்ணிய வாதச் சிந்தனைகள் என்பவை மேற்குறிப்பிட்ட இறுக்கமான ஒரு குறிப்பிட்ட பரிமாணத் தத்துவங் களுக்குள் அமைக்கப்பட்டதல்ல. மேற்கு நாடுகளில் பெண்ணியவாதக்கருத்துக்கள் பற்றிப் பேசுபவர்களிடம் எதற்காகப்போராடுகிறீர்கள் என்று கேட்டால் அவர்களிடமிருந்து பலதரப்பட்ட அபிப்பிராயங்களை எதிர்பார்க்கலாம். ஒருசிலர் தாங்கள் வேலை செய்யும் இடங்களில் சமத்துவமாக நடத்தப் படவேண்டும், ஆண்களுக்குச்சமமான சம்பளம் தரவேண்டும் என்று சொல்வார்கள். வேறுசிலர், இன,மொழி, சமயப் பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடுவதாகச் சொல்வார்கள். அரசியலில் பெண்களுக்கு சமத்துவம் பேசுபவர்கள், பாராளுமன்றத்தில் பெண்களுக்கு மேலதிக இடம் தரவேண்டும் என்ற கோரிக்கையை வைப்பார்கள். உலகமயப்படுத்தலால் வளரும் நாடுகளில் பெண்களின் உழைப்பு மேற்கத்திய முதலாளித்துவத்தால் சுரண்டப் படுகிறது என்பதைக் கண்டிப்பவர்கள் அந்தவிடயங்கள் பற்றிய வாதங்களை முன்வைப்பார்கள். குடும்பத்துக்குள் நடக்கும் பெண்களுக்கெதிரான வன்முறையைக் கண்டித்துப்போராடுபவர்கள் அந்த விடயத்தில் கவனம் செலுத்துவார்கள்.



பெண்ணியவாதத்தின் மூலமே பெண்களின் வாழ்வாதாரப்போராட்டதின் அடிப்படை தொடங்கி யிருக்கலாம் என்று எடுத்துக் கொண்டால் அந்தக் கருத்துத் தவறாகாது என்பது பலரின் கருத்து. அதாவது, ஒரு பெண்ணின் போராட்டம் என்பது அந்தக்காலத்தின் தனது பாதுகாப்பிலும் தனது கூட்டத்தின் பாதுகாப்பிலும் தங்கியிருந்தது. பல்லாயிரம் ஆண்டுகள் காலமாகப் பல தரப்பட்ட சமூகங்களிலும் மிகவும் உயர்ந்த நிலையில் பெண்கள் கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கிறிஸ்தவ மதம் மேற்கத்தியரின் முக்கிய சமயமாக வரமுதல், இன்று இந்தியாவில் பெண்தெய்வ வழிபாடு முக்கியமாகவிருப்பதுபோல், மேற்கு நாடுகளில பல விதமான சமய வழிபாடுகளிலும் பெண்தெய்வங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன.

மனித நாகரித்தின் ஆரம்ப கால கட்டத்தில் பெண்கள் ஏன் முக்கிய இடம் பெற்றிருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்வதும், நாடுகள், நகரங்கள், மனித வாழ்க்கையின் வாழ்வாதரத்துக்கு இன்றியமையாத நதிகள் என்பன பெண்களின் பெயரில் அழைக்கப்பட்டன என்பதையும் மனித குல தெய்வ வழிபாடுகளின் மூலக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கருத்துக்களுடன் ஆராயவேண்டும். பல நாகரீகம் வளர்ந்த சமுதாயங்களில் (கிரேக்க, உரோம, இந்திய) காதற்தெய்வம்,போர்த் தெய்வம்,இயற்கையின் ஐம்பெரும் பூதங்கங்களில் முக்கியமானதான பூமாதாவும் பெண்களாகப் பூஜிக்கப்பட்டார்கள்.

நிலப் பிரபுத்துவ ஆளுமையால் ஏற்பட்ட பல விதமான சமுதாய, பொருளாதார, சமய,வர்க்க மாற்றங்களால், பெண்களுக்குச் சமுதாயத்திலிருந்த உயர்விடம் மாற்றமடைந்தது. நாகரீகம் வளர வளர, ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தை விட உயர்ந்து வாழ போர்களும் மற்ற நாடுகளை அடிமை கொள்தலும் தேவையாகவிருந்தன. ஆண்களின் வீரமும், அறிவும் சமுதாய மாற்றத்துக்கு முக்கியமாகக் கருதப்பட்டன. இந்த மாற்றத்தின்போது, பழைய கோட்பாடுகள் ஓரம் கட்டப்படுவதும் பதிய கோட்ப ணாடுகள் முன்னெடுக்கப் படுதலும் இன்றியமையாததாகவிருந்தன. பெண் தெய்வ வழிபாடு ஒரு பிற்போக்கு வாதமாகவும், ஆண்கடவுளைத் தவிர வேறோன்றும் இல்லை என்ற கோட்பாடும் முன்னெடுக்கப்பட்டன. கி.பி. 4ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதம் உரோம அரசஅதிகார மதமாக உருவெடுத்தபோது பெண்தெய்வ வழிபாடுகள் தடைசெய்யப்பட்டன.

அன்றைய கால நிலப் பிரபுத்துவ முறையிலான சமுதாயத்தில் பெண்கள், ஆண்களின் உடமையாகக் கருதப்பட்டார்கள்.நவீன கால, நடைமுறையுலகின் அரசியல் வரலாற்றை மாற்றிய ஐரோப்பிய சமூகத்திலும் இந்த வழிமுறை 18ம் -19ம் நூற்றாண்டுவரை தொடர்ந்தது. மேற்கு நாடுகளில் கைத்தொழிற் புரட்சியும் அமெரிக்காவில் பெரிய ஆலைகளில் ஏழைப்பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படும் வரையும் சமுதாயத்தில் பெண்களின் நிலையில் ஒரு பெரிய மாற்றமும் நடக்கவில்லை. இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெண்கள் மகாராணிகளாகவிருந்தாலும்,(முதலாவது எலிசபெத் மகாராணி, விக்டோரியா மகாராணி) சமுதாயத்தில் பெண்களின் நிலைமாறவில்லை.

பெண்ணிய சிந்தனைகளுக்கும் அதன் அடிப்படையில் நடந்த பல மாற்றங்களான, பெண்களின் கல்வி, அரசியல், பொருளாதார, சமுதாய மாற்றங் களுக்கும் மூலகாரணிகளாகவிருந்தவை, ஐரோப்பிய முற்போக்குவாதிகளால்,18ம் 19ம் நூற்றாண்டுகளில் (முக்கியமாக ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள்), முன்னெடுக்கப்பட்ட பலதரப்பட்ட அரசியல், சமுதாய, கலாசார மாற்றுக் கருத்துக்களும் அந்த நாடுகளில் நடந்த அரசியல் மாற்றங்களுமாகும்.

**முதலாவது பெண்ணியப் போராட்ட வரலாறு:**

சமுதாயத்தில் முற்போக்கு மாற்றுக் கருத்துக்கள் உருவாக,ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்க சக்திகளான அரசபரம்பரையினரின் ஆடம்பரமான வாழ்க்கை முறையும் அதற்காக அரசர்கள், சாதாரண மக்களின் மேற் திணித்த கொடுமையான வரிச்சுமைகளும் காரணிகளாகவிருந்தன. இவை, அரச பரம்பரையை எதிர்த்த போராட்டங்களாகும். முதலாவது, பெண்ணியப்போராட்டத்தைப் (1882-1920) புரட்சிகரப் பெண்கள் போராட்டம் என்று பலர் குறிப்பிடுவார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் பலம் மிகுந்த சக்திகளான அரச ஆதிக்கத்தின் பொருளாதாரச் சுரண்டலைத் தாங்க முடியாத மக்களால், அரசுக்கு எதிராக, அமெரிக்கா, பிரான்ஸ், இரஷ்யா போன்ற நாடுகளில் புரட்சிக் குரல்கள் எழுந்தன. பிரித்தானிய அரசு, தனது காலனி நாடான அமெரிக்காவிடம் அதிகப்படியான வரியைக் கட்டச்சொல்லி உத்தரவு போட்டதால் அமெரிக்காவில் விடுதலைப் போராட்டம் நடந்தது. (1777-1789). இப்போராட்டத்தில் பெண்களின் பங்கு அளப்பரியது. பிரித்தானியருக்கெதிரான போராட்டத்தில் தங்களையிணைத்துக்கொண்ட பெண்கள் பிரித்தானிய இறக்குமதிகளான துணிவகை போன்றவற்றைப் பகிஷ்கரித்தார்கள் (இந்திய சுதந்திப் போராட்டத்தில் நடந்ததுபோல்). தங்களுக்குத்தேவையான துணிகளைத் தாங்களே தயாரிக்க முன்வந்தார்கள். விடுதலைப்போராட்டத்தில் ஆண்களுடன் தங்களையிணைத்தார்கள். டேப்ரா சாம்சன் போன்ற பெண்கள் ஆண்களைப்போல் மாறுவேடம் போட்டு விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்தார்கள். அடக்குமுறை அரசான பிரித்தானியருடன் தொடர்பு வைத்திருந்த கணவரை விவாகரத்து செய்யும் சட்டம் நடைமுறைக்கு வர முன்னோடியாகவிருந்தார்கள்.

அமெரிக்கா சுதந்திரம் பெற்றபின் அமெரிக்க மக்கள் அத்தனைபேருக்கும் விடுதலை கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை முற்போக்குவாதிகளால் முன்வைக்கப்பட்டது. 'சோயுனா ட்ருத்' (1797-1883) என்ற கறுப்பு அடிமைப்பெண், (உண்மையான அடிமைப் பெயர்,இசபெல்லா) கறுப்பு மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார்.

1865ல் அடிமைகள் முறை அமெரிக்காவில் ஒழிக்கப்பட்டாலும்,கறுப்பு மக்களை அடிமையாக வைத்திருந்த, அமெரிக்காவின் தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான (பிரித்தானிய) தனவந்தர்கள் இதை ஆதரிக்கவில்லை. இதனாலும் வேறு பலகாரணங் களாலும் அமெரிக்காவில் அடிமைத் தனத்தை ஆதரிக்கும் தென்பகுதி அமெரிக்கருக்கும் முற்போக்கு வாதத்தை ஆதரித்த வடக்குப் பிராந்திய அமெரிக்கருக்கும் உள்நாட்டுப்போர் தொடர்ந்தது (1865-1881). இந்தப் போரில் அன்றைய காலத்து அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம் லிங்கனின் தலைமையில் போராடிய அமெரிக்கர்கள் வெற்றி பெற்றார்கள். அதைத் தொடந்து, கறுப்பு மக்களுக்குச் சமத்துவம் கிடைக்கப் பலர் பேராடினார்கள்.இவர்களின் போராட்டம்தான், பெண்களும் தங்கள் விடுதலைக்குப் போராட முன்னோடியாவிருந்ததாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. இந்தக்கால கட்டத்திற்தான், அமெரிக்காவிலிருந்த இனப்பாகுபாட்டுக்கொடுமையை மையமாக்கிய 'த அங்கிள் ரொபின் கபின்' என்ற நாவல் (1852) ஹரியட் பீச் ஸ்ரோவ் என்ற பெண்மணியால் எழுதப்பட்டது என்பதைப் பெண்ணிய ஆக்க பூர்வமான இலக்கியம்படிக்க முனைபவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். முதலாவது, தொழிலாளர் வேலை நிறுத்தம் 1857ல், தொழிற்சாலைகளில் பாதுகாப்பான நிலை கேட்டுப்போராடிய அமெரிக்கப்பெண்களால் தொடங்கப்பட்டது.

அமெரிக்காவில் இங்கிலாந்து மன்னரிடமிருந்து விடுதலை பெற மக்கள் போராடிய மாதிரிப் பிரான்சிலும் மக்களுக்கெதிரான பல கொடுமையான வரிகளைப் போட்ட மன்னரை எதிர்த்து மக்கள் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார்கள். பிரான்சிய நாட்டில்,பதினாறாம் லூயியும் அவர் மனைவியான மேரி அன்ரோனட்டும் தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்குப் பணம் தேடி சாதாரண மக்களிடம் அதிகப்படியான வரியைப்போட்டார்கள். இதைத்தாங்க முடியாத மக்கள் கொதித்தெழுந்தார்கள். அரசுக்கெதிராக மக்கள் போராடினார்கள் (1789-99). அமெரிக்க சுதந்திரப் போராட்டம் மாதிரியே பிரான்சிய சமுதாய மாற்றப் போராட்டத்திலும் பெண்களின் பங்கு முக்கிமானதாகும். போராட்டத்தில் பிரான்சிய பெண்கள் தங்களையிணைத்துப் போராடினார்கள். பெண்ணிய வாதத் தத்துவம் என்பது பெண்கள், 'தங்களுக்கெதிரான கொடுமைகளுக்கெதிராக மட்டுமல்ல, தாங்கள் சார்ந்திருக்கும் ஒட்டுமொத்த மக்களின் விடுதலைக்கும் போராடுவதாகும்' என்ற கோட்பாட்டில் வளர அடித்தளம் போட்டது.

பிரான்சிய பொருளாதார. சமுதாய மாற்றப் போராட்டத்தில் தங்களையிணைத்துக்கொண்ட பாரிஸ் நகரப் பெண்கள். 'விடுதலை. சமத்துவம்.ஆண்பெண் என்ற வேறுபாடற்ற சகோதரத்துவ ஒன்றிணைப்பு என்று கோஷம் போட்டுக்கொண்டு. மன்னரின் வாசஸ்த்தலமான வேர்ஸைல்ஸ் மாளிகையை முற்றுகையிட்டார்கள். இந்த முற்றுகை தொடங்கி ஒருசிலநாட்களில் பிரான்சிய அரசர் மக்களாற் தூக்கியெறியப்பட்டார். ஐரோப்பாவில் பல நாடுகளில் மக்களாட்சிவர பிரான்சிய புரட்சி முன்னோடியாக விருந்தது.

அமெரிக்காவின் உள்நாட்டு யுத்தம் (1881-85) நடந்த பின் பல சமுதாய, பொருளாதார மாற்றங்கள் நடந்தன. பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தொழிற்சாலைகளில் வேலை செய்த பலர் ஐரொப்பிய நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குப் பிழைப்புக்கு வந்த இத்தாலிய, யூத ஏழைப்பெண்களாவர். இவர்களுக்கு, எந்த விதமான தொழிலாளர்களுக்கான சலுகையும் கிடைக்கவில்லை.

அக்கால கட்டத்தில் இரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் தொழிற்சாலைகளில் வேலைசெய்த பல ஆண்களும் பெண்களும் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி னார்கள். 1905ம் ஆண்டு, இரஷ்ய மக்கள், அரச ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். இரஷ்யாவுக்கும் ஜேர்மனிக்கும் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பெரிய போர் நடந்து கொண்டிருந்தது. இரண்டுகோடி இரஷ்ய துருப்புக்கள் போர்க்களத்தில் மடிந்தார்கள். தொடரும் போரால், இரஷ்யாவில் பொருளாதாரப் பிரச்சினையும் வறுமையும் மக்களை வாட்டின. அமெரிக்கப் புரட்சி, பிரான்சியப் புரட்சி மாதிரியே, இரஷ்ய புரட்சியிலும் பல்லாயிரக்கான பெண்கள் பங்கெடுத்தார்கள்.

இதே கால கட்டத்தில், தென் அமெரிக்காவில், வெள்ளையினக்கொடுமைக்கெதிராகக் காந்தியடிகள் போராடினார் என்பதையும், அவருக்கு முன்னோடியா யிருந்தவர், தென்ஆபிரிக்கத் தேயிலைத் தோட்டப் போராட்டத்தில் சத்தியாக்கிரகப்போராட்டம் நடத்திய தமிழ்ப் பெண்மணி வள்ளியம்மையார் என்பதையும் மறக்கக்கூடாது. ஆண்கள் எழுதும் சரித்திரத்தில் பெண்களின் பெயர்கள் வேண்டுமென்றே தவிர்க்கப் படுகிறது என்பதை நினைவில் வைக்கவும்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பகால கட்டத்தில் (1910ல்) பெண்களுக்கான வாக்குரிமைக்கான போராட்டமும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் முன்னெடுக்கப் பட்டன. இந்தப் போராட்டங்கள் மத்தியதர வர்க்கத்துப் பெண்களால் முன்னெடுக்கப்பட்டது. 1909ம் ஆண்டு, முதலாவது, அகில உலக பெண்கள் தினம் அமெரிக்காவில் கொண்டாடப்பட்டது.

அமெரிக்காவில் பல தொழிற்சாலைகள் உருவாகிக்கொண்டிருந்தன. வேலை செய்யும் பெண்களின் நிலையில் எந்த விதமான முன்னேற்றமும் கிடைக்கவில்லை. 1911ம் ஆண்டு அமெரிக்க தொழிற்சாலையில் நடந்த பெரும் தீயினால் 140 பெண்கள் இறந்தார்கள்.இதைத்தொடர்ந்து பெண்கள் நடத்திய போராட்டத்தால், பல தொழிற் பாதுகாப்புச்சட்டங்கள் அமுலுக்கு வந்தன. உலகின் பல பகுதிகளிலும், முற்போக்கு சிந்தனையாளர்களான கார்ல் மார்க்ஸ்(1818-1883), ப்ரடறிக் ஏங்கல்ஸ் போன்றோரின் அரசியல், பொருளாதாரம் பற்றிய கருத்துக்கள்,சாதாரண மக்களின் சிந்தனையில் பலதரப்பட்ட மாற்றங்கள் உண்டாக்கும் காரணிகளாக அமைந்தன.

1914ம் ஆண்டு, முதலாவது உலக யுத்தம் வெடித்தது. உலகின் பல பாகங்களிலும் கோடிக்கணக்கானவர்கள் இறந்தார்கள்.அமெரிக்காவில் பல்லாயிரம் பெண்கள் போருக்கெதிராகக் குரல் கொடுத்துப் போராடினார்கள். றோசா லக்ஸம் பேர்க் (1871-1919) போன்ற முற்போக்குவாதிகள், ஜேர்மனியில் உள்ள முற்போக்கு வாதிகளுடன் இணைந்து போருக்கு எதிராகக் குரல் கொடுத்ததால் ஜேர்மனிய அரச தரப்பால் கொலை (1919) செய்யப்படடர்.

1917ம் ஆண்டு ஆயிரக்கான பெண்கள் செயினட் பீட்டர்ஸ்பேர்க் நகரின் அரச மாளிகைக்கு முன்,

'நாங்கள் வாழ்வதற்கு அமைதியும் சாப்பாட்டுக்குப் பாணும் தேவை' என்ற கோஷத்துடன் போராட்டம் நடத்தினார்கள். பிரான்சில் நடந்தது போல், இந்தப் போராட்டம் தொடங்கிச் சில நாட்களில் இரஷ்ய மன்னர் ஷார் தூக்கியெறிப்பட்டார்.அதைத் தொடர்ந்து 1917ம் ஆண்டில் இரஷ்யாவில் பொதுவுடமைக் கட்சி ஆட்சிக்கு வந்தது. அதன் பிரதி பலிப்பால் பல நாடுகளில், அரசியல ரீதியான பல மாற்றங்கள் நடந்தன.

மேற்கு நாடுகளில்,எமிலி பாங்கேஸ்ட்,சில்வியா பாங்கேஸ்ட் போன்றோரின் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்ற போராட்டத்தால் 1920 ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. முதலாம் உலக யுத்தத்தில் பல்லாயிரக்கான ஆண்கள் இறந்ததாலம், போர்க்காலத்தில் வெளியிற்சென்று வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்ததாலும் பெண்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

இக்கால கட்டத்தில் இந்தியாவில் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் கோடிக்கணக்கான பெண்கள் ஈடுபட்டார்கள். அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தில் மிகவும் ஈடுபாட்டுடன் தன்னை இணைத்துக்கொண்ட, அன்னிபெசன்ட் அம்மையார், இந்தியாவுக்கு வந்ததும், காங்கிரஸ் கட்சியில் முக்கியத்துவம் வகித்ததும் இக்கால கட்டமே. இந்திய விடுதலை நடந்த கால கட்டத்தில் (1920-47), இலங்கையிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவராகவிருந்த நடேச அய்யரும், அவரின் மனைவியான மீனாட்சியம்மாளும் செய்த பணிகளை இலங்கைப் பெண்கள் தெரிந்து கொள்ளல் நன்று.பெண்களின், முதலாவது, போராட்டகாலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கோரிக்கைகளாகவிருந்தவையிற் பெரும்பானமையானவையாயிருந்தவை, பெண்களுக்கான வாக்குரிமை, வேலைகளில் சமத்துவமான ஊதியம்,மனித உரிமை, இனபேதமற்ற மனித உரிமை போன்றவையாகும்.

ஒரு நீண்ட காலப்போராட்டத்தின் மூலகாரணிகள் பெண்ணியவாதிகளால் விதைக்கப்பட, முற்போக்கு ஆண்களும் ஒன்றிணைந்து போராடினார்கள் என்பதை மறக்கக் கூடாது. அமெரிக்காவின் இனக்கொடுமைக்கெதிராக,வெள்ளையினப் பெண்மணியான 'ரப்பர் லீ என்பவர் எழுதிய 'த கில்லிங் ஒவ் மொாங்கிங்பேர்ட்' என்ற நாவல் (1961) அமெரிக்க முற்போக்குவாதிகளை இனப் பாகுபாட்டுக் கொடுமைக்காகக் குரல் கொடுக்கத் தூண்டியது.

1950ம் ஆண்டுகளில் அமெரிக்காவில், இனக்கொடுமைக்கெதிரான போராட்டம் வெடித்தது. இதில் றோசா பார்க் என்ற பெண்மணியின் பங்கைப் பெண்ணியவாதிகள் தெரிந்திருப்பது முக்கியம். இதைத்தொடர்ந்து நடந்த போராட்டம் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் பேரலையாகி அமெரிக்காவை உலுக்கியது. இன்று, அமெரிக்காவில் ஒரு கறுப்பு ஜனாதிபதி வருவதற்கு றோசாபார்க் போன்றோரின் போராட்டமே முதற்கண்ணாக இருந்தது. அத்துடன், கறுப்பு இனப் பெண்ணிய எழுத்தாளர்களான ரோனி மோரிசன்,அலிஸ் வால்க்கர் போன்றோரின் எழுத்துக்கள் ,அமெரிக்காவில் நடக்கும் இனப் பாகுபாடுகளை மையப் படுத்திப் பல படைப்புக்களைப் படைத்தார்கள்.

**இரண்டாம் அலையாகக் கிளம்பிய பெண்ணிய வாதச்சிந்தனைகள்**

19ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில், ஐரோப்பிய நாடுகளால் அடிமைகளாக வைத்திருந்த நாடுகளின் எழுந்த சுதந்திர உணர்வுகள்,அமெரிக்க உள்நாட்டுப்போரும் அதைத் தொடர்ந்த மிக பெரிய அளவில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பிரச்சினைகள், இரஷ்யாவில் மன்னருக்கு எதிரான போராட்டம்,முதலாம் உலக யுத்தமும், அதைத்தொடர்ந்து மேற்கு நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரப்பிரச்சினையும் மார்க்ஸியம் மேற்குலகில் வளரும் பல காரணிகளில் ஒன்றாகவிருந்தது.

இங்கிலாந்தின் தொழிற்கட்சி 1900 ஆரம்பித்தாலும் 1924 வரைக்கும் அவர்களால் பாராளுமன்றத்தைக் கைப்பற்ற முடியவில்லை. 1929ம் ஆண்டில் முதலாவது பெண் மந்திரியாகத் தொழிற்கட்சியைச்சேர்ந்த மார்க்கிரட் பொண்ட்பீல்ட் தெரிவு செய்யப் பட்டார். 1922ல் அமெரிக்காவில் வால் ஸ்ரீட் வீழ்ச்சியால் மேற்கு நாடுகள் மிகவும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன. 1939ல் இரண்டாம் உலகப்போர் வெடித்தது. இங்கிலாந்தில் தொழிற்கட்சியினர் இங்கிலாந்துக் காலனித்துவ நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுக்கச் சொல்லி வாதாடினார்கள். முன்னேற்றக்கருத்துள்ள பெண்கள் பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்து பல விடயங்களையுணர்ந்தார்கள்.பெண்கள் விடுதலைக்கும், புதிய சமூகப் பார்வையுண்டாகவும் காரணிகளாகவிருந்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தம் வெடித்ததால் (1939-1945), பெண்களின் வாழ்க்கையில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த மனித சரித்திரத்தில் இதுவரை கண்டிராத மாற்றங்களைக் கொண்டுவந்தன. 1945ல் ஐக்கிய நாடுகள் சபையில் பெண்களின் சமத்துவத்தையும் நன்மைகளையும் முன்வைத்த விஞ்ஞாபனம் கொண்டுவரப்பட்டது. இந்தியாவில், சரோஜினி நாயுடு,விஜயலகூஷ்மி பண்டிட் போன்ற பெண்கள் உலகம் தெரிந்த பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள் (ஐக்கிய நாடுகள் சபை). ஐரோப்பிய வெள்ளையரின் அடிமை நாடுகளாகவிருந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றன. இக்காலகட்டத்தில் பிரான்சியரின் அடிமை நாடாகவிருந்த அல்ஜீரிய நாட்டு விடுதலைக்காகப் பிரான்சியப் பெண்எழுத்தாளரான சிமோன் டி பூவா பல படைப்புக்களை எழுதினார். பெண்ணியவாதத்தின 'பைபிள்' என்று சொல்லப்படும் இவருடைய 'த செக்கண்ட் செக்ஸ்' என்ற புத்தகம் வெளிவந்து பல சிந்தனையாளர்களிடம் வரவேற்பைப்பெற்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின்பின் ஒட்டுமொத்த சமுதாயத்திலும் பலதரப்பட்ட விழிப்புணர்ச்சிகளும் சிந்தனைகளும் பெருகியதுபோல் வியாபாரத் துறையிலும் இலாப வேட்கைக்கான போட்டி தொடங்கியது. பெண்களின், ஆசைகள் அத்துடன் தங்கள் உடம்பின் கவர்ச்சியைக் காட்டவேண்டும் என்ற ஆசை, சினிமா, விளம்பரம், அத்துடன் ஊடக வாதிகளாலும், 'பெண்களின் உடல்' வியாபாரத்தின் அடிப்படை அம்சத்தில் ஒன்றாகப் புதிய பரிமாணம் எடுத்தது.

1888ம் (பெல்ஜியத்தில்) ஆண்டிலிருந்து பெண்களின் உடலழகைக் காட்டப் பல நாடுகளிலும் பல தரப்பட்ட அழகு ராணிப்போட்டிகள் நடந்தாலும் உலக அழகு ராணிப்போட்டி 1951ல் லண்டனிற் தொடங்கினார்கள். 'ஆண்களின் இச்சைகளைப் பிரதிபடுத்தியும், ஆடம்பரப் பொருட்களை விற்பதற்காகவும் பெண்ணுடலை வியாபாரமாக்கும் ' அழகுராணிப்போட்டியைப் பெண்ணியவாதிகள் எதிர்த்தார்கள். ஆனாலும், பெருவாரியான ஆடம்பரப் பொருட்கள, 'மேக் அப்' பொருட்கள் மட்டுமன்றி சுகாதாரத்தைப் பாதிக்கும் சிகரெட் வரை பெண்களைக் குறிவைத்துத் தயாரிக்கப்பட்டன. பொருளாதார சுதந்திரமுள்ள பெண்களால் இப்பொருட்கள் பெருவாரியாக விற்பனையாகின. பெண்களின் மத்தியில் உண்டாகும், 'தனித்துவ மேப்பாட்டு' உணர்வைச் சரியாகக் கண்டு கொண்ட 'வியாபாரத்தில் ஆதாயம் மட்டும்' என்ற கொள்கைகளுடைய ஆண்வர்க்கம், பெண்களைக் கவரும் அழகு சாதனங்கள் மட்டுமன்றி வேறு கவர்ச்சித் தளங்களிலும் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்கள்.

ஒட்டு மொத்த மேற்கத்திய சமுதாயப்பார்வையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பலநாடுகளிலும் பல தரப்பட்ட குடியேற்றங்கள் நடந்தன. ஐரோப்பிய காலனித்துவ நாடுகளிலிருந்து பலர் மேற்கு நாடுகளுக்குக் குடியேறினர். அவர்களுடன் அவர்களின் கலைகலாசாரம், மதம், உணவு வகைகள் போன்றவையும் கொண்டு வரப்பட்டன. கறுப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் இசையென ஒருகாலத்தில் தடைசெய்யப் பட்டிருந்த 'ஜாஸ் இசை' வெள்ளையர்களின் கருத்தைக்கவர்ந்தது. அதேபோல், 'உயர்ந்த கலைகள் என்று மேற்கத்திய நாடுகளால் வளர்க்கப்பட்ட, 'பால்றூம் நடனம், ஒபரா இசைநாடகங்கள்' என்பனவற்றிற்கு அப்பால் சாதாரண மக்களின் கலைகள் வளரத் தொடங்கின. அமெரிக்காவில் எல்விஸ் ப்ரஸ்லியும் (1950,றொக் அன்ட் ரோல்), இங்கிலாந்தில் 'பீட்டில்'பாடகர் குழுவும் புதிய முறையான 'ஜனரஞ்சக'மான பாடல்களைக்கொண்டுவந்தார்கள். இவை உலக மயமான கலைப் புரட்சியுணர்வைக் கொண்டுவந்தன. பழைய ஆங்கிலேயக் கலைகளான 'பால் றூம்' நடனங்களை 60ம்ஆண்டு பொப்பிசைக்கான நடனங்களும் 'சால்சா' போன்ற தென் அமரிக்க நடனங்களும் வெற்றிகொண்டன. மேற்கு வர்க்கத்தால் வளர்க்கப்பட்ட கலைகள் மாற்ற மடைந்ததுபோல், இதுவரை காலமும் சமுதாயக் கோட்பாடுகளுக்குள் வாழ்ந்து பழகிய சமுதாயம், முக்கியமாகப பெண்களின் சிந்தனையிலும் பல மாற்றங்கள் நடந்தன.

1960ல் உலகில் முதலாவது பெண்பிரதமரை இலங்கை உருவாக்கியது. அதைத்தொடர்ந்து, இந்தியாவிலும் இந்திரா காந்தி பிரதமராக வந்தார். பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில் மட்டுமன்றி ,உலகம் பரந்த விதத்தில் பெண்களின் கல்வி, வேலைவாய்ப்புக்களில் மிக முக்கிய முன்னேற்றங்கள் நடந்தன.மேற்கு நாடுகளில் இரண்டாம் உலக யுத்தத்தின்போது, பெரும்பாலான ஆண்கள் போருக்குப்போனதால் நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியமான வேலைகள் பெண்களால் மேற்கொள்ளப்படன. அதைத்தொடர்ந்து பெண்கள் வீட்டைவிட்டு வெளியேவந்து வேலை செய்து உழைப்பதால் கிடைக்கும் நன்மையை உணர்ந் தார்கள். தங்கள் எதிர்காலத்தின் பொருளாதார பாதுகாப்புக்காகத் திருமணம் செய்து மாரடிக்கத் தேவையில்லை என்பதையுணர்ந்தார்கள்.

பெண்களுக்குக் கிடைத்த,பொருளாதார, சமுதாய சுதந்திரத்தால் அவர்களின் பெண்ணியவாதச் சிந்தனைகளில் மாற்றமும் கோரிக்கைகளில் பல மாற்றங்களும், 1960-70ம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்டன. பெண்ணியவாதம் என்பது ஆண்களுக்கு எந்த விதத்திலும் கட்டுப்படாதது என்று சொல்லிய ஒரு பெண்ணியவாதக்கூட்டம் 'ஓரினச் சேர்க்கைக்கு' 1970 ஆண்டுகளில் முன்னிடம் கொடுத்தது.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் அளவிட முடியாத சமுதாய, பொருளாதார,சிந்தனை மாற்றங்கள் நடந்தன. அரசியலில்,1950ம் ஆண்டுகளில், உலகின் இரண்டு மாபெரும் அரசியற் சிந்தனைகளான முதலாளித்துவமும் (மேற்கு நாடுகள்) தொழிலா ளித்துமும் ( இரஷ்யாவும் அவர்களுடன் சேர்ந்த நாடுகளும்) தங்களின் வல்லமையைக்காட்டத் தங்கள் பனிப்போரைத் தொடங்கின. ஆயுதப்போட்டி, ஆகாயத்தை (இரஷ்யா 'லைகா' என்ற நாயை விண்வெளிக்கு அனுப்பியது) ஆளும் போட்டிகள் வலுத்தன. அமெரிக்கா கொரியாவிலும், பிரித்தானியர் சூயஸ் வாய்க்காலிலும்(1956) இரஷ்யர் ஹங்கோ ரியிலும் தங்கள் படைகளைக் குவித்தார்கள். மேற்கத்திய நாடுகள் சிறுநாடுகளைத் தங்களின் அடிமைகளாக வைத்திருக்கப் புதிய உத்திகளை முன்வைத்தன.

அதிகாரத்திலிருக்கும் மேற்கத்திய ஆண்வர்க்கம் தங்கள் அரசியல் வலிமையைக்காட்டச் சிறு நாடுகளான வியட்னாம் போன்ற நாடுகளைக் கொடுமைசெய்கிறார்கள் என்பதை முன்வைத்து முற்போக்கு பெண்ணியவாதிகள், வியட்நாம் போரை எதிர்த்துப்போராடினார்கள். அமெரிக்க நடிகையான,ஜேன் பொண்டா என்பவர், 'கம்யூனிச பேபி' என்று அமெரிக்கா முதலாளித்துவத்தால் வையப்பட்டார்.

மேற்கு நாடுகளில் பெண்ணியவாதம், பேரலையாக உருவெடுத்தது. பெண்கள் விரும்பினால், தங்களுக்கு விரும்பாத கர்ப்பத்தைக் கலைக்கச் சட்டம் கொண்டுவரப் போராடினார்கள். விவாகரத்துச்சட்டத்தில், குழந்தைகள் தகப்பனின் பாதுகாப்பிற் கொடுப்பதாக இருந்த சட்டத்தைத் தாய்களுக்குச் சார்பாக மாற்றினார்கள். குடும்பத்தில், கணவர்கள் மனைவியை அடிப்பது கிரிமினல் குற்றம் என்ற சட்டம் கொண்டுவரப் போராடினார்கள். திருமணம் செய்யாமல் ஒன்றாக வாழ்வதையும், ஒன்றுக்கு மேல் பல ஆண் சினேகிதர்களை வைத்திருப்பதையும், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதையும், பெண்களின் 'பாலியல் சுதந்திரத்தின்'அடையாளம் என்று காட்டினார்கள். பெண்களுக்குப் பெருமளவு பொருளாதார சுதந்திரம் கிடைத்ததால், 1960-70ம் ஆண்டுகளில் பெண்ணிய வாதப்போராட்டங்கள் இப்படிப் பல புதிய கோரிக்கைககளை முன்வைத்தன. 1977ல் ஒக்ஸ்போர்ட பல்கலைக் கழகத்தில் தங்கள் முதலாவது பெண்கள் விடுதலை 'மகாநாட்டை நடத்தினார்கள்.

இவர்கள் முதலாவது பெண்ணியவாதப் பேரலையின் கோரிக்கைகளையும் மீறி, குடும்ப அமைப்பில் பாலியல் சுதந்திரத்தை, தொழில் செய்யும் இடங்களில் சம்பள சமத்துவத்தை, சமுதாய ரீதியாகப்போருக்கு எதிரான கோரிக்கைகளை முன்னெடுத்தார்கள். இந்தக்காலகட்டத்தில், பெண்ணியவாதிகள், தங்களை, லெஸ்பியன்ஸ் என்றும்,அரசியல் பெண்ணிய வாதிகள், அதிலும் விசேடமாக சோசலிஸ்ட் பெண்ணியவாதிகள் என்றும் அடையாளப் படுத்திக்கொண்டார்கள்.

வளரும் நாடுகளான இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பெண்ணியம் பற்றிய பல கருத்துக்களும், சரியானமுறையில் முன்னெடுக்கப்படாமையால் பெரும்பாலான மக்கள் பெண்ணியம் பற்றிப் பேசுபவர்களைப் பற்றிப் புரிந்துகொள்ளாதது, ஒடுக்கப்பட்டவர்களுக்கான போராட்டத்தை ஆண், பெண் என்ற பேதமின்றி முன்னெடுக்கச் சிரமமாகவிருக்கிறது. இதற்குக் காரணம், பெண்ணியத்தின் இரண்டாம்பேரலைக் காலம் என்று கருதப்படும் 1960-70ம் ஆண்டுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இடங்களில் ஆண்களின் கைகளில் பேராயுதமாகவிருந்த ஜனரஞ்சகப் பத்திரிகைகள் பெண்ணியத்தைத் திரிபு படுத்தி வெளியிட்ட கருத்துக்கள் முக்கிய காரணிகளாகின. பெண்ணியவாதத்தின் பன்முகத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளாத அல்லது தெரிந்திருந்தாலும் அதைப்பற்றிய உண்மைகளை மறைப்பதில் ஆர்வம் கொண்ட ஆண் ஊடகவாதிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்திய பெண்ணிய சிந்தனையைப் பற்றி திரிபு படுத்தி எழுதினார்கள். வளரும் நாடுகளில் பெண்ணிய சிந்தனைகள் பரவி தங்களை ஒடுக்கும் சக்திகளுக்குப்போராடாமலிருக்க இப்படியான பிரசாரங்கள் விதைக்கப்பட்டன.

**மூன்றாவது காலகட்ட (நடைமுறைகால) பெண்ணியச் சிந்தனைகள்:**

இதன் ஆரம்பம், 1980ம் ஆண்டுகள் என்று சொல்லலாம்.1960-70ம் ஆண்டுகளில் உண்டான பெருவாரியான போராட்டங்களால் பெண்களின் கல்வி, பொருளாதார நிலை மாறியது. அரசியலிலும் பொதுவாழ்க்கையிலும் முன்னேற்றம் கிடைத்தது. அதேபோல, உலக அரசியலிலும் பெரிய மாற்றங்கள் நடந்தன. சினிமா நடிகனான றொனால்ட் றேகன் அமெரிக்காவின் ஜனாதிபதியானார் (1981). இங்கிலாந்தின் அரசியற் சரித்திரத்தில், 1979ம் ஆண்டு, மார்க்கிரட் தட்சர் பிரித்தானிய முதற் பெண்பிரதமராக (3.5 1979) வந்தார். முதலாளித்துவத்தில் மிகவும் ஈடுபாடுள்ள தட்சர், **'சமுதாயம் ஒன்றும் கிடையாது, தனிமனித தேவைகள்தான் முக்கியம்'** என்ற தனது சிந்தாந்தத்தைப் பரப்பினார். **'தனிமனிதப் பொருளாதார வெற்றிதான் ஒருமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் திருப்தியைத் தரும் மூலகாரணியாகும்'** என்பதை வலியுறுத்தினார். அக்கால கட்டத்தில், அமெரிக்கரின் பிடியிலிருந்த ஈரானில் இஸ்லாமியப்புரட்சி (1979) ஏற்பட்டது. அவ்வருடம், இரஷ்யப்படைகள் ஆப்கானிஸ்தானிற் புகுந்தன (மார்கழி 1979).

இப்படியான பல காரணிகளால் பொதுவுடமை கருத்தை உடைக்கவும்,இரண்டாம் உலக யுத்தத்தின்பின் தளர்ந்திருந்த பிரித்தானிய ஆளுமையின் முக்கியத்துவத்தை, முன்னெடுக்கவும் தட்சர் பல செயற்பாடுகளைச் செய்தார். தென் அமெரிக்காவுக்கு அண்மையிலுள்ள சிறுதீவான பால்க்லண்ட் (மல்வீனா) என்ற தீவு, ஆர்ஜென்டினாவுக்குச் சொந்தமென்று, அர்ஜென்டியனர்களால் ஆளுமைகொள்ள முயன்றபோது, மார்க்கிரட் தட்சர் மிகப்பிரமாண்டமான பிரித்தானியபடையை பால்க்லண்ட் தீவுக்கு அனுப்பி வெற்றிகொண்டார். இதுபற்றிய கேள்வியைப் பிரித்தானியரின் சினேகிதரும் 1981ல் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவருமான, றொனால்ட் றேகன், கேள்வி எழுப்பியபோது, 'நீங்கள் மற்ற நாடுகளுக்குச் சென்றபோது பிரித்தானியாவின் அனுமதியுடனா சென்றீர்கள்' என்று அதிகாரத்துடன் கேட்டு வாயடைத்தார்.

அதே மாதிரி அதிகாரத்துடன் பிரித்தானிய தொழிலாளிவர்க்கத்தின் மிகப் பெரிய ஆயுதமான சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை (1984-85) மிகக்கொடுமையாக தட்சர் அரசு ஒடுக்கியதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை யிழந்தார்கள். பல்லாயிரக்கணக்கான பெண்கள் வீதியில் இறங்கிப் போராடியும் ஒருபலனும் கிடைக்கவில்லை. இதே காலகட்டத்தில், உலக அரசியலிலும் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்தார் . அமெரிக்காவும் பிரித்தானியாவும் தங்கள் அரசியல் தந்திரங்களால் பொதுவுடமைக் கருத்தின் தாயகமான சோவியத் இரஷ்யாவைச் சின்னாபின்னமாக்கினார்கள். 1989ல் மேற்கு ஜேர்மனியையும் கிழக்கு ஜேர்மனியையும் சேர்த்து வைத்திருந்த பிரமாண்டமான சுவர் உடைக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானிலிருந்து இரஷ்யப் படைகள் திரும்பிச் சென்றார்கள்(1988-89). பொதுவுடமை என்ற அரசியற் சிந்தாந்தத்தில் மக்களைப் பிரித்து வைத்திருந்த-சிலவிடயங்களில் சேர்த்து வைத்திருந்த கோட்பாடுகள் உடைந்தன.

வளரும் நாடுகளில், மத அடிப்படைத் தீவிரவாதம் வளரத் தொடங்கியது. பங்களாதேஷ் நாட்டில் நடந்த கலவரத்தில் முஸ்லிம் தீவிரவாதிகளால் இந்து மக்கள் பட்ட துயரை வைத்து பங்களாதேஷ் பெண்ணிய எழுத்தாளர் தஸ்லிமா நஷ்ரின் எழுதிய 'வெட்கம்' என்ற நாவலையொட்டி அவர் நாட்டை விட்டோடும்படியான நிலையைத் தீரவாதிகள் உண்டாக்கினார்கள். இந்தியாவில் சீக்கிய பணியாளனால் இந்திப் பிரதமர் கொலை செய்யப்பட்டதைத் (1984) தொடர்ந்து, டெல்லியில் சீக்கிய மக்கள் தாக்கப் பட்டதை வைத்துத் தமிழ்ப் பெண்ணிய எழுத்தாளரான வாசந்தி,தீவிரவாத இந்துக்களின் செயலை எதிர்த்து ஒரு நாவலை எழுதினார்.

அதேநேரத்தில் பேச்சு சுதந்திரத்தை அடிப்படையாக வைத்து எதையும் எழுதலாம், பாடலாம் என்ற சிந்தனை மேற்கு நாடுகளில் பெரிதளவில் முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானிய எழுத்தாளரான சல்மான் ருஷ்டி எழுதிய 'சாா்ட்டானிக் வேர்சஸ்' என்ற நாவல் (1988)பல இஸ்லாமியர்களைக் கோபத்தில் தள்ளியது. ருஷ்டி, தன் எழுத்து மூலம் இஸ்லாத்தை அவமானப் படுத்தினார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்த ஈரானிய மதத் தலைவர்,ஆயத்தோலா ஹுமேனி 1989ல், ருஷ்டிக்கெதிராக மரண தண்டனை விதித்தார். மேற்குலகப்பெண்ணிய வாதிகள் சுதந்திரமான பேச்சுரிமையை ஆதரித்து ருஷ்டிக்குச் சார்பாகச் சில போராட்டங்களை நடத்தினார்கள்.

உலக அரசியலில் ஒரு புதிய சக்தி உருவாகியது.பிரித்தானியா, அமரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தங்கள் ஆளுமையைக்காட்ட கிழக்கு ஐரோப்பாவைத் துண்டாடியது. 1990-2000ம் ஆண்டுகளில் ஐரோப்பா முழுக்கப் பல மாற்றங்கள் நடந்தன. பல புதிய நாடுகள் மேற்கத்திய நாடுகளால் உருவாக்கப் பட்டன.

இஸ்லாமிய நாடுகளில் மனித உரிமை பற்றியும் முக்கியமாகப் பெண்கள் ஒடுக்கப்படும் விடயமாகவும் பல கேள்விகளை மேற்கு நாடுகள் முன்வைத்தன.

2001ம் ஆண்டு, முஸ்லிம் பயங்கரவாதிகளால் அமெரிக்காவின் இரட்டைக்கோபுரம் தாக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து 2003ல் ஈராக் நாடு தாக்கப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டரைக்கோடி மக்கள் போருக்கு எதிராகப் பிரித்தானிய வீதிகளில் ஊர்வலம் செய்தார்கள். **இதில் மிகப் பெரிய தொகையான வர்கள் பிரித்தானிய பெண்களாவர்.** ஆனாலும், ஐரொப்பிய நாடுகள், உலகக் கண்ணோட்டத்தில் ஒரு புதிய அரசியற் திருப்பத்தைக் கொண்டு வந்தன.

ஒருகாலத்தில் பலவிதமான, கொடுமைகளுக்கும் எதிராகப் போராடிய பெண்ணியவாதிகளின் குரல்கள் பலவீனமாகின. ஈராக் போரில் ஒன்றரைக்கோடிப் பெண்கள் விதவையாக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று கோடிச் சிறார்கள் அநாதையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அண்மையில் ஐக்கிய நாடுகளின் 19வது மனித உரிமைக்கூட்டத்தில் (பங்குனி 2012) கலந்து கொண்ட ஈராக்கிய சமுதாயவாதியும் இருதய வைத்தியருமான ஒருத்தர் குறிப்பிட்டார்.

அண்மைக்காலங்களில்.1980 களிலிருந்து,மேற்கு நாடுகளில் மட்டுமல்லாது வளரும் நாடுகளிலும், பெண்களின் நாட்டம் தனிப்பட்ட முன்னேற்றங்களில் அக்கறைகொள்ள ஊக்குவிக்கப்பட்டது. ஆண்களும் பெண்களும் எப்படியும் உழைக்கலாம் அதற்காக எதையும் செய்யலாம் என்ற சிந்தனை பரவியது. அதேகாலகட்டத்தில், சமுதாயத்தைத் தூக்கியெறிந்த கலாசாரத்தைத் தங்கள் பாடல்களாலும் உடையலங்காரத்தாலும் அமெரிக்கப் பெண்பாடகர் மடோனா போன்ற கலைஞர்கள் முதன்மை படுத்தினார்கள். இந்த மாற்றங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஆதாயம்தேடும் முதலாளித்துவம், கவர்ச்சிப்பொருட்களைப் பெண்களுக்கு உருவாக்குவதில் தீவிரமாக முனைந்தது. ஒரு பெண்ணோ ஆணோ,சமுதாயத்தில் மதிக்கப்படவேண்டுமானால், கவர்ச்சியாக இருப்பது இன்றியமையாத விடயம் என்பதை மேற்குலக ஊடகங்கள் மட்டுமன்றி வளரும் நாடுகளிலுள்ள ஊடகங்களும் பிரசாரம் செய்வது இன்றைய வியாபாரங்களில் பெரிய வியாபாரமானது.

இன்றைய கால கட்டத்தில் உலகம் பரந்து பல பெண் பிரதமர்களும் ஜனாதிபதிகளும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். உலகத்தின் பொருளாதார அமைப்பின் தலைவியாக கிறிஸ்டின் லாகாட் வேலை செய்கிறார். ஐக்கியநாடுகள் சபைத்தலைவியாக ஒரு தமிழ்ப்பெண்மணி நவநீதம்பிள்ளை பணிபுரிகிறார்.

பழையபடி, வளரும் நாடுகளைத் தங்கள் வசப்படுத்த, மேற்கத்திய ஆதிக்கவாதிகள் புதிய தேடல்களில் ஈடுபடுகிறார்கள். அதில் முக்கியமாக ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கெதிராக, தலிபானின் செயல்களைத் தடுப்பதற்காகச் செல்வதாச் சொல்லிச் சென்றவர்களால் அந்த நாட்டுப் பிரச்சினை தொடர்கிறது. அவர்கள் இஸ்லாமியப் பெண்களை மனித உரிமையுடன் நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டுடன், தங்கள் அனுதாபத்தைக்காட்ட, பல நாடுகளில் இராணுவத்தைக்கொண்டுசெல்கிறார்கள்.

அதே நேரம்,மேற்கு நாடுகளில், ஆயிரக்கணக் கான ஏழைப்பெண்கள் பாதாள உலகக் கும்பல்களால் பாலியல் தொழிலாளர்களாகக் (பெரும்பாலான பெண்கள் கிழக்கு ஐரோப்பாவைச் சோர்ந்தவர்கள்) கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். ஆபிரிக்க நாடுகளில் ஆயிரக்கான ஏக்கர் நிலங்கள் மேற்கத்தியர்களால் வாங்கப்பட்டு அதில் ஆயிரக்கணக்கான ஏழைப் பெண்கள் 'மேற்குலகக்' கொம்பனிகளுக்காகத் தங்கள் உழைப்பை ஒருசில டாலர்களுக்குப் பணயம் வைக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஏழைப் பெண்கள், இலங்கை (கிட்டத்தட்ட 500.000 ஊழியர்கள்), இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து மத்திய தரைக்கடல்நாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் சென்று எந்த விதமான மனித உரிமையுமின்றிப் பல கொடுமைகளுக்காளாகிறார்கள்.

இந்தியாவில் சாதிக் கொடுமையால் பல ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்கள் சொல்லவொண்ணாக் கொடுமைகளுக்காளாகிக் கொண்டு வருகிறார்கள். அமெரிக்காவின் ஆதிக்குடிகளான சிவப்பு இந்திய வம்சத்தினப் பெண்களுக்கும், அவுஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளான அபர்யேனியப் பெண்களுக்கும் வாழ்க்கையில் முன்னேறும் சந்தர்ப்பங்களைக் கேட்டுப் போராடும் குரல்கள் வலிமை பெற்றவையல்ல.

இதே கால கட்டத்தில் மேற்கு நாடுகளில் மட்டுமல்லாது, பொருளாதாரத்தில் வளர்ந்து கொண்டுவரும் இந்தியா, சீனா போன்ற நாடுகளில், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுபவர்களில் பெண்கள் முன்னிலை வகிக்கிறார்கள். விமானம் ஓட்டுவதிலிருந்து, அடுத்த கோளம்போகும் பிரயாணங்களிலும் பெண்கள் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் பெண்களைத் தங்களுக்குத் தேவையான விதத்தில் பாவித்துக்கொள்ள உலகில் பரந்த விதத்தில் ஆண்கள் பல்விதமான சூட்சுமங்களையும் செய்கிறார்கள். உலக மயப்படுத்தல் என்ற பெயரில் பெண்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. இவற்றுக்கு எதிராகவும், தங்களின் விடுதலைக்காகவும் குரல்கொடுக்கும் பெண்கள் உலகமெல்லாம் ஒன்று படுகிறார்கள். அண்மையில், மத்திய தரைக்கடல் நாடுகளில் நடக்கும் புரட்சிகளில் பெண்களின் பங்கை அவதானித்தால் இதன் தாற்பரியம் புரியும்.

ஆனாலும், மேற்கு நாட்டில் மட்டுமல்லாது, வளரும் நாடுகளிலும், பெண்களின் பலவிதமான முன்னேற்றங் களுக்கும் மட்டுமல்லாது, சமுதாய மாற்றங்களுக் காகவும் குரல் கொடுக்கும் பெண்களை விடத் தங்கள் தனிப்பட்ட இச்சைகளையும், பாலியல் தேடுதல்களையும் முக்கியப்படுத்தும் குரல் இன்றைய காலகட்டத்தில் பெரிதுபடுத்தப்படுகிறது. 'சுதந்திர' மனப்பான்மை யுள்ள பெண்களில் சமுதாய விடுதலை, வர்க்க விடுதலை, தொழிலாளர்களுக்கான போராட்டங்கள் என்பவற்றில் ஈடுபடும் பெண்களின் படைப்புக்களை விட, பாலியல் தேவைகள், ஆசைகள், உணர்வுகள் என்பன பற்றிப்பேசும் பெண்களின் படைப்புக்களை ஆண் ஊடகவாதிகள் பெரிதுபடுத்துகிறார்கள் என்பதைத் தற்காலப் பெண்ணியவாதச் சிந்தனைகளின் பரிமாணங்களை அவதானிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

பெண்களின் படைப்புக்களில் பாலியல் பற்றிப்பேசுபவைக்குப் பிரசாரமுக்கியத்தை ஆண்களின் கையிலிருக்கும் ஊடகங்கள் ஊக்குவிக்கின்றன. ஆண்களின் இந்தச் செயல்கள், எப்படியும் பெண்களைத் தங்கள் பிடிக்குள் வைத்திருப்பதற்கும் தேவைக்குப் பயன்படுத்துவதற்கும்தான் முன்னெடுக்கப்படுகின்றன என்பதைப் பெரும்பாலான பெண்கள் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை. கவர்ச்சிப் பிரசாரம் பெண்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து விட்டது.

இத்துடன், மருத்துவ விஞ்ஞானத்தின் உதவியுடன் தங்களின் உடலின் கவர்ச்சியை மேம்படுத்துவதில் பல பெண்கள் தங்கள் உழைப்பைச் செலவிடுகிறார்கள். பெண்ணிய வாதசிந்தனையாளர்கள் பலர், இந்த விதமான செயற்பாடுகள் பெண்களின் தனிப்பட்ட, சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கோ உண்மையான உதவியைச் செய்யப்போவதில்லை என்று எழுதினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் இளம் பெண்கள் ஒரு சொற்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# பூனை பார்த்த கூத்து

● நீலா பாலன்

அவன் சரியில்லை என்று
இவன் சொல்கிறான்.
இவன் சரியில்லையென்று
அவன் சொல்கிறான்.

அவன் சொல்வதும் சரி..
இவன் சொல்வதும் சரி...
நடந்ததெல்லாம் இதற்கு ஆதாரம்-நடந்து
முடிந்தது மானிடப் பெரும்சோகம்.

எவன் சரி.... எவன் பிழை...
இழுபடும் நிலை... இதை
சமன் செய்வது எப்படி?...
சரி செய்வது எப்படி?...

சரி செய்ய முயன்றிடில்...
கரிபூசத் திரளுவார்
எவரையும் கெடுத்திட
எல்லோரும் உதவுவார்.

நசிபட்டு மிதிபட்டு
மனிதமே அங்கிங்கு
அரைபட்டுக் கிடக்கையில்
அவன் என்ன ?... இவன் என்ன?..

உலகெலாம் சமாதானப்
புறாக்கள் பறக்குது.
உலகே சமாதானக்
கொடிஏந்தி நடக்குது.

விதைகளை ஊன்றிடில்..
விளைவினை அறுக்கலாம்.
பழுதைநாம் விதைத்திடின்...
புதிதென்று எதுவரும்?...

அல்லய லெல்லாம்
வெள்ளைப் புறாக்கள்
அடிக்கடி சந்திக்கும்
கறுப்பு சுறாக்கள்


அழிந்ததைச் ... சிதைந்ததை...
கலந்து கதைத்து
அளவளாவியே
உறவாடி மகிழ்வார்.

கலந்ததில்.. குழைந்ததில்...
உறவுகள் மலர
அவரவர் தேவையைப்
பகிர்ந்தும் மகிழ்வார்.

உறவுகள் கலந்து...
பகிர்வுகள் நடந்து
அசிங்கப் பட்டாலும்...
துடைத்தும் கொள்ளுவார்.

பார்த்துப் பார்த்திந்தக்
கூத்தை அறிந்த
நம்வீட்டுப் பூனை
கம்மென்றே யிருக்கும்

அடங்கி... ஒடுங்கி
அகதி முகாமிலே
மனிதம் தினந்தினம்
அக்கினி குளிக்கும்



வாசகர் பேசுகிறார்

வாசகர் பேசுகிறார் பகுதிக்கு கடிதங்களை அனுப்புபவர்கள் 300 சொற்களுக்குள் அடங்கக் கூடியதாக அனுப்ப வேண்டும். 300 சொற்களுக்கு மேற்பட்ட கடிதங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு.

– ஆசிரியர்

நூல் அறிமுகம்

நூல் அறிமுகத்திற்கு நூல்களை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். ஒரு பிரதியை மட்டும் அனுப்பினால் அதற்கான நூல் அறிமுகம் இடம்பெற மாட்டாது. ஒரு வருடத்திற்குள் வெளிவந்த நூல்களே நூல் அறிமுகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

– குறிஞ்சி நாடன்–




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பிரமச்சாரி ஆகிறார்

● சூசை எட்வேட்



அண்ணா கைபேசியும் காதுமாக மிக சுவாரஸ்சியமாக ஆனந்த பரவசமாக கதைபேசிக் கொண்டிருந்தான்! அப்போது அவன்முகத்தைப் பார்க்க வேண்டுமே! இப்போது போல் எப்போதுமே இப்படியொரு மகிழ்ச்சிப் பிரவாகத்தைப் பார்க்க முடியாது! அண்ணா வீட்டில் மூத்தவன். எங்களோடு சாதாரணமாக பழகுவான். ஆனால், இப்படி ஆனந்தம் பொங்க சிரித்து யாரோடும் பேசியதில்லை! கைபேசியிலே இப்படியென்றால் நேரிலே அந்த நபரோடு பேசும் போது எப்படியிருக்கும்!

இதைப் பலமுறை நாங்கள் அவதானித்து கேள்விக்குறியோடு முகத்தை வைத்திருப்போம்! ஒருநாள் அம்மா கேட்டே விட்டார். அழைப்பு வந்தால் கொஞ்சம் எட்டப்போய்த்தான் கதைப்பான். ஒன்றும் கேட்காது. முகபாவனைதான் காட்டிக் கொடுக்கும்! "என்னடா ராசா, ஆரோட இவ்வளவு இரசனையாக கதைபேசுகிறாய் மோனே!"

"அது என்ர பிரண்டணை!" "பொடியனோ, பொட்டையோ" "பொடியன்தானணை!" "எல்லாப் பொடியளோடையும் இப்படிச் சிரிச்சு சிரிச்சுக் கதைக்கமாட்டியே! இதாரு அப்பிடியொரு பிரண்டு! சீலை கட்டின பிரண்டோ!" " சும்மா சத்தம் போடாமல் போவணை!" அம்மாவும் சரியான ஆள், பொறுத்த இடத்தில் பொருத்துப் பார்த்துத் தட்டி விடுவாள்! அவள் அகன்று விட்டாள். அண்ணாவோடு கடுமையாக எதிர்ப்பதோ கதைப்பதோ இல்லை! ஏனென்றால் அவன் உழைத்துக் கொடுப்பவன்! தனியார் நிறுவனமொன்றில் தொழிலாற்றுகிறான்! அப்பாவால் இப்போதெல்லாம் கடுமையாக வேலை செய்ய முடியாது! தொட்டாட்டு வேலைகள் செய்வார். அதுவும் எப்போதாவதுதான் செய்து ஏதோ கொடுப்பார்! அண்ணா கை கொடுப்பதால்தான் என் படிப்பு உட்பட எல்லாம் சீராக நடக்கிறது!

காதலையும் கஸ்தூரியையும் எத்தனை நாளைக்குத்தான் பிறரறியாமல் மறைத்து வைக்கமுடியும்! அண்ணா வேலைமுடிந்தால் வேளைக்கு வராததும், வேலை இல்லாத நாட்களிலும் வீட்டில் நில்லாததும் சந்தேகக் குறிகளை எழுப்பிக் கொண்டே வந்தன! அம்மாவுக்கு கொடுப்பனவும் குறைந்து கொண்டேவந்தது! கேட்டால் மழுப்பு வான்! கூடக்கேட்டால் எரிந்து விழுவான்! இவனின் இம்மாதிரியான நடவடிக்கைகள் இவர் யாரோ ஒரு பெண்ணை தீவிரமாகக் காதலிக்கிறார் என்ற எண்ணத்தை தீவிரப்படுத்தியது! அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் அரசல்புரசலாக கதைகளும் எமது காதுக்கு எட்டவே செய்தது! அண்ணா ஒரு ஆண்மகன்! இப்போ குடும்பத்தலைவன் என்றும் சொல்லலாம்! தான் காதலிக்கும் தனக்குப்பிடித்த பெண்ணை வருங்கால மனைவியை வெளிப்படுத்த ஏன் தயங்க வேண்டும்?!

இதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும்! அம்மாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை! புலனாய்வில் ஈடுபட்டார்! நானும் என் நண்பர்கள் மூலமாக ஆராய்ந்தேன்! உண்மைகள் புலப்பட்டன!

அண்ணா மிகத்தீவிரமாக ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். அவர்களும் தங்கள் மாப்பிள்ளையாகவே வரித்துக் கொண்டு விட்டார்கள்! அந்தப் பெண் அழகுரூபவதி என்பது மட்டும் அசைக்கமுடியாத உண்மை! இதைத்தவிர அப்பெண் வீட்டில் பெரிதாக ஒன்றும் இல்லை! அவளுக்கு இரண்டு தங்கைகள் உண்டு. ஆண் பிள்ளை என்று வயதான அப்பாதான் இருக்கிறார்! இவர் இங்கே கால் வைத்தால் எல்லாப் பாரங்களும் இவர் தலையில்தான் பொறிந்துவிடும் என்பது மட்டும் சர்வ நிச்சயம்!

எல்லாவற்றக்கும் மேலாக அவர்கள் வேறு சாதிக்காரர்கள். பிற்படுத்தப்பட்டவர்கள்! எங்கள் வீட்டார் சம்பந்தம் கலக்கவே மாட்டார்கள்!

இதையெல்லாம் புரிந்துதான் அண்ணா மறைபொருளாக நாடகமாடியிருக்க வேண்டும்! எவ்வளவு காலத்துக்குத்தான் அந்தரங்க நாடகமாடிக்கொண்டிருக்க முடியும்! அம்மா விசயத்தைப் போட்டுடைத்தார்! அந்தச்சாதிசனம் எங்களுக்குச் சரிவராது! அந்தப்பெண்ணை இங்கே கூட்டிவரப்படாது!" என்று உறுதியாகக் கூறினார்.

இதன் பிறகு அண்ணா வீட்டுக்கு வருவது நின்றுவிட்டது! அவர் பதிவுத் திருமணத்தோடு வீட்டு மாப்பிள்ளையாகப்போகிறார் என்று தெரிந்துவிட்டது! அன்று வீட்டில், உள்ளத்தில் இடிமுழக்கம், மின்னல் அடித்தது! கண்ணீர் மழை கொட்டியது! காதலுக்காக முடிதுறந்தவர்களை, சாம்ராச்சியங்கள் அழிந்த கதைகளை எல்லாம் அறிந்திருக்கிறேன். ஆனால் தன்னையே நம்பியிருக்கும், எம்மையெல்லாம் எம் அண்ணா அம்போ என்று கைவிடுவான் என்று எதிர்பார்க்கவில்லை!

ஆனாலும் அண்ணாவின் உறவை அப்படியே அறுத்துவிட யாருக்கும் மனதாயில்லை! அறுத்துவிடவும் இயலவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் வீட்டுத் தகப்பன் மட்டும் வந்து எம்வீட்டுப்படியேறினார்! ஒரு நோஞ்சான் கிழவன். நல்ல வெள்ளை நிறம்! "நாளை மறுதினம் பதிவுத்திருமணம்! குடும்பத்தோடு வாருங்கள்! உங்கள் நல்வரவை ஆவலோடு எதிர்பார்கிறோம்," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்! அவரை வாரும் இரும் என்று யாரும் சொல்லவில்லை! அவரும் அதை எதிர்பார்க்காதவர்போல் திரும்பிவிட்டார்!

அன்றையதினம் எல்லோருடையவும் ஏக பிரதிநிதியாக என்னை மட்டும் அனுப்பினார்கள்! தொடர்பை அப்படியே கைவிடக்கூடாதல்லவா!

புது மாப்பிள்ளையின் தம்பி என்பதால் அங்கே எல்லோரையும் விட ஏகதடல்புடலாக வரவேற்புக் கிடைத்தது! நானும் வீட்டுச் சோகத்தை மறந்துதான் போனேன்! அண்ணாவையும் பெண்ணையும் மணக்கோலத்தில் பார்க்கையில் மகிழ்ந்துதான் போனேன்! பெண் சும்மாகவே பேரழகி! மணக் கோலத்தில் தேவதைபோலவே ஜொலித்தாள்! அவள் பேரழகுதான் அண்ணாவை எம்மிடமிருந்து பிரியவைத்திருக்கிறது. சந்தேகமே இல்லை! அண்ணாவும் பிழையில்லை. அவளுக் கேற்ற சோடிதான்!

அவர்கள் அவ்வளவு வசதியானவர்கள் இல்லை என்பது வீட்டைப் பார்க்கவே தெரிந்தது! கல்யாணக் கொண்டாட்டமும் ஆடம்பரமாக இல்லை! மாப்பிள்ளை வீட்டார் கலந்து கொள்ளாததும், அவர்கள் வசதியீனமும் காரணமாக இருக்கலாம்!

ஆனால் இந்த மணமக்கள் போல் எந்த திருமணவீட்டிலும் நான் காணவில்லை! அப்படியொரு மகிழ்ச்சிப் பரவசநிலையில் இருவரும் திளைத்திருந்தார்கள்! ஒருவர் முகத்தை ஒருவர் திருட்டுத்தனமாகப் பார்ப்பதென்ன, நமட்டுச் சிரிப்பு சிரிப்பதென்ன, கிள்ளுவதும் சீண்டுவதும் நாணுவதும் கோணுவதும், ஊடுவதும்..... அப்பப்பா வார்த்தைகளால் சொல்லவே முடியாது! காதலுக்குக் கண்ணில்லை என்பார்களே,அது சரிதான்! மற்றவர்கள் பர்ப்பார்களே என்ன நினைப்பார்களோ என்ற அக்கறையே இல்லை! எனக்கு எரிச்சலாகவும் வந்தது! அங்கே கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கையில்,இங்கே குதூகலச் சிரிப்பைச் சிந்திக் கொண்டிருக்கிறார்களே!

காதலுக்கு இப்படியொரு சக்தியா! எல்லாவற்றையும் பறக்கடித்து விடுமா! அப்படியொரு காதல் கல்யாணம் எல்லாம் தேவைதானா என்றே தோன்றியது!

நான் விடைபெற்றுச் செல்லும் வேளை, மணமக்களை அணுகினேன். "எப்போ அண்ணா வீட்டுக்கு வருவீாகள்?" " வீட்டில இருந்து இங்கே வந்து அம்மாவும் அப்பாவும் கூப்பிட்டால்தான் நாங்கள் வருவம்! போய் சொல்லு!"

அது நடக்கவில்லை! இவர்கள் அழைக்கவு மில்லை. அவர்கள் வருவதுமில்லை! ஆனாலும் நான் மட்டும் இடைக்கிடை போய்வந்து கொண்டிருந்தேன். இரு வீட்டிலும் அதற்கு அனுமதி இருந்தது. இருபகுதிக்கும் நான் உறவுப்பாலமாக இருந்தேன்! இருவீட்டுச் சமாச்சாரங்களையும் பரிமாறிக் கொள்வேன்! நாரதர் வேலை பாக்கிறான் என்று அக்கா கிண்டலடிப்பார்!

இவ்வாறு இருக்கையில் எனக்கு பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்தது! என்னைவிட வீட்டில் எல்லோரும் மகிழ்ந்தார்கள்! இதை அண்ணாவுக்குச் சொன்னபோது,



*"அண்டைக்கு நல்ல சந்தர்ப்பம் வாய்ப்பாகிவிட்டது!.......... சும்மா முத்தங்கள பரிமாறி தடவிப்போட்டுவருவம் எண்டு எதிர்பார்த்துத் துவங்கினன்!........... ஆனால் ஏதோ ஒரு மந்திரசக்தி இருவரையும் கட்டிப்போட்டு ஒரு முடிவு காணாமல் விடுவதில்லை என்ற ஒரு வெறித்தனமான ஆட்டத்தை ஆட்டிவிட்டது! ஒரு சில நிமிடங்களில் எல்லாம் முடிந்து விட்டது! ஆடி அடங்கிவிட்டது!"*

அவன் ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்தான். வேறு ஒன்றும் சொல்லவில்லை. அப்பால் போய்விட்டான்! மற்றவர்கள் அது கூட இல்லை! அந்தவீட்டிலும் பரீட்சை எழுதியவர்கள் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்களில் ஒருவரும் சித்தியடையவில்லை! அதன்பிரதிபலிப்போ தெரியவில்லை!

எனக்கு பல்கலையில் இடம் கிடைத்தும் என்ன பிரயோசனம்? போய் படிக்க முடியவில்லை! வீட்டில் நெருக்கடி கூடிவிட்டது! நான் எங்கேயாவது வேலை தேடுவதுதான் சரியென்றுபட்டது! நான் இதை அண்ணாவுக்குக் கூறியபோது. "என்னெண்டாலும் செய்" என்றான் அலட்சியத்தோடு! எனக்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது! நீ தொடர்ந்து படி. உனக்காக வாகுதல் நான் உதவி செய்வென்" என்று சொல்வான் என்றுதான் நான் எதிர்பார்த்தேன். எத்தனைகால உறவு , தொப்புள் கொடி உறவு, எல்லாம் அரை நொடியில் வெகுதூரம் போய்விட்டதே! போலியாய் கேலியாய் ஆனதே! அண்ணாவைவிட இந்தக்காதல் மேலேயே, ஏன் காதல் வெறியை ஊட்டிய பெண்குலத்தின் மீதேயே எனக்கு அருவருப்பு ஏற்பட்டது!

எப்படியோ வேலை தேடும் படலத்தில் ஈடுபட்ட எனக்கு விரைவாகவே வேலை கிடைத்துவிட்டது! தனியார் வங்கியொன்றில்! சம்பளமும் பரவாயில்லை! வீட்டில் கொள்ளை மகிழ்ச்சி! அண்ணாவால் ஏற்பட்ட மனத்தளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்துக்குலுங்குவதாயிற்று! இதை அண்ணாவுக் குத் தெரியப்படுத்தியபோது அவன் இட்டவார்த்தை என் நெஞ்சைச் சுட்டது! " இனி உங்களப்பிடிக் கேலாது! நான் உங்களுக்கு என்றைக்குமே தேவைப்படாது!"

அவன் என்னதான் கதைத்தாலும், அவர்கள் வீட்டில் என்னை எப்படித்தான் நடத்தினாலும் நான் அங்கு போவதை நிறுத்தவில்லை! எல்லாக் கதைகளையும் உறவைப்பாதிக்கக்கூடிய கதைகளை நான் வெளியிடுவதில்லை! எங்கள் வீட்டில் அவர்கள் வீட்டுச் சமாச்சாரங்களை எல்லாம் விசாரிப்பார்கள். ஆனால் அவர்கள் வீட்டில் அண்ணா உட்பட அப்படியொரு அக்கறையே இல்லை! அண்ணா அழகு மயக்கத்தில் சகலதையும் மறந்து அடைக்கலமாகி விட்டான்! அவர்களுக்கென்ன சீதனமில்லாமல் உத்தியோகக்கார மாப்பிள்ளையை அகப்படுத்திக் கொண்டதில் பரமதிருப்தி! எங்களை ஏன் திரும்பிப் பார்க்கப் போகிறார்கள்? மகனுக்கு வேண்டும் சீதனத்தோடு அக்காவை இலகுவாக கரை சேர்த்துவிடலாம் என்ற கனவில் மிதந்த அம்மாவுக்கு ஆத்திரம் அடங்க கனநாளாகும்! ஆனால் அண்ணாவின் அலட்சிய மனோபாவம் விரிசலை மேலும் வளர்த்துக் கொண்டே போனது!

எங்களையெல்லாம் விட்டுத் தூரப்போய்க் கொண்டிருப்பதற்கு காலான அழகு மனைவியொடு கொண்ட இல்லற உறவு, உல்லாச சல்லாபத்தில் இன்ப களிப்பில் கூடி ஏறுமுகமாகிக் கொண்டிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை!

கல்யாணத்தன்று கண்ட அக்களிப்பு ,பரவசம் குறைவடைந்து கொண்டேவந்து காணாமலே போய்விட்டது! அவர் வருகிறார். இவர் தேனீரைக் கொடுக்கிறா. அவர் கொண்டு வந்ததைக் கொடுக்கிறார். இவர் வேண்டிக்கொண்டு உள்ளே போகிறார், அவ்வளவுதான்! வேறு எந்த மகிழ்ச்சிப் பிரதிபலிப்பு ஒன்றையும் காணவில்லை! ஏதோ மருத்துவமனைகளில் மருத்துவரும் தாதியும் பழகுவதுபோல் இருக்கிறது அவர்கள் உறவு! அந்த இன்பக் கிளுகிளுப்பை ஏன் தொடர்ந்து பேணமுடியாமல் போனது என்று எனக்கும் புரியவில்லை!

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை நான் அங்கு போய் இருந்தேன். அண்ணா சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஏன் இவ்வளவு நேரம் கழித்துச் சாப்பிடுகிறான் என்று எனக்கு விளங்கவில்லை! நான் வினவினேன். " நேரத்துக்கு சாப்பிட்டு என்னத்தக் கண்டது! உழைச்சி என்னத்தக் கண்டது! கலியாணத்த முடிச்சுத்தான் என்னத்தக் கண்டது!.... உலகே மாயம்... வாழ்வே மாயம்... நாம் காணும் சுகமே மாயம்..!" என்று குழறிக் குழறிப் பாடினான்.

அவன் பேச்சும் தொனிப்பும் வழமைபோல் இல்லை, வித்தியாசமாகவே பட்டது! மனைவி அவரண்டை அணுகினாள். " என்ன வேணும் கறிகொண்டுவரவா? சோறு அப்படியே இருக்கு!" " இருக்குறதையே சாப்பிட ஏலாம இருக்கு.! உப்புக்கூடியிருக்கு. உறைப்புக் காணாம இருக்கு.. வரவர சமையல் சாப்பாடு மோசமாயிருக்கு! இண்டைக்கு இறைச்சி ஏன் ஆக்க இல்ல..!"

"எங்கட அம்மன் கோயிலில கொடியேறிற்றுது எல்லே, இனி வீட்டுக்கு மச்சம் எடுக்கமாட்டம் நாங்கள்!" " நீங்க அம்மனக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு இருங்கோ. நான் கடையில வாய்க்குருசியாகச் சாப்பிடுறன்.!" வித்தியாசமான அந்தப்பேச்சு அவன் குடிக்கத்தொடங்கிவிட்டான் என்பதைக் காட்டிவிட்டது! "குடிகாரனோட நமக்கென்ன பேச்சு! இப்படி மாறுவீங்கள் எண்டு தெரிஞ்சால் கட்டியே இருக்கமாட்டன் கல்யாணம்!" "கொப்பரப்போல கசிப்புக் குடிச்சுப் போட்டு சத்தி எடுக்கிறவன் எண்டே என்ன நினைச்சிருக்கிறாய்! நான் "பாரில" இருந்து மேல்நாட்டுச் சரக்கெல்லே பாவிச்சுப்போட்டு வாறன்! மட்டுமரியாதையில்லாமல் கதைச்சி எண்டால் உதைதான் விழும்!"

அவள் அப்பால் போய்விட்டாள். சமையல் கட்டுப்பக்கம் தாயும் பிள்ளைகளும் கதைப்பது மெல்லியதாகக் கேட்டது!

"இதுக்குத்தான் நான் சொன்னநான் சம்பளக்காசு முழுதையும் தந்திரமாக வாங்கி எடு எண்டு! கேட்டியே! புருஷன்மாரை கைக்குள்ள போட்டு வைக்கிற தலையணை மந்திரம் உனக்குத் தெரியல்ல! வேற வீடுகள்ள எண்டால் இருக்கிற காசை எல்லாம் குடுத்துப் போட்டு பொஞ்சாதியின்ர முந்தானையைப் பிடிச்சுக்கொண்டு சுத்திச் சுத்தி வருவாங்கள்! தங்கச்சிமார் இரண்டுபேர் இருக்கிறாங்கள்! உன்னத்தான் நம்பியிருக்கிறாங்கள்! இப்படியே விட்டுக்கொண்டு இருந்தீங்கள் எண்டால் சரிவராது!"

அண்ணா வகையாக மாட்டிக்கொண்டுவிட்டான் என்று விளங்கியது! இனி அவருக்கு மீட்சியே இல்லை! அது சரி இவர் ஆருயிர் காதலுக்கு என்ன நடந்தது? அதை அழித்த எதிரிகள் யார்?

எனக்கு மனக் குழப்பமாகவே இருந்தது! அண்ணாவின் குடும்பவாழ்க்கையின் துன்பியல் நாடகங்களை நான் சொல்லாதவைகளையும் பிறர்

**கவிதை**

## கருணை எங்கே?

முந்திய தடவை
இவ்வீதியைக் கடந்தபோது
இங்கே ஒரு கோயில் இருந்தது
அடுத்த தடவை வந்தபோது
அது இல்லை.
போரின் கோரத்தினால்
அழிந்து சிதைந்த கோயிலின்
கடவுள் எங்கே போயிருப்பார்
இன்று இதேபாதையில் வருகிறேன்
அதே இடத்தில்
கருணை வடிவில் புத்தரைக்கண்டேன்
புத்தரின் கருணையை
'அவர்களிடம்' தேடுகிறேன்
மசூதிக்கு என்ன நடக்குமோ?

-ச. முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டனர் எம்வீட்டார்! "அந்த எளிய சாதிக்க போனதால அவனும் எளியதனமாப் போயிற்றான்! அம்மாளாச்சிதான் என்ர பிள்ளையைக் காப்பாற்றி என்ர பிள்ளையை என்னட்டக் கொண்டுவந்து சேர்க்கவேணும்!"

ஒருநாள் இரவுச்சாப்பாட்டுக்குப் பிறகு அப்பாவோடு அம்மா தனிய இருந்து கதைத்தது என்காதிலே தெளிவாகத் தைத்தது

"மகளுக்கு கெதியாகக் கல்யாணம் செய்து வைக்க வேண்டிக் கிடக்குது!" "ஏன்? ஏன் கிடந்து அவசரப்படுகிறாய்!"

"நான் அவசரப்படுகிறனோ! அவளுக்கு வயதும் எல்லே ஏறிக்கொண்டு போகுது! உங்களுக்கு ஒரு கோதாரியும் தெரியாது! ஆக தின்னவும் குடிக்கவும் விழுந்துபடுக்கவும் தான் தெரியும்! பிள்ளைகள் என்ன போக்கில போகுதுகள் எண்டு ஒண்டையும் கவனிக்கிறதில்ல! தாய்மாருக்குத்தான் தெரியும் பிள்ளைகள்ற உள்ளக்கிடக்கையப் பற்றி!.......... அவள் நெடுகத்தனிய இருந்து வானத்த வெறிச்சு விரகத்தியோட பார்த்துக் கொண்டிருப்பாள்! தனிய இருந்து யோசிச்சுக் கொண்டிருப்பாள. எதையோ நினைச்சு சிரிப்பாள. தேவையில்லாமல் நடப்பாள். நிதானமில்லாமல் வேலைகளைச் செய்வாள். பாத்திரங்களையும் உடைச்சுப் போடுவாள். சரியாகச் சாபபிடுகிறாள் இல்ல. நித்திரையில்ல, துரும்பா இளைச்சுக்கொண்டே வாறாள்! முந்தியப்போல இல்ல! என்னமாதிரி பூரிப்பா இருந்தவள்! குமர்முத்தி குரங்காகு முன்னம் கெதியாக் கல்யாணகாரியம் பார்க்கவேணும்! இப்பிடியேவிட்டு, காலா காலத்தில் கலியாணம் செய்யாமல் விட்டு எத்தின குமருகளுக்கு விசராக்கியிருக்குத் தெரியுமோ!" " எட கோதாரி! நானும் இதக் கவனிக்க இல்ல பேப்பிராக்கு பார்த்துக் கொண்டு இருந்துற்றன்! நான் நாளைக்கே புறோக்கர் செல்லையரைக் கண்டு கதைக்கிறன்! அந்தாளப் புடிச்சா கெதியா அலுவல் முடியும். கவலையவிடு!" என்றார் அப்பா.

"கடவுள் எல்லாவிடமும் பிரசன்னமாக முடியாது. அதனால்தான் வீட்டுக்கொரு தாயாரைப் படைத்திருக்கிறார். என்று கூறியது சரிதான். அம்மா எவ்வளவு உன்னிப்பாக அவதானித்து வருகிறார் பிள்ளைகளை!

என்மனமும் அக்காவுக்கு விரைவில் ஒரு நல்வாழ்க்கை அமைய வேண்டும் என்டு வேண்டிக் கொண்டது! அம்மாவின் கதை உசுப்பேற்றிவிட்டது!

அடுத்தநாளே அந்தக்கல்யாணத்தரகரை அழைத்து வந்தார் அப்பா. அவர் பெண்ணைப்பற்றி எல்லா விபரங்களையும் கேட்டுக் குறித்துக் கொண்டார். எப்படியான மாப்பிள்ளை வேண்டும் என்றும் கேட்டறிந்தார்.

" எங்களிட்ட பெருசாச் சீதனம் எண்டு ஒண்டும் இல்ல! இருக்கிற வீடுவளவ அப்படியே குடுப்பம்! என்ர நகைநட்டையும் சேர்த்து போட்டு விடுவம்! கைரொக்கத்தை அவ்வளவா எதிர்பார்க்க ஏலாது!......... ஆனா எங்களுக்கு வாறவர் நல்ல குணசாலியா இருக்கவேணும்! இது தான் முக்கியம். எங்கட பிள்ளை தங்கம்! நல்ல ஆளாகப் பாருங்க!" அம்மா அறுத்து உறுத்து பேசினார்!

தரகர் அக்காவின் சாதகக் குறிப்பையும் படத்தையும் பெற்றுச் சென்றார்.

அடுத்தவாரம் அவர் வந்தார். சிலபடங்களைக் காட்டி அவர்களைப்பற்றிய விவரங்களையும் கேட்கும் சீதனத்தைப் பற்றியும் விபரித்து விட்டுப் போனார்.

வீட்டில் அக்காவையும் கூட்டி படத்தையும் காட்டி ஆலோசனை கூட்டி ஒரு முடிவாய் அறியச் செய்தோம்!

எங்கள் எண்ணப்படி மாப்பிள்ளை கிடைத்துவிட்டார். அவர் ஒரு தச்சுத் தொழிலாளி. ஆக்காவுக்கு கல்யாணம் நடந்துவிட்டது! அவருக்கு, வீடுவளவு கிடைத்ததே காணும். வீட்டோடு தச்சுப்பட்டறை போட்டுக் கொடுத்தாலே போதும் என்ற நிலைப்பாடு!

இது அண்ணாவைப் போலல்லாது, முறைப்படி பேசி, சகல பொருத்தங்களும் சாத்திரசம்பிரதாயங்கள் எல்லாம் பார்த்து முறையாகச் செய்த திருச்சடங்கு! எந்தக்குறையும் வராது என்பது எல்லோரதும் எதிர்பார்ப்பு!

அக்கா கல்யாணத்துக்கு எனது முக்கிய சினேகிதன் வதனன் வந்து நின்று நல்ல உதவிகள் செய்தான். அவன் என்னோடு ஒன்றாகப் படித்து வந்தவன். சாதாரண தரத்தில் சிததியடையவில்லை. அத்தோடு படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டான்! ஆனாலும் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து "வயரிங்வேலை" பழகி ஊருக்குள் நல்ல செல்வாக்கு அந்தத் தொழிலால்! விடுமுறை நாட்களில் எனதில்லம் வருவான். நான் அவன் இல் ஏகுவதுமாக எமது உறவு தொடரும்.

அக்காவுக்கும் அத்தானுக்கும் சகல பொருத்தங்களுடனும் முறைப்படி மணவினை நிறைவேறியதாலோ என்னமோ, அவர்கள் பூரிப்புடனேயே விளங்கினர்! அக்கா பூத்துக் குலுங்கினாள் என்றே சொல்லலாம்!விரும்பியதையெல்லம் விதம் விதமாய் ஆக்கிப்படைத்து உண்டு குடித்து மகிழ்ந்தனர். உறவினர் கொண்டாட்டங்களுக்கு கோயில் திருவிழாக்களுக்கு உடுத்திப்படுத்திக் கொண்டு வீதிவலம் வருவர்! கடைத்தெருவுக்கு கடற்கரைக் கெல்லாம் உல்லாச நடை போடுவர்!

இப்படி ஆடம்பரமாகத் திரிய எக்காலமும் சரிவருமா? பொருளாதாரம்தான் இடம் கொடுக்குமா! நாட்டிலே பிரச்சினைகளும் கூட, இடம்பெயர்ந்து ஓடுவோரும் கூட, மின்சாரக்கட்டணமும் கூட, வீட்டுவேலை தளபாடவேலை செய்வாரும் குறைந்துபோக, அத்தானுக்குப் பொருள்வரவு வரவர மந்தமாகிக் கொண்டே வந்தது!

தீபாவளித்திருநாள் நெருங்கிவர இருந்தது. அக்கா புதுச்சீலை சட்டை வாங்க வேண்டும், கடைக்குப்போக வேண்டும் என்றார்!

அவர், "சித்திரை வருசத்துக்குத்தானே புதுச்சீலை வேண்டின நாம! அது இப்பவும் புதுசுமாதிரித்தானே இருக்கு! ஏன் இப்ப கிடந்து வில்லங்கப்படுகிறீர்?" "அது புதுசுமாதிரித்தான் இருக்கு எண்டாலும் உடுத்தினதையே திரும்பத் திரும்ப உடுத்திக் கொண்டிருந்தால் கொண்டாட்டத்துக்கு நல்லாயிருக்காது! திண்டாட்டக்காரர் எண்டு நினைக்கப்போகுதுகள் வாறதுகள்! பெருநாள் திருநாளில இங்க வாறவங்கள நீங்கள் கவனிக்கிற இல்லையோ? புதுசு புதுசா போட்டுவருவாங்கள்! நாங்களும் அது மாதிரிப் போடாவிட்டால் எங்களுக்கு மரியாதையில்ல!" "எங்கட எங்கட வசதிக்குத தக்கமாதிரிச் சீவிச்சுப்போட்டுப் போறதுக்கு, நீர் ஆகவும் தான் எடுப்புக்காட்டுறீர்! நாங்கள் ஆம்பிளைகளும்தான் இருக்கிறம். எப்பயோ வாங்கினதைத்தான் எப்பவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக் காட்டுவம் எங்கள ஆரும் குறைசொல்லுறதில்ல! அதைப்பற்றி நாங்கள் கவலைப்படுகிறதில்ல. நீங்கள் உடுப்புக்களையும் எடுப்புக்களையும் காட்டித்தான் பெருமை தேடப்பார்க்கிறீங்க! மனுசன் தன்ர கதை பேச்சாலையும் நடக்கிற நடத்தையாலும் தான் பேர் எடுக்கப் பார்க்கவேணும்!

"இதென்ன உங்கட கதை! நாட்டிலநடப்பில் இல்லாத கதையாயிருக்கு! உங்கள பயித்தியக்காரன் எண்டு சொல்லப்போறாங்க! விசரனக் கட்டினன் எண்டு சொல்லப்போறாங்க! உங்களுக்கும் தான் மரியாதையில்ல! பொம்பிள எண்டால், நகையும் சீலையும் சட்டையும், பூவும் பொட்டும், மினுக்கும் அலங்காரமும் தான் பொம்புள! இதப்புரிஞ்சு கொள்ளுங்க முதல்ல!......*...... சே! ஒரு சீலை வேண்டச்சொன்னதுக்கு இவ்வளவு வாக்குவாதமா இருக்கு! அப்ப, நகைநட்டக்கேட்டா எப்படியிருக்கும்? இவ்வளகாலமாச்சுது ஒரு காதுமின்னியெண்டாலும் செய்து போட்ட நீங்களோ, ஒண்டுக்கும் வக்கில்ல, பெரிசா கதைக்க வந்துற்றார் தான் பெரிய மேதாவி மாதிரி!"

"பொம்புளைகளோட வாய்ச் சண்டையில வென்ற மகாராசன் ஒருவனும் இல்ல! பட்டது போதும் பெண்ணாலே, இனிபடமுடியாது என்னாலே! இதப்பட்டினத்தாரும் சொன்னாரே!........சட்டி சுட்டதடா கை விட்டதடா.! என்று பாடிக் கொண்டே போனார் அத்தான்!

அவரைப் பாக்கப் பரிதாபமாகவே இருந்தது! நடந்த எல்லாவற்றையும் பார்த்த எனக்கு நினைக்க நினைக்க அதிர்ச்சி ஆச்சரியமாக, சிரிப்பாகவே இருந்தது! எனது அக்காவா இப்படி எல்லாம் கதைப்பவளாக மாறிவிட்டாள்! நான் அறிந்த வரையில் அக்கா அதிகம் பேசமாட்டாள்! அமைதியாக அடக்கமாகவே இருப்பாள்! வீட்டில் என்ன பிரச்சினை நடந்தாலும் அதிகம் வாய்ப்போடமாட்டாள்!

அப்படிப்பட்டவள் இப்படி எப்படி மாறினாள்! எங்கேயோ ஒரு பொன்மொழிபடித்தஞாபகம் : "பெண்கள் திருமணத்தின் பின்னேதான் வாழத்தொடங்குவார்கள். புரிந்து கொள்ளலாம் அதன் பின்னேதான்."

அக்காவுக்கு குழந்தை பிறந்துவிட்டது! பெண்பிள்ளை! இனசனம் அயல்சனம் என்று வந்து அதை இதை தந்து தங்கள் அன்பைத் தெரிவித்தார்கள்! வதனன் மூன்று மாதங்களின் பின்தான் வந்தான் பரிசுப் பொருட்களொடு. அவன் கொண்டுவந்த பரிசுப் பொருள்தான் வினோதமானது!

ஆடுகுடா என்று சொல்வார்கள்! நிறக்கடதாசிகள், மினுங்கும் குஞ்சங்கள், பலவர்ண பலூன்கள்.. என்று எல்லாம் அலங்காரமிட்டு காற்றில் அசைந்து வட்டமிட்டுச் சுழன்றாடி அலங்கார அழகுகாட்டி நிற்கும்! குழந்தை கையக்காலை விரித்து குதூகலித்து விளையாடி எல்லோரையும் பூரிக்கச் செய்யும்!

இவன் இப்படித்தான், எங்குபோனாலும் எல்லோரையும் கிறங்கச்செய்யும் ஏதோவொன்றைச் செய்து யாவரையும் கவர்ந்துவிடுவான்!

"வதனன்! தம்பியோட கதைச்சுக்கொண்டு இரு. ரீ போட்டுக்கொண்டுவாறன்," என்று சொல்லிக் கொண்டே அக்கா அடுக்களைப்பக்கம் போய் விட்டார். அத்தானும் அப்போது அடுக்களையுள் உள்ளிடுவது தெரிந்தது! அவர்கள் கதைப்பதும் எமக்கு இலேசாகக் கேட்டது.

"நம்ம பிள்ள அதிஸ்டக்காரிதான் போல இருக்கு! அவள் பிறந்த உடனே கனபரிசுப்பொருட்கள் வந்து சேருது! எனக்கும் இப்ப தொழில் கொஞ்சம் பரவாயில்ல..!" "இதுகள் எத்தின நாளுக்கு பிள்ளைகளுக்குக் காணும்! பெரிசா சந்தோஷப்பட இதில என்ன இருக்கு! ஆரும் நகை நட்டச் செய்து போட்டாங்களா எண்டால் இல்ல! மாமன் எண்டு வீட்டில இருக்கிறான். அவன் எண்டாலும் ஒண்டும் செய்து போட இல்ல! நாமதான் கவனமாயிருந்து சிக்கனமாயிருந்து பொருள் பண்டங்கள இப்ப இருந்தே சேர்க்கத் துவங்க வேணும்!

நான் கேள்விப்பட்டனான் மக்கள் வங்கியில ஒரு திட்டம் இருக்காம், குழந்தைகள்ற பேரில ஒரு ஐயாயிரம் கட்டிவிட்டால் காணும், அதுகள்ற காலத்துல பலலெட்சம் வந்து சேரும்! நாங்கள் ஒரு ஐம்பதினாயிரம் எண்டாலும் இப்ப கட்டிவிட்டம் எண்டால் எங்க போகுது கணக்கு! எங்கள ஒருவரால்யும் பிடிக்க ஏலாது! அடுத்ததும் பெட்டையாத்தான் பிறந்தது எண்டால் என்னசெய்யிறது! அதுக்கும் இப்ப இருந்தே ஆயத்தப்படுத்த வேண்டும்! சனங்கள் விட்டுவிட்டுப் போட்டு வெளிநாடு எண்டு வெளிக்கிடுதுகள்! இங்க இருக்கிறதுகள் அமத்தியடிச்சு வேண்டிச் சேர்க்குதுகள்! நாங்களும் எல்லாம் வாங்கி சேர்க்க வேணும்! நீங்களும் இனிக் கட்டுமட்டா இருக்க வேணும்! கூட்டாளிமாரக் குறைக்க வேணும்! இடைக்கிடை தண்ணி பாவிக்கிறத, பீடி சிகரட் பாவிக்கிறத, நெடுக கோழி கொண்டா ஈரல் கொண்டா எண்டு கேக்கிறத எல்லாம் கைவிட்டுப் போட வேணும்!........... இந்தா தேத்தண்ணி வைச்சிருக்கு, சீனியத் தொட்டு நக்கித்தான் குடிக்க வேணும்!"

"ஆ! இப்படியெண்டு தெரிஞ்சால் வேளைக்கே துறவியாகப் போயிருக்கலாமே!" என்று சொல்லிக் கொண்டே அப்பால் போனார் அத்தான். "இதத்தான் அண்ணே சொல்லுறது இல்லறத்துறவி எண்டு!" என்று வதனன் எனக்கு மட்டும் கேட்கக் கூடியதாக கிண்டலடித்தான்! எனக்குச் சிரிப்புத்தான் வந்தது!

எனக்கு மேலும் மேலும் ஆச்சரியம்! என் அக்காவா இப்படியெல்லாம் பேசுகிறாா. எப்படி மாறிவிட்டார்! ஒரு ஆண்துணைக்காக எப்படியெல்லாம் ஏங்கி வாடி மெலிந்து நலிந்தார்! ஆணுறவு கிடைத்தாலே போது மென்றிருந்து தவமிருந்தார்! ஆனால் இப்போது, எது எதற்காக வெல்லாமோ ஆசைப்படுகிறார்! எது எதையெல்லாமோ கேட்கிறார்! பகட்டை பெருமையை அடைய எதை வேண்டுமானாலும் செய்வார்! கணவனின் கழுத்தையும் நெருக்குவார்! எனக்கு, சிலந்தி அழகாக வலையப்பின்னி, அமைதியாக இருந்து தாமாகவே வந்துவிழும் பூச்சி பூரான்களை கையகப்படுத்துவதே மன கண்ணில் தோன்றியது!

நண்பன் வதனனை கன நாளாகக் காணவில்லை! என் இல்லம் வரவில்லை! நான் தேடிப்போயும் அவன் வீட்டில் இல்லை! எனக்கு யோசனையாகவே இருந்தது! அவன் அம்மா சொன்னார், அவன் போக்கு இப்போது வித்தியாசமாகவே இருக்கிறதென்று! தனிய இருந்து யோசித்துக் கொண்டிருப்பானாம்! சரியாச் சாப்பிடுவதும் இல்லை. முன்னர் போல் இல்ல என்றும் சொன்னார்.

வதனனைப்பற்றி எனக்குக் கூடக் குறையத் தெரியும்! அவன் ஒரு பெண்ணைக் காதலித்து வருகிறான் என்றும் தெரியும்! மின்சார இணைப்பை பெறுவதற்காக அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வயரிங் வேலை செய்ய போனான். கச்சிதமாக வேலையை முடித்துக் கொடுத்தான்! வீட்டில் எல்லோருக்கும் அவனைப் பிடித்து விட்டது! முக்கியமாக அவ்வீட்டில் சிட்டாக பறந்து திரிந்த அழகு மயில் மோகனாவுக்கு இவனை மிகவும் பிடித்து விட்டது! அவன் திறமை பழகும் விதம் எல்லாமும் எல்லோரையும் கவர்ந்துவிட்டது! அவனுக்கும்தான்! பிறகு சில நாட்களில் தொலைக்காட்சி இயங்க மறுத்துவிட்டது! வெள்ளையாகவே மினுக்காட்டியது! அதையும் வதனன்தான் புதுப்பித்துக் கொடுத்தான்! மின்சாரவிசிறி சுழலும் போது கடக்குப் புடக்கு என்று சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணும்! அதுக்கு ஏதொவொரு கொழுப்பு (கிறீஸ்) கொண்டு வந்து பொருத்துகளில் பூசி இலகுவாகவே அந்தச்சத்தத்தை இல்லாமலாக்கிவிட்டான்! இவைகளால் , இவன் இனிமையான சுபாவத்தால் மோகனா காதல் வயமானாள்! மோகனமான அவள் அழகு இவனையும் காதலில் கட்டிப்போட்டு விட்டது! அவள் வீட்டாருக்கு விசயம் விளங்கும்! தெரிஞ்சும் தெரியாதது போல இருந்து விட்டனர்! அந்தரங்கமாக வரவேற்றனர் போலும்!

இவையெல்லாம் நண்பன் சொல்லியும் சொல்லாமலும் நானறிந்த சமாசாரங்கள்! அப்போதெல்லாம் குதூகலமாகவே இருந்தான்! இப்போது மட்டும் தீடீரென்று இவனுக்கு என்ன வந்துவிட்டது! எப்படி அறிவது! நான் ஆராய்ந்து கொண்டிருக்கையில் அதற்கு அவசியமே இல்லாமல் போய் விட்டது!

திடீரென்று ஒருநாள் தொழிலாற்றும் காரியாலயமே வந்துவிட்டான்! இன்றுமாலை ஆறுமணிக்கு கடற்கரைக்குவா, கனகதைகள் பேச வேண்டியிருக்கு என்றான்!

நான் எல்லா அலுவல்களயும் புறக்கணித்துவிட்டு அவன் நினைவையே அரவணைத்துக் கொண்டு கடற்கரை நடந்தேன். நடைபயில்கையில் என்ன அப்படி அந்தரங்கமாக கதைக்கப்போகிறான்? வேறு என்ன. அவன் காதலியைப் பற்றியதாகவே இருக்கும்! இவன் வீட்டார் எதிர்க்கிறார்களோ! அதனால் தன் ஆசைக்காதலியை தன்னோடு இணைக்கமுடியாமல் பரிதவிக்கிறானோ! மோகனாவை பிரிவது என்பது மட்டும் வதனனைப் பொறுத்தவரையில் முடியாத காரியம் என்பது மட்டும் எனக்கு தெட்டத்தெளிவாகத் தெரியும்!

ஏனென்றால் அவள்மீது அவ்வளவு காதலாயிருந்தான் அவன்! ஏனென்றால் அவள் அங்க அழகை அதன் அசைவுகளை எல்லாம் வர்ணிப்பதில் கவிஞனாக மாறிவிடுவான்! அவள் அன்பை, வரவேற்பை, உபசரிப்பை இதமளிக்கும் இங்கித உறவுகளை எல்லாம் என்னிடம் தான் சொல்வான்! எனக்கும் அப்படியொரு காதலி கிடைத்திடாதா என்ற ஏக்கத்தை வளர்க்கும்!

நான் கடற்கரையை அடைந்தபோது வதனன் எனக்காகக் காத்திருந்தான்! எப்போது வந்தானோ தெரியாது! அவன் முகத்தை கூர்மையாகப் பார்த்தேன். முந்திய மலர்ச்சி அதில் இல்லை!

"ஏன்டா வரச் சொன்னாய்? அப்படி என்ன சீரியசான விசயம்!" அவன் முகமன் கூறாமல் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே விசயத்துக்கு வந்தான்.

"நான் மோகனா வீட்டுக்கு அடிக்கடி போறநான்தானே, உனக்கும் தெரியும் தானே!........ அண்டைக்கு ஒருநாள் அவள்வீட்டபோனநான். யாருமே வீட்டில இல்ல! அவள் மட்டும் தான் வீட்டில இருந்தாள். ஆரோ சொந்தக்காரர்ர செத்தவீடாம். எல்லோரும் போயிற்றாங்களாம். வரநேரம் செல்லுமாம் எண்டு சொன்னாள் மச்சான்!"

என்று சொல்லி நிறுதியவன் கடலில் அலை அடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்! எனக்கு ஆவல் அதிகரித்துக் கொண்டிருந்தது! நான் அவன் திருவாயை பார்த்துக் கொண்டிருந்தேன்! அவன் தொடர்ந்தான்: "அண்டைக்கு நல்ல சந்தர்ப்பம் வாய்ப்பாகிவிட்டது!.......... சும்மா முத்தங்கள பரிமாறி தடவிப்போட்டுவருவம் எண்டு எதிர்பார்த்துத் துவங்கினன்!........... ஆனால் ஏதோ ஒரு மந்திரசக்தி இருவரையும் கட்டிப்போட்டு ஒரு முடிவு காணாமல் விடுவதில்லை என்ற ஒரு வெறித்தனமான ஆட்டத்தை ஆட்டிவிட்டது! ஒரு சில நிமிடங்களில் எல்லாம் முடிந்து விட்டது! ஆடி அடங்கிவிட்டது!"

அவன் மீண்டும் கடலையே பார்த்தான்! அலைகள் அடித்து கரையிலே வெண்நுரைகளை தள்ளிக் கொண்டிருந்தன! "இப்போ அதுக்கு என்ன, நீ கட்டப்போற பொம்புளதானே, வீட்டாரும் சம்மதம் தானே! ஏன் வீணா யோசிக்கிறாய்?" என்று கேட்ட என்னைப்பார்த்து அவன் பரிகாசமாக சிரித்தான். " நாம பெருசா கற்பனை பண்ணி கனவுகண்டு ஏங்கி தவிச்சு எதிர்பார்த்த மாதிரி அங்கொண்டும் இல்லையடா! சொர்க்கவாசல் இதுதானெண்டு, சொர்க்கமே நீதானெண்டு, உலக அழகு எல்லாம், இன்பமெல்லாம் இங்கேதான் இருக்கு எண்டு ஏமாந்து போனன்!.... இதுதானா! இவ்வளவுதானா! இதுக்குத்தானா எண்டு இருக்கு! இதையே நினைச்சுக் கொண்டு இருந்து காலத்த முயற்சிய வீணாக்கி சரியான பின்னடைவு அடைஞ்சி நிற்கிறம்! இனித்தாலியக்கட்டி கலியாணத்தில மாட்டினம் எண்டால், எங்கட வளர்ச்சியப்பற்றி நினைச்சுப்பார்க்கவே முடியாது! சொர்க்கலோகம் போகலாம் எண்டு வந்து, குழந்தையாம் குட்டியாம் கடமையாம் கௌரவமாமெண்டு எதையெதையோ செய்து எப்படிஎப்படியோவெல்லாம் வாழ வேண்டியிருக்கும்! நாமாகவே வலிந்து தேடி ஆயுள் தண்டனைக் கைதியாகின மாதிரி இருக்கும்!" அவன் பேச்சு எனக்கு ஆச்ரியமாகவே இருந்தது! மனக்குழப்பமாகவும் இருந்தது!

"அவளோட உனக்குள்ள உறவு இப்ப எப்படி இருக்கு?" " நான் இப்ப அங்க போற இல்ல!" "இது பெரிய துரோகமில்லையா? ஒரு பெண்ணிட வாழ்க்கைய அனியாயப்படுத்திய பழி ஆகுமில்லையா! வாயில வயித்தில உண்ணடாகிற்றென்றால் என்ன செய்யப் போகிறாய்?!"

"அப்படி ஒண்டு ஆனால் ஏற்கத்தான் வேணும். மாட்டுப்படத்தான் வேணும்! நீயெண்டாலும் இதுகள்ள மாட்டுப்படாம புத்தியா நட!"

வீடு வந்து ஆற அமர யோசித்து நானொரு முடிவுக்கு வந்து விட்டேன்! "தன் அநுபவத்தில் திருந்துபவன் அறிவாளிதான்! பிறர் அனுபவத்தில் ஞானம் பெறுபவன், திருந்துபவன், அவனைவிட அறிவாளி" என்று எங்கோ படித்தஞாபகம்!

எல்லோர் அனுபவங்களும் எனக்குக் கற்றுத்தந்தபாடம் : பிரமச்சரியம்! என்னையும் உயர்த்திக் கொள்ளலாம், பொதுச் சேவையும் செய்யலாம் அன்றோ! ***(யாவும் கற்பனை)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடினேன்; ஓடினேன் வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடினேன்...

P. D. பாலரட்ணம், கண்டி.

**அந்த சில நிமிடங்கள்.....**

இரண்டு நாட்களாக ஒரு விதமான இனம்புரியாத நெஞ்சுவலி. முதன் முதல் ஏற்பட்டதனால் இரண்டாம் நாள் விடியும் வரை நித்திரையின்மையும், பலவித யோசனைகளும் வந்து மறைகின்றன.

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லாம் ஊரில்; இருதய வியாதியாய் இருக்கலாமோ! காலையில் எழுந்தவுடன் வழமைபோல் பிளேன்டீ ஒன்றைக் குடித்து விட்டு அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சென்றேன்.

அங்கு இருந்த ஒரு லேடி டாக்டர் உடனே E.C.G. யைப் பார்த்தவுடன் அந்த டாக்டர் என்னைப் பரிதாபத்துடன் பார்த்து, நீங்கள் அசைய வேண்டாம். உங்களுக்கு வேண்டிய ஒருவரை உடனே கூப்பிடுங்கள். எவ்வளவு சீக்கிரம் கண்டி பெரியாஸ்பத்திரிக்கு போக முடியுமோ அவ்வளவு கெதியாகப் போகப்பாருங்கள் நிலமை சரியில்லை என்றார். அந்த நிமிடமே எனது நெஞ்சுவலி அதிகரிக்கத் தொடங்கியது. "ஆண்டவனே நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களையெல்லாம் மன்னித்து விடும். உமக்குச் சித்தமானால் என்னை எடுத்துக் கொள்வதற்கு முன் ஒரு முறையாவது என் மனைவி பிள்ளைகளைப் பார்த்து விட்டுப் போகச் சந்தர்ப்பம் தருவீரா? என, மானசீகமாக வேண்டிக் கொண்டிருக்க, டாக்டர் வந்து இன்னும் ஒருவரும் வரவில்லையா எனக் கேட்டார். எனது நாக்கு வரண்டு போவதையும், நெஞ்சு நோ தொண்டைவரை இறுகி வருவதையும் உணர்கிறேன்.



5 நிமிடத்தில் எனது நண்பனும் வர ஆட்டோ ஒன்றில் ஏறினோம். அப்பொழுது அந்த டாக்டர் வந்து சாரதியிடம் ஆட்டாமல், அசைக்காமல் கவனமாக, கெதியாக O.P.D. க்கு செல்லுமாறு கூறினார். எனது பயம் மேலும் அதிகரித்து பெரியாஸ் பத்திரிக்குள் போவதற்கு முன்பே ஏதோ நடக்கப் போகிறது; ஆண்டவனே உமது கைகளில் எனது ஆன்மாவைக் கையளிக்கத் தயாராயிருக்கிறேன். என்னை மன்னித்து ஏற்றருள்வீராக என என்னை முழுவதும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்து விட்டேன். 20 நிமிடங்கள் சென்றிருக்கும் O.P.D. டாக்டரின் முன் நான் இருப்பதை உணர்கிறேன். எடுத்த E.C.G. யை நண்பர் டாக்டரிடம் காட்டினார். அவர் பார்த்து விட்டு "You are Perfect; There is no Abnormality in this E.C.G." இது ஒரு தசைப் பிடிப்பு நோ. இரண்டு பனடோல் போட எல்லாம் சரியாகி விடும். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் என்றார். நெஞ்சு நோ எப்படி மறைந்தது, நா வறட்சி எங்கே போனது! நான் பழைய நிலைக்குத் திரும்பி விட்டேன். இறைவனுக்கும் O.P.D. டாக்டருக்கும் நன்றி கூறிவிட்டு நண்பனுடன் வேலைக்குச் சென்றேன். ஒருவனைக் கொல்லாமல் கொன்று விட்ட அந்த லேடி டாக்டரின் தராதரம் என்னவோ!

கவிதை

# சட்டியில் இல்லாதது...

– அன்புடீன்

எல்லாவற்றையும் தெரிந்துகொண்டும்
எல்லாரையும் அறிந்துகொண்டும்
ஏன் நீ தெரியாதது போலவும்
அறியாதது போலவும்
முகத்தை
'உம்'மென்று வைத்துக்
கொண்டிருக்கிறாய்..?

இனிப்பு
கசப்பு
புளிப்பு
உவர்ப்பு

இவைகளொன்றையும் அறியாததா
உன் சுவைப்பு?
அதனாலேதானா
இல்லை உன் முகத்தில் சிரிப்பு?

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்பாய் நீ
பழகுகின்றவர்களுக்குள்
பண்பாடு இன்னும் வளர வேண்டுமென்று
குரலெடுத்துக் கூவும் உன் தொனி மிகக் கூர்

ஒரு சிறு புன்சிரிப்பை சிந்துவதற்குக்கூட
கஞ்சத்தனம் காட்டும் உன்னால்
எப்படி முடிகிறது அவ்வாறெல்லாம் கூவுவதற்கு?

அகம்தான் முகம்
எப்படி வரும்
சட்டியில் இல்லாதது
அகப்பையில் என்பதுதானா உனது விடை?

'உம்'மென்ற உன் முகத்துக்கு
வைத்தது வாயை இயற்கை
'ஆ'வென்று பிளந்து ஆகாரப் பூணாரம்
அணிவதற்கு மட்டுமல்ல;
'ஈ'யென்று கொஞ்சம் இளிப்பதற்கும்தான்
என்பதை எப்போது உணர்வாய் சொல்
அதி மேதாவித்தனம் உள்ளே உறங்கும்
எண்ணத்தில் எழுதும் ஏகாந்தப் பேனாவே நீ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அகிலி'ன் சிறுகதைத் தொகுப்பு

# கூடுகள் சிதைந்த போது...

(அணிந்துரை)

## கலாநிதி. க. குணராசா



செங்கை ஆழியான்
தலைவர், யாழ். இலக்கிய வட்டம்



### தமிழ்நாட்டில் பல்வேறு பரிசுகளைத் தட்டிக்கொண்ட 'அகிலி'ன் "கூடுகள் சிதைந்தபோது...' சிறுகதைத் தொகுப்பு

*'ஞானம்' சஞ்சிகை மூலம் ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியராகப் பரிணமித்தவர் 'அகில்'. அவரது கூடுகள் சிதைந்தபோது.." சிறுகதைத் தொகுப்புக்கு தமிழ்நாட்டின் மணிவாசகர் பதிப்பகத்தின் சிறந்த நூலுக்கான நூலாசிரியர் விருது, 'கவிதை உறவு' சஞ்சிகையின் சிறந்த சிறுகதை நூலுக்காக அமரர் சு. சமுத்திரம் விருது, புதுவை நண்பர்கள் தோட்டத்தின் இலக்கிய விருது, கவிஞாயிறு தாரா பாரதி அறக்கட்டளையின் சிறந்த நூலுக்கான விருது போன்றவை கிடைத்த நிலையில் இப்போது ஐந்தாவது விருதாக கு. சின்னப்பபாரதி அறக்கட்டளையின் இலக்கிய விருது கிடைத்துள்ளது. இந்தச் சிறுகதைத் தொகுப்புக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி முன்னுரை வழங்கியுள்ளார். கலாநிதி ந. சுப்பிரமணியன் அணிந்துரை வழங்கியுள்ளார். செங்கை ஆழியானின் வழங்கிய அணிந்துரை இங்கு பிரசுரமாகிறது.*

நாவீனப்புனைகதைகளுள் சிறுகதைகள் வெளிவருகின்ற வேகமும் எழுத்தாளர்களால் அவை எழுதப்படுகின்ற தொகையும் மிக அதிகமாகும். ஆனால் எழுதப்படுகின்ற சிறுகதைகள் சிறுகதை என்ற இலக்கியத்தின் வகைக்குள் அமையாது போகின்றன. அதற்குக் காரணம் சிறுகதை வகை பற்றிய தெளிவின்மையே ஆகும். சிறுகதை என்றால் என்ன? பெயருக்கேற்ற சிறிய இலக்கிய வகை அது. நாவலைப்போன்ற பெரியதுமன்று, அதிக சம்பவங்களைக் கொண்டது மன்று, குறுநாவலைப் போல இடைத்தரமானது மன்று. சிறுகதை என்பது சிறியதொரு சம்பவத்தை ஒருசில பாத்திரங்களுடன் குறுகிய காலத்தில் நடப்பதை விபரிப்பது. உலகின் பெரும்பாலான சிறந்த சிறுகதைகள் பெரிதும் ஒரு சிக்கலை ஏற்படுத்தி இறுதியில் அவிழ்த்து விடைகாண்பதாக அல்லது வாசகன் முற்றிலும் எதிர்பார்க்காத திருப்பத்துடன் நிறைவுறுவதாகவுள்ளன. படிப்பவன் மனதில் இறுதியில் ஓர் உணர்ச்சியை எஞ்ச விடுவனவாக நல்ல சிறுகதைகள் அமைகின்றன.

நல்ல ஒரு சிறுகதை மூன்று இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும். விமர்சகர்கள் சொல்வதைப்போல பலவற்றையல்ல. அம்மூன்று இலக்கணங்கள் வருமாறு:

1. நல்லதொரு கருவை அல்லது உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும்.

2. ஏற்றதொரு வடிவத்தை அல்லது உருவத்தைக் கொண்டிருக்கும்.

3. சிறுகதைக்குரிய நேர்த்தியைக் கொண்டிருக்கும்.

இன்றைய இளம் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளில் சிலிர்க்கவைக்கும் உள்ளடக்கத்தைத் தெரிவு செய்கிறார்கள். மற்றைய இரண்டையும் கைவிட்டு விடுகிறார்கள். சிறுகதைக்குரிய நேர்த்தி என்பது எழுத்தாளனின் ஆளுமையைப் பொறுத்தது. சிறுகதை நிகழும் களவிபரணை, நடை, உத்தி, பாத்திரங்கள், உவமானங்கள் எல்லாவற்றிற்கும் மோலாக சமூகச் செய்தி எனப் பலவற்றைப் பொறுத்தது. எனவே நல்லதொரு சிறுகதை என்பது படித்து முடிந்ததும் வாசகனிடம் எஞ்சி நிற்கின்ற உணர்வின் நிறைவைப் பொறுத்தது ஆகும்.

இந்த அடிப்படையில் எஸ். அகிலேஸ்வரனின் (அகில்) 'கூடுகள் சிதைந்த போது...' என்ற சிறுகதைத் தொகுதியைப் படித்தேன். 1983க்குப் பிற்பட்ட சிறுகதை செல்நெறிக்கால வேளையைத் தமிழ்த் தேசிய உணர்வுக்காலம் என்பர். தமிழர் சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினையாக சமூகத்தில் புரையோடிக் கிடந்த சாதியம், வர்க்கம், என்பவற்றையெல்லாம் மேவி பூதாகரமாகக் கிளர்ந்து எழுந்து நிற்கும் தமிழீழப் போராட்டம் அவ்வாறான கருத்தியலை ஏற்படத்தியுள்ளது. அது சமூகத்தில் ஏற்படுத்திய அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அவலங்களையும் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கும் சிறுகதைகள், விரும்பியோ விரும்பாமலோ "தேசியம்' என்ற உணர்வு தேய்ந்து தமிழ்த்தேசியம் என்ற உணர்வு மேலோங்கிவிட்டது. 1970 களின் பிற்கூற்றிலிருந்து மெதுவாகப் புகத்தொடங்கிய ஆயுதக் கலாசாரம், 1983 களின் இனக்கலவரத்தின் பின்னர் தவிர்க்கமுடியாத போராட்டமாக மாறிவிட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழருக்கான பாரம்பரிய ஆள்புலத்தையும், உரிமைகளையும் கோரி ஆயுதமேந்திய இளைஞர்களின் போராட்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வும் இன்று. பெரும் யுத்தமாக வெடித்து விட்டது. உயிரழிவுகள், சொத்தழிவுகள், இடம்பெயர்வு தரும் அகதிவாழ்க்கை அவலங்கள், புலம்பெயர்ந்த மக்களின் துயரங்கள்,பாலியல் வன்முறைகள், கைதுகள், கைதுகளால் காணாமற்போனோர் இழப்புகள், உளப்பாதிப்புகள், அங்கவீனமுற்றோர் துயர், அவமானங்கள் எனத் தாங்கொணாத் துயரங்களால் தமிழ்மக்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளனர். இந்த அவலங்கள் இக்காலச் சிறுகதைகளில் சித்தரிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் இனப்போராட்டம் கூர்மையடைந்து பேரினவாதம் மேலோங்கி சிறுபான்மையினம் அடக்கியொடுக்கப்பட்டு வந்தமையினால் வர்க்கப் போராட்டக் கருத்துக்கள் பின்தள்ளப்பட்டு இனப்போராட்டம் சார்ந்த தமிழ்த்தேசிய உணர்வு மேலோங்கியது. இந்த யுத்த சூழ்நிலையை உள்வாங்கிய படைப்புகள் காலத்தின் தேவையாகத் தோன்றலாயிற்று. 'இலங்கையின் பிரதான பிரச்சினையான இனப் பேராட்டத்தை இலக்கியம் பிரதிபலிக்காமல் இருக்க முடியாது. 1983இலிருந்து இனப்பிரச்சனைகளையும் அதன் வழிவரும் தாக்கங்கள் ஒவ்வொன்றையும் தவிர வேறொன்றை யும் இலக்கியம் எடுத்துக்கூறவில்லை' என்கிறார் கா. சிவத்தம்பி.1930-1949 களில் சிறுகதைகளில் யதார்த்தவாதம் முதன்மைபெற்ற கருத்தியலானது. ஆரம்பச் சிறுகதைகளில் விமர்சன யதார்த்த வாதம் முதன்மை பெற்றிருந்தது. பின்னர் சோஷலிஸ யதார்த்தவாதம் முதன்மை பெற்றிருந்தது. பின்னர் நவீனத்துவம்(மொடோனிசம்) பின்நவீனத்துவம் (போஸ்ட்மொடோனிசம்) எனும் திறனாய்வுக் கோட்பாடுகள் முதன்மை பெற்றன. சமூகக் கட்டவிழ்ப்புகள் சிறுகதைகளில் இடம்கொண்டுள்ளன. பின்வந்தோர் இக்கோட்பாடுகளைப் புரிந்துகொண்டு எழுதினர் என்று கூறமுடியாது. அக்கோட்பாடுகளின் அருட்டுணர்வுக்குட்பட்டுள்ளனர் என்பது மறுப்பதற் கில்லை.

தேசிய உணர்வுக்காலகட்டத்தில் அதற்கு இணங்கச் சிறுகதைகளைப் படைத்தவர்களில் எஸ். பொன்னுத்துரை, பத்மா சோமகாந்தன்,நந்தி, செங்கை ஆழியான், செம்பியன்செல்வன் செ. யோகநாதன், புலோலியூர். க. சதாசிவம்,கோகிலா மகேந்திரன், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை, தி.ஞானசேகரன், சுதாராஜ், கே. ஆர். டேவிட், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், மண்டூர் அசோகா, தாமரைச் செல்வி, க. தணிகாசலம், லெ. முருகபூபதி, மு.பஷீர், திக்குவல்லை கமால் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டத்துக்கு முற்றுமுழுதாக உரிமையான சிறுகதையாசிரியர் களாக, ரஞ்சகுமார், உமாவரதராஜன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம்,சோ. இராமேஸ்வரன், திருக்கோவில் கவியுவன்,ஓட்டமாவடி அறபாத், யூ.எல். ஆதம்பாவா, சித்திரா நாகநாதன், திருமலை சுந்தா, இயல்வாணன், எஸ். எச். நிஃமத், இளையவன், கனகசபை தேவகடாட்சம், வாகரைவாணன், ஒலுவில் அமுதன், மண்டூர் அசோகா, வடகோவை வரதராஜன், மொழிவரதன், எஸ் . கே .விக்னேஸ்வரன், ஏ.எஸ். உபைத்துல்லா, நற்பிட்டிமுனை பளீல், கணபதி கணேசன்,ம. ச. அருளானந்தன்,செ. குணரத்தினம், அகளங்கன், நீ. பி. அருளானந்தம், திருமலை சந்திரகாந்தி, முகமாலை சேகர், முத்து ராதா கிருஷ்ணன், வளவை வளவன், எம்.எச். அமானுல்லா, சந்திரா தனபால் சிங்கம், இயல்வாணன், சி. கதிர்காமநாதன், தாட்சாயணி, உடுவில் அரவிந்தன், முதலானோரைக் குறிப்பிடலாம். இவர்களைவிட இப்போராட்டகாலத்தில் தம்மைத் தக்கபடைப்பாளிகளாக இனம்காட்டிக் கொண்டவர்களாக




மாவை வரோதயன், வளநாடன், முல்லைக்கோணேஸ், ந.சத்தியபாலன், நா. யோகேந்திரநாதன், வதிரி இ. இராஜேஸ் கண்ணன். சு. மகேந்திரன், வன்னி மகள், முல்லை யேசுதாசன். விவேக், ஞானரதன், மலைமகள், ச. இராகவன், ந. பார்த்திபன், முதலானோரைக் குறிப்பிடலாம். இன்றைய வாழ்வின் அவலங்களை இனங்கண்டு யோகேஸ்வரி சிவப்பிரகாசம் தன் சிறுகதைகளில் சித்தரித்துள்ளார்.

ஆற்றல்மிகு புதிய படைப்பாளிகள் இன்று ஈழத்தின் சிறுகதைக்களத்துக்கு வந்துள்ளனர். முல்லை யேசுதாசன்,(ஒரு அகதியின் நாள்),விவேக் (சிறைமீட்பு) ஞானரதன்( ஒரு மயிலின் மரணம்) மலைமகள் (முருங்கையை விட்டு இறங்காதவர்கள், ஒரு கப் தேநீர்)மாவை வரோதயன் (ஒற்றைத் திருக்கல்), முல்லைக் கோணேஸ் (தீப்பிடித்த நினைவோரம் பாயும் ஆறு), ந.சத்திய பாலன் (அப்பாவும் சமகாலமும்), ந. யோகேந்திரன் (தொலைநோக்கி) வதிரி இ. இராஜேஸ்கண்ணன் (லீவு போம்) சு. மகேந்திரன் (அவன்)வன்னிமகள் (கௌரவம்) அகில் (பெரிய கல்வீடு) முதலான புதிய படைப்பாளிகளின் சிறுகதைகள் நெஞ்சை அதிர வைக்கின்றன. இவர்களுடைய சிறுகதைகளில் உணர்வுபூர்வமான சித்தரிப்புகளைக் காணமுடிகிறது. அவை சுய அனுபவ வெளிப்பாடுகளாக வந்துள்ளன. ஈழத்தின் சிறுகதை இலக்கியம் எதிர்காலத்தில் வறிதாகிவிடாது என்பதை இவை உறுதிப்படுத்துகின்றன.

தமிழ்இலக்கிய ஆக்கங்களை இலகுவில் அடையாளம் காண்பதற்காகவும் வகைப்படுத்திக் காண்பதற்காகவும் தமிழ்நாட்டு இலக்கியம், மலேசிய இலக்கியம்,ஈழத்து இலக்கியம், என்று அவற்றினைச் சுட்டிப்பெயரிட்டு அழைக்கிறோம். அதேபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலிருந்து இடம்பெயர்ந்து ஆக்குகின்ற எழுத்துக்களை புலம்பெயர் இலக்கியங்கள் என்று அழைக்கிறோம். ஈழத்தில் வாழ்வது பாதுகாப் பில்லை என்ற பயத்தினால் சிலரும், பொருள்தேடும் நோக்கினோடு சிலரும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர், அவர்களில் ஈழத்தின் உன்னத எழுத்தாளர்களும் அடங்கினர். கனடாவிலும் ஜேர்மனியிலும் பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் நோர்வேயிலும் அதேபோன்று வேறுநாடுகளிலும் அகதிகளாக அடைக்கலம் புகுந்த கையோடு அவர்கள் எழுதிய ஆக்கங்கள், தமது மனக்காயங்களைப் படைப்புகளில் இறக்கிவைத்து வடிகால்காணும் ஈழம்சார் படைப்புகளாக உயிர்த்துடிப்போடுவிளங்கின. அவை ஈழத்து இலக்கியத்துக்கு அணிசேர்த்தன.

இன்று முதன்மை பெற்று வருகின்ற புலம்பெயர் இலக்கியங்கள் இருவகையான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. ஆரம்பகால இலக்கியங்கள் ஈழம்பற்றிய புனைகதைகளாகவும், கவிதைகளாகவும் இருந்தன. ஈழத்தில் தம் அனுபவங்களையும் வாழ்ந்த வாழ்வின் இனிமைகளையும் அவைபேசின. பின்னர் அவர்கள் ஈழம்பற்றி எழுதியவை பார்வையாளர்களின் குறிப்புகளாக இருக்கின்றன. ஈழத்தின் துயரங்களை இன்றைய வாழ்வியலை இத்துயரங்களுக்கிடையில் வாழாமல் பதிவு செய்ய முடியாது. பட்டினி தேசமாக மாறிவிட்ட யாழ்ப்பாணத்தின் துயரங்கள் தெரியுமா? தீ விட்டெரியும் கிழக்கின் அவலங்களைக் கற்பனையில் காணமுடியுமா? நாசிமுகாம்களுக்கு இழுத்துச் செல்வதுபோன்ற அவலங்களை அனுபவிக்கமுடியுமா? வீதிகளில் அவமே செத்துக்கிடக்கும் இளைஞர்களின் சடலங்கள் வெளியிடும்கனவுகளை உணரமுடியுமா? இன்னமும் எவ்வளவு காலத்திற்குத்தான் கேள்வி ஞானங்களையும் தம்முன்னைய அனுபவங் களையும் வைத்து எம்மவரின் தாங்கொணாத் துயரங்களை புனைகதைகளாகவும் கவிதைகளாகவும் வடித்து தமிழ்நாட்டின் அப்ளாஸைப் பெறப்போகிறார்கள்? அவை ஈழத்துத் தமிழ் இலக்கியங்களல்ல. ஈழம்பற்றிய தமிழ் இலக்கியங்கள். அது அ. முத்துலிங்கத்திற்கும் பொருந்தும் அதேபோல எஸ். பொன்னுத்துரை, வி.கந்தவனம்,அரவிந்தன், ஷோபாசக்தி,ஜெயபாலன், சேரன் முதலான ஆற்றல்வாய்ந்த புலம்பெயர் இலக்கியம் படைக்கும் அனைவருக்கும் பொருந்தும். சவால்களுக்கிடையே வாழ்ந்துகொண்டு எரியும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக்கொண்டு படைக்கப்பட்டு வருகின்ற இன்றைய ஈழத்து எழுத்துக்கள் புலம்பெயர் படைப்பாளிகளின் சர்வதேசத்தளத்திற்கும், இடப்பெயர்வில் எதிர்கொண்ட பலதரப்பட்ட அனுபவத் துயரங்களுக்கும், அவர்களின் மனக்காயங்களின் பாசாங்கற்ற மொழிக்கும் ஈடுகொடுக்க முடியாதவை தான். ஈழத்து எழுத்துக்கள் கால பயத்தக்கு உட்பட்டவை. அவற்றில் ஈழத்துச் சமூகவாழ்வின் அவலங்கள் சித்தரிக்கப்பட்டாலும் களத்தின் உண்மை நிலைமைகளை பூரணமாகப் பேசத்தயங்கு கின்றன. ஆனால் புலம்பெயர் படைப்பாளிகளுக்கு, பூரணமான எழுத்துச் சுதந்திரம் இருக்கிறது. உயிருக்குப்பயந்து இந்த மண்ணைவிட்டு அகன்றாலும் உயிர்வாழ்தலுக்கான உத்தரவாதம்

**ஆசிரியரின் உரைநடை மிக எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கின்றது. அவரது உரை நடையில் ஓர் இலக்கிய அழகு காணப்படுகிறது. தனக்கு அறிமுகமான பகைப்புலத்தை விவரிக்கும்போது அவர் எழுத்தில் தனி அழகும் தனிக்கம்பீரமும் வந்து விடுகின்றது.**

அந்நாடுகளல் இருக்கிறது. எதையும் எப்படியும் அவர்களால் எழுதிவிடமுடிகிறது. ஈழத்து எழுத்தாளனின் கரங்கள் கண்ணுக்குத் தெரியாத தளையினால் இறுகக் கட்டப்பட்டுள்ளன. அவ்வாறான தளையை ஈழத்துப் படைப்பாளி தனக்குத்தானே இட்டுக் கொண்டுள்ளான்.

புலம்பெயர் படைப்பாளிகளில் புனைகதைத் துறையில் ஷோபாசக்தி, அகில்,பொன். கருணாகர மூர்த்தி மட்டுவில் ஞானக்குமாரன், வீ.ஜீவகுமாரன் ஆகியோர் கவனத்தைக் கவர்ந்த படைப்பாளிகளாக வுள்ளனர். அவர்கள் மனம் ஈழத்தில் கண்டுள்ள கடுங்காயங்கள் அவர்களின் படைப்புக்களின் ஆத்மாகவுள்ளன. சாதிய அடக்கு முறைகளையும் அகதிவாழ்வின் மனநிலைப்புலம்பல்களையும் வார்த்தைகளிலும், புகலிடம், தேசிய வாதம் என்பவற்றை விமர்சிக்கும் படைப்புகளாக வுள்ளன. ஆனால் அவர்கள் ஒட்டுமொத்தமாக தமது புனைகதைகளிலும் வார்த்தைகளிலும் சமூகத்தின் ஒருபகுதியினரை கே. டானியல் போலத்தூக்கி வீசுவது படைப்பாளியின் சமநிலைத் தளும்பலாகப்படுகிறது. 'உலகத்தமிழ் இலக்கியத்துக்கு ஈழத்தவர்கள் தலைமை தாங்குவார்கள்' என்ற பேராசிரியர் கா . சிவத்தம்பியின் கூற்று ஏற்றதாக மாறலாம். ஏனெனில் ஈழத்துப் படைப்பாளிகள் சவால்களுக்கிடையில் வாழ்கிறார்கள்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற பழைய படைப்பாளிகளில் அ.முத்துலிங்கம், எஸ். பொன்னுத்துரை, லெ.முருகபூபதி,ஆ. பாலமனோகரன், நடேசன், தேவகாந்தன்,ஆசி. கந்தராசா, யோகா பாலச்சந்திரன், விஜயராணி முதலியோரைவிட, புதிய புலம்பெயர்படைப்பாளிகளான அகில், ஜீவகுமாரன், கருணாகரமூர்த்தி ஞானக்குமாரன்,சிறீஸ்கந்தராஜா, ஜோதிலிங்கம், துறையூரான் அரவிந்தன், கணேசலிங்கம்,நவசோதி யோகரட்ணம் முதலானோர் தாம் வாழ்கின்ற நாட்டில் தாம் அனுபவிக்கும் துயரங்களை எழுதிவருகிறார்கள். முழுமையாகப் புலம்பெயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களைப் படிக்கின்ற வாய்ப்பு ஈழத்தவர்களுக்கு இல்லை என்பதையும் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். ஆனால் படிக்கக் கிடைத்த படைப்புகள் பிடித்துக் கொள்கின்றன. அதேவேளை அவை கனடிய தமிழ் இலக்கியமாகவும், ஜேர்மனியத் தமிழ் இலக்கியமாகவும், பிரான்சிய தமிழ் இலக்கியமாகவும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கியமாகவும் உள்ளன. புலம்பெயர் தமிழ் இலக்கியம் இன்று எழுதுகின்ற பரம்பரையுடன் முற்றுப் பெற்றுவிடும். அதன்பின்னர் வருவது அந்தந்த நாட்டு மொழிகளில் ஈழத்துத் தமிழரின் வம்சாவழியினரின் எழுத்துக்களாக அமையும்.அவர்கள் தமிழில் எழுதப்போவதில்லை.

அகிலின் 'கூடுகள் சிதைந்தபோது...' தொகுதியில் பதின்னான்கு சிறுகதைகள் இருக்கின்றன. அவற்றில் வலி, அம்மா எங்கே போகிறாய்? ரேடியோப் பெட்டி, பெரிய கல்வீடு, இது இவர்களின் காலம் என்பன புதிய களத்தை அறிமுகப்படுத்தும் அற்புதமான சிறுகதைகளாக இருக்கின்றன. இவற்றை விட மற்றைய கதைகளான கூடுகள் சிதைந்தபோது, பதவி உயர்வு , கண்ணீர் அஞ்சலி என்பன சுமாரானவை. உறுத்தல், அண்ணாநகரில் கடவுள் என்பவற்றின் கருக்கள் ஏற்கனவே வாசித்த பழைய எழுத்துக்களை நினைவு படுத்துகின்றன. ஈழத்தின் புனைகதைத் துறைக்கு நம்பிக்கை தரும் இளம் குருத்துகளின் முதல்வரிசையில அகில் இருக்கின்றார். அதனால் அவரை எனக்கு நன்கு பிடித்திருக்கின்றது. தாய்நாட்டை தான்புரிந்த வகையிலும் புகலிட நாட்டை நாம் தெரிந்து கொள்ளும் வகையிலும் தன்சிறுகதைகளில் சித்தரித்துள்ளமை சிறப்பாகவுள்ளன. வலி என்ற சிறுகதையில் அறிமுகமாவது புதிய களமாகும். நமக்கு மாமிசமாகும் விலங்குகள் அதற்குரிய களத்தை அடையுமுன்னர் அவை அனுபவிக்கும் வலியை புலம்பெயரும் நம்மவரின் அனுபவத்துடன் ஒப்பிட்டுக் காட்டியிருப்பதும் அதனால் எடுக்கும் முடிவும் விதந்துரைக்கத்தக்கது. புலம்பெயர் நாடுகளில் வாழும் பிள்ளைகளுடன் வாழ நம்பிக்கையுடன் செல்லும் தாய்நாட்டுப் பெற்றோரின் நம்பிக்கையும் அவர்கள் பிள்ளைகளால் பந்தாடப்படுகின்ற யதார்த்தத்தையும், 'அம்மா எங்கே போகிறாய்?' என்ற சிறுகதையில் எடுப்பாகக் காட்டியுள்ளார். புலம்பெயர் நாடுகளுக்குப் பெரும் நம்பிக்கைகளோடு போன நம் வயோதிபர்கள் பலர் சோகத்தோடு திரும்பிவந்தமைக்கான மெய்க் காரணத்தை நாம் அறிய வைத்துள்ளார். குடும்பவாழ்வின் சிறப்பினை ஒருவயோதிபமாதின் உணர்வு மூலம் புரிய வைக்கின்ற நல்லதொரு சிறுகதையாக 'ரேடியோப் பெட்டி' உள்ளது. அகிலின் இம்மூன்று கதைகளும் நமக்குப் பரிச்சயமற்ற அந்நியக் களத்தைக்காட்டுகின்றன.இத்தொகுதியிலுள்ள மிக யதார்த்தமானதும் சிறப்பானதும் நாம் அடிக்கடி பேசிக் கொள்வதோடு நின்றுவிடுவதுமான பிரச்சனை பெரிய கல்வீடு கதையில் காணலாம்.ஈழத்தின் தீவுகளில் இன்று எரியும் பிரச்சினையாக ஆளில்லாத யாழ்ப்பாணத்தில் சொகுசாக வாழப்பழகிவிட்ட சாதிமான்களின் கல்வீடுகள் வெற்றிடமாக உள்ளன. அப்பிரச்சனைக்குத் தீர்வாக பெரிய கல்வீடு என்ற சிறுகதையுள்ளது.

அகிலின் கதைகளில் பெரிதான உத்திகள் கையாளப்படவில்லை. சிறுகதைகளில் மூவகையான உத்திகள் கையாளப்படுகின்றன.தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற வரிமுறையில் சாதரணமான ஒழுங்கு முறையில் தான்கருதிய கருத்தை விபரித்துவிடும் சிறுகதைகள் பலவுள்ளன. தன்னிலையாக அல்லது படர்க்கையாக அல்லது பாத்திரங்கள் வாயிலாக விபரித்தல், கடிதங்களை மூலமாகக்கொண்டு கடிதமூலம் கதையை விபரித்தல் இன்னொருமுறை உத்தி. இன்னொருவகை உத்தி நனைவோடை உத்தியாகும். தான்கண்டதை, உணர்ந்ததை, சொன்னதை வைத்து கருவோடு சம்பந்தப்பட்டவற்றை எண்ணுவது இதுவாகும். இந்த உத்தியில் காலநீட்சி கவனிக்கப்படுவதில்லை. அகிலின் சிறுகதைகளில் சாதாரண உத்தியே கையாளப்பட்டுள்ளது. தான்கருதிய கருவை ஒழுங்கு முறையில் விபரித்துள்ளார். கருவை நெகிழ்த்தாது கதையை விபரிக்கும்பாங்கு கதாசிரியருக்குக் கைவந்துள்ளது. இந்த விபரணை முறைக்குக் கதாசிரியர் நல்ல கதை சொல்லியாக இருக்கவேண்டும். அந்த வகையில் மிகச்சிறந்த கதை சொல்லியாக அகிலுள்ளார். 'கூடுகள் சிதைந்த போது..' சிறுகதைகள் நல்ல கதைசொல்லியால் எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியரின் உரைநடை மிக எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கின்றது. அவரது உரை நடையில் ஓர் இலக்கிய அழகு காணப்படுகிறது.தனக்கு அறிமுகமான பகைப்புலத்தை விவரிக்கும்போது அவர் எழுத்தில் தனி அழகும் தனிக்கம்பீரமும் வந்து விடுகின்றது. ஆற்றொழுக்காக விபரணைகள் தனிச் சோபையைத் தருகின்றன. தனக்குப் பரிச்சயம் இல்லாத சூழலை ஆசிரியர் கற்பனை செய்து விபரிக்க முயலவில்லை. 'கூடுகள் சிதைந்தபோது' என்ற சிறுகதையில் ஆசிரியர் கையாளும் உரைநடை தனித்துவமானது.

அகிலின் சிறுகதைகளில் அறிமுகமாகும்' 'நான்', 'மனைவி', 'மகள்', 'உறவினர்', 'நண்பர்' ஆகிய பாத்திரங்கள் தம்மளவில் முழுமையானவை. 'அம்மா எங்கே போகிறாய்?' கதையில் வரும் வயோதிபப் பெண், 'பெரிய கல்வீட்'டில் வரும் மகாலிங்கம்,தங்கம், 'இது இவர்களின் காலம்' கதையில் வரும் பிரதீப், தீபா, 'தேடலில்' வரும் முரளி ஆகிய பாத்திரங்கள் யதார்த்தமான பாத்திரங்கள். நாம் சந்திக்க வேண்டியவர்கள்.முரண்பாடில்லாமல் சிறுகதைகளில் நடமாடுகிறார்கள்.பாத்திரப்படைப்பில் அகில் வெற்றிகண்டுள்ளார்.

நல்லதொரு சிறுகதையின் நேர்த்தியை கதாசிரியர் கையாளும் உவமைகளிலிருந்தும் சூழல் வருணனைச் சிறப்புகளிலிருந்தும் கலையழகுவாய்ந்த உரைநடையிலிருந்தும் முரண்பாடில்லாத பாத்திரங் களிலிருந்தும் புரிந்து கொள்ளலாம். இவ்வகையில் முதலிரண்டும் அகிலின் கதைகளில் அரிதாகவுள்ளன. ஆசிரியர் வருங்காலத்தில் கவனம் கொள்ள வேண்டியவை இவை.

நிறைவாக அகிலின் சிறுகதைகள் ஈழத் திலக்கியத்துக்கு பங்களிப்புச் செய்வன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேங்காய்கு மூணு கண்கள் ஈப்பதப் போல எனக்கும் ஏண்ட மூணு புள்ளகளும் மூணு கண்கள்."

தமது பிள்ளைகளைப் பற்றி பெருமிதமாகக் கதைக்கும் மற்றைய தாய்மார்களைப் போலவேதான் ஜென்னத் உம்மாவும் இருந்தாள்.

"மகனும் லண்டனுக்குப் பெய்த்து ஆறு வருஷமாகுது. போனத்துல ஈந்து கெழம தோறும் என்னோடயும் அவன்ட வாப்பாவோடயும் தவறாமல் போன்ல கதச்சுவான். சொக துக்கங்களக் கேப்பான். மாசந்தோறும் எனக்கு வேற அவருக்கு வேற எண்டு நூறு பவுண் காசும் அனுப்பி வச்சுவான். ஏலெட்டு மாசத்துக்கு முந்தி லண்டனுல ஈர அரபிக் குடும்பமொண்டுல புள்ளயொன்டுக்கும் அவனுக்கும் கலியாணமும் நடந்தீக்கு. கலியான போட்டோ எல்லாத்தையும் அனுப்பி வச்சீந்தான். பொண்ணும் நல்ல அழகான புள்ளயொன்டு. அறபிக்குப் பொறந்த புள்ளயல்லென். போட்டோவுல மகனும் அரபியொன்டப் போலவேதான் ஈக்குறான். ஆறு வருஷத்துக்கு முந்தி அவன் இங்க ஈந்து லண்டனுக்குப் போகக்குள்ளயும் ஒசரத்துக்கு ஒசரமா, பெருப்பத்துக்கு பெருப்பமா அரபியொன்டப் போலதானே ஈந்தான்."

"மகளும் கொழும்புல பெரிய உத்தியோக மொன்று பாக்கிறா. அவக்கு கிட்டத்தில பரமோஷனோ என்னமோ ஒன்டு கெடச்ச என்டு கேள்விப்பட்டு, நானும் அவரும் அவவ பாத்திட்டு வர கொழும்புக்குப் போனோம். ஏண்ட உம்மோ வானம் வரக்கிம் ஒசந்த கட்டடம் ஒன்டு, அந்தக் கட்டடத்த அப்பிடியே எயார்கண்டிஷன் பண்ணி, அதுல ஒரு ரூம்ல ஏண்ட மகள் கம்பீரமா ஈந்து வேல செஞ்சிக் கொண்டு ஈந்தா. கண்ணூறு வாயூறு இல்ல. கைக்குக் காலுக்கு எல்லாம் வேலக்காரரு ஈந்தாங்க. அவக்கு கெடச்ச மாப்பிளயும் நல்ல கொணநலம் உள்ள ஆள். அவரும் கொழும்புல என்னமோ பெரிய உத்தியோகமொன்டாம். இனி அன்டு எக ரெண்டு பேரயும் கொழும்புல நல்ல ஹோட்டல் ஒன்டுக்குக் கூட்டிக் கொண்டு பெய்த்து புரியாணிச் சாப்பாடும் வாங்கித் தந்து, அவட காருளேயே பஸ்ஸுக்கும் கோந்து உட்டா. கொழும்பு ரோட்டெல்லாத்துலயும் ஏண்ட மகள் கார் ஓட்டிக் கொண்டு வந்ததப் பாக்க, என்ன விட மகள்ட வாப்பாவுக்குத்தான் சந்தோஷம் அதிகமா ஈந்திச்சி. 'வந்ததும் வந்தாச்சி, ஒரு நாளெய்க்கு கொழும்புல நின்டு போங்கோ உம்மா, நின்டு போங்கோ வாப்பா' என்டு மகள் மல்லுக்கட்டியும் ஊட்டுல சின்ன மகன் மட்டும் தனியா நிக்குறானே என்டு நாங்க ரெண்டு பேரும் கொழும்புல நிக்காம ஒடனே வந்துட்டோம்."

"பொறப்பு வாசீல சின்ன மகன்ட கால் ரெண்டும் ஊனமாப் போனத்துக்கு அவனும் நல்ல ஊக்கமுள்ள புள்ள. சின்ன வயசுல ஈந்தே ஊதுபத்தி சுத்தப் பழகி இப்ப பத்துப் பன்னெண்டு ஊர்ப் புள்ளகளுக்கு தொழிலுக்கும் வழிகாட்டி ஈக்குறான். ஏன்ட மூணு புள்ளகளுக்கும் அல்லாட கிருபயும் பரக்கத்தும் இன்னும் இன்னும் கெடச்ச நீங்களும் துவாச் செஞ்சி கொள்ளுங்கோ."

உற்றார், உறவினர், அயலவர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் யார் எவர் எங்கு சந்தித்தாலும் தனது பிள்ளைகளின் சிறப்புக்களையும் அந்தஸ்த்துக்களையும் அவர்களிடம் எடுத்துக் கூறுவதில் ஜென்னத் உம்மாவின் உள்ளம் பெருமிதம் கொண்டிருக்க வேண்டும்.

ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற தனது கணவனுடனும் கால் இரண்டும் ஊனமுற்ற தனது சின்ன மகனுடனும் வாழ்ந்து கொண்டிருந்த ஜென்னத் உம்மா அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் நன்மதிப்பைப் பெற்றவளாகவே காணப்பட்டாள். கடனுக்கு நூறு இரு நூறு ரூபாய் பணம், அரிசி ஒரு கொத்து, தேங்காய் ஒன்று எனக் கேட்டு வரும் அக்கம் பக்கத்தில் உள்ள ஏழை எளிய மக்களை முகம் கோணாது வரவேற்று அவர்களின் தேவைகளை எப்போதும் அவள் நிறைவேற்றி வைத்தாள்.

அன்றொரு நாள் மஹ்ரிபுத் தொழுகையை முடித்துக் கொண்ட ஜென்னத் உம்மா சாம்பிராணிச் சட்டியுடன் முன்வாயில் வரை வந்து வெளியே எட்டிப் பார்த்தாள். அங்கே தனது பார்வைக்கு எட்டிய தூரத்தில் சின்ன மகன் இருக்காததையிட்டு அவளின் நெஞ்சம் படபட என அடித்துக் கொண்டது.

சாம்பிராணிச் சட்டியை கதவு மூலையில் வைத்த ஜென்னத் உம்மா, சமயல் அறைக்குள் சென்று இரவுக்கான சமயலில் ஈடுபட்டாள். காலையில் தன்னிடமும் சொல்லிக்கொள்ளாது எங்கோ சென்ற சின்ன மகன் அது வரை வீடு வந்து சேராததனால் ஒருமுகமாக சமயல் வேலைகளில் கூட அவளால் ஈடபட முடியாமலிருந்தது.

"சின்ன மகன் எங்க பெயித்தீப்பான்?"

அவளின் சிந்தனை பலவாறு சுழன்றது. மஹ்ளரிபுத் தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் சென்ற அன்சார் ஆசிரியர் இஷாத் தொழுகையையும் முடித்து விட்டுத்தான் வீடு வந்து சேர்ந்தார்.

# பறந்து செல்லும் பறவைகள்

சிறுகதை



- உ. நிசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜென்னத், மணியும் எட்டாகுது. எங்க இவன் சின்ன மகன்? எங்க பெயித்தான்?"

"எனக்கிட்டயும் செல்லாமக் கொள்ளாம பத்து மணிக்கால ஊட்ட உட்டு வெளியே போன சின்ன மகனார் இன்னமும் ஊடு வந்து சேர இல்ல. இமட்டு நேரமும் நானும் வழிபாத்துப் பாத்துத்தான் இது ஈக்குரேன். அல்லாட காவல். அவன் வந்து சேருவான். நான் முன் வாசல்ல ஈக்குரேன். மகள்ட வாப்பா நீங்க பெய்த்து சாப்பிட்டிட்டு வாங்கோ."

அன்சார் ஆசிரியர் இரவுச் சாப்பாட்டை எடுக்க உள்ளே செல்ல, ஜென்னத் உம்மா மகனின் வருகையை எதிர்பார்த்து வாசற் படியில் உட்கார்ந்து கொண்டாள்.

"சின்ன மகன் எங்க பெய்த்தீப்பான்? ரெண்டு மூணு நாளா 'உம்' என்டு மொகத்த வச்சிக் கொண்டு ஈந்தான். ஏன்ட மொகத்துப் பாத்து கதச்சப் பேசவும் இல்ல. அவன்ட கால் ரெண்டு ஊனமாப் போனாலும் நாங்க நாங்கதான். எகட அந்தஸ்த்து என்னத்தென்? ஹனிபாட அந்தஸ்த்து என்னத்தென்? சுமயா சிறுக்கி சின்ன மகனுக்கு கண்ண வாயக் காட்ட அவன் ஏமாந்து போனதுக்கு ஹனிபாவோட நாங்க எப்படியென் சம்பந்தம் வச்சிற. நான் ஒரு பிழ விட்டுட்டேன். சின்ன மகனுக்கும் சுமயா சிறுக்கிக்கும் எடயில ஈந்த விஷயங்கள மகள்ட வாப்பாட்ட ஈந்து மறச்சி வச்சிட்டேன். அது தப்பு என்டது இப்பதான் இருந்தது. அதனால் ஜென்னத் கோப்பியை ஊற்றி எடுத்து வரும் வரைக்கும் அவர் அன்றைய பத்திரிகையை எடுத்து வாசிக்கத் தொடங்கினார்.

"மகள்ட வாப்பா, இந்தாங்கோ கோப்பி, குடிச்சிட்டு இறீங்கோ."

பத்திரிகையை மடித்து பக்கத்தில் வைத்த அவர் கோப்பியைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டார்.

ஜென்னத் உம்மா பக்கத்தில் இருந்த வெற்றிலைச் செப்பை மடியில் வைத்த வண்ணம் அவரின் காலடியில் அமர்ந்து கொண்டாள்.

"மகள்ட வாப்பா கோப்பியக் குடிச்சிட்டு மிஞ்சுறத்துல ஒரு சொட்டு எனக்கும் தாங்கோ."

அன்சார் ஆசிரியர் மிகவும் சுவைத்தபடி கோப்பிக் கோப்பையில் முக்கால் பங்கைக் குடித்து முடித்தார். அதன் பின் தன் கணவரிடம் இருந்து மீண்டும் கோப்பிக் கோப்பையை பெற்றுக் கொண்ட ஜென்னத் உம்மா அதில் எஞ்சியிருந்த கோப்பியை மிக விருப்பத்தோடு குடித்தாள்.

"கோப்பி நல்ல மணம் கொணமாயீக்கு. ஜென்னத் ஒகட கை படுற எல்லாம் அப்படித்தான்."

கணவனின் இது போன்ற வார்த்தைகளால் அன்றாடக் கஷ்ட நஷ்டங்களைக்கூட அவள் ஒரு கணம் மறந்து விடுவாள்.



**உம்மா, வாப்பா என்டு செல்றது உம்மாக் குருவியொன்டையும், வாப்பாக் குருவியொன்டையும்போல. புள்ளகள் குஞ்சுக் குருவிகளப் போல. குஞ்சுக் குருவிகள் உம்மா குருவியையும் வாப்பாக் குருவியையும் உட்டுட்டு பறந்து போறதப்போலதான், புள்ளகளும் அவங்கட கற்பனைக்குள்ள வளர்ந்த உலகமொன்டுக்கு பறந்து போறாங்க. அதப் பத்தி நாங்க கவலப்படத் தேவ இல்ல."**

வெளங்குது. புள்ள குட்டிகளப் பெத்து வளக்கிறத்தவிட கஷ்டமா ஈக்கு, அதுகளுக்கு ஜோடி சேத்தி உடுறது. சரி பாப்போம், அல்லா ஈக்குறான்."

இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட அன்சார் ஆசிரியர் முன் வாசலுக்கு வந்து கதிரையொன்றில் அமர்ந்து கொண்டார்.

"முன் கதவ மூட வானாம். மகன் இப்ப வருவான். குசினீல சின்ன வேலயொன்டு ஈக்கு. அதச் செஞ்சிட்டு ஒகளுக்கு சூடா கோப்பி ஒரு கோப்பயும் ஊத்தி எடுத்துட்டு ஓடி வாரேன்."

"எனக்கு அவசரம் ஒன்டும் இல்ல. இப்பதானே சாப்பிட்டேன். ஆறுதலா எடுத்திட்டு வாங்கோ."

இரவுச் சாப்பாடு முடிந்ததும் கோப்பி ஒரு கோப்பை குடிப்பது அன்சார் ஆசிரியரின் தினசரிப் பழக்கமாக

அன்று தன்னுடன் ஏற்பட்ட மனக் கசப்பில்தான் சின்ன மகன் எங்கேயாவது போயிருக்க வேண்டும் என அவளின் உள் மனம் அவளுக்குச் சொன்னாலும், அதை தனது கணவனிடம் காட்டிக்கொள்ள அவள் விரும்பவில்லை. அவள் தனது கணவருக்கு வெற்றிலை ஒரு வாய் தயாரித்துக் கொடுப்பதற்கு பாக்கொன்றைத் தெரிந்தெடுத்து அதைச் சீவத் தொடங்கினாள்.

"ஜென்னத் நீங்களும் முப்பத்தைந்து வருஷமா இரவுச் சாப்பாட்டுக்குப் பெறகு தவறாம கோப்பியும் ஊத்தித் தாரீங்க. வெத்திலயும் மடிச்சித் தாரீங்க."

"முப்பத்தைந்து வருஷமா ஸ்கூலுக்குப் போகக்குள்ள காலேல கைலேஞ்சி மடிச்சித் தந்த விஷயத்த மறந்தீட்டீங்க போல."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மதான். ஸ்கூலுக்கு இப்ப போகாததனால அத மறந்திட்டேன் போல. அது சரி ஜென்னத், அன்டெய்கு நாங்க மகளப் பாக்க கொழும்புக்குப் போனோமல்யா? அப்ப மகள் நடந்துகொண்ட விதம் ஏன்ட மனசுக்கு புடிச்ச இல்ல ஜென்னத்."

"அதுகள் இன்னமும் சின்னப் புள்ளகள். நீங்க அதொண்டயும் பெரிசாக் கணக்கெடுக்க வாணாம். மகள்ட வாப்பா."

"நீங்க நல்ல கத கதைக்குறீங்க. அவ என்ன இன்னும் சின்னப் புள்ளயா? இப்ப அவ ஒரு பெரிய எஸ்.எல்.ஏ.எஸ். அதிகாரி. அந்தப் பெரிய ஓபீஸ்ல மந்திரிமார்கூட அவட ஆலோசனபடித்தான் நடந்து கொள்ராங்க. எகட மகள் அப்பிடி ஒரு பெரிய ஒபீஸ்ல உக்காந்து வேல செய்யிற அழகப் பாக்கத்தானே நாங்களும் அங்க போனோம். 'என்னத்துக்கென் வாப்பா, உம்மாவையும் கூட்டிக் கொண்டு ஒபீஸ்க்கு வந்தீங்க. செல்லி அனுப்பி ஈந்தா நான் ஊட்டுக்கு வந்து ஓங்க ரெண்டு பேரயும் பாத்திட்டு வந்தீக்க மாடேனா?' என்டு அவ செல்லக்குள்ள அவட உள் நோக்கம் என்ன என்டு எனக்கு வெலங்கிப் போச்சு."

"இந்தாங்கோ இந்த வெத்திலய வாயில போட்டுக் கொண்டு மிச்சமுள்ளதப் பேசுங்கோ."

அளவான பாக்கு, அளவான சுண்ணாம்பு என்பவற்றுடன் சிறிய புகையிலைத் துண்டொன்றும் ஏலக்காய் ஒன்றும் வைத்து மடிக்கப்பட்ட வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்டு மீண்டும் அவர் கதைக்கத் தொடங்கினார்.

"ஜென்னத் அன்டெய்க்கு மகள் அவட காருள எகள ஏத்திக் கொண்டு பஸ் வரைக்கும் வந்து வழி அனுப்பி வச்சது ஏதோ என்ட மனசுக்குக் கொஞ்சம் சந்தோஷமா ஈக்கு. ஆனால் அந்த நேரத்துல கூட வாங்கோ வாப்பா, வாங்கோ உம்மா ஊட்டுக்குப் பெயித்திட்டுப் போவோம் என்டு அழச்சாதது மனசுக்கு வருத்தமாகவும் ஈக்கு. அதோட கொழும்புக்கும் பெயித்ததும் பெயித்தோம். பேரன் பேத்தியக் காணக் கெடச்ச இல்லியே என்ட வருத்தமும் ஏன்ட மனச இன்னமும் கொடஞ்சிக் கொண்டேதான் ஈக்கு."

"மகள்ட வாப்பா, உந்த விஷயமெல்லாம் ஒகட மனசுலயும் ஏன்ட மனசுலயும் ஈந்துட்டுப் போகட்டும். வெளியில தெரியவந்தா புள்ளகளுக்குச் சரியில்ல. புள்ளகள் அப்படித்தான். நேத்து நான் லண்டனுக்கு கோல் ஒன்டு எடுத்து 'பெரிய மகனே கெழமக்கி ஒரு தடவயாவது எகளோட பேசு வாப்பா' என்டத்துக்கு அவன் 'உம்மா, கெழம தோறும் கோள் எடுத்து ஒகளோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுறதுக்கு நான் என்ன இன்னமும் சின்னப் புள்ளயா' என்டு கேக்கிறான்."

"கேப்பானுகள், கேப்பானுகள், புள்ளயொண்டப் பெத்து வளத்து ஆளாக்குறதுக்கு உம்மா, வாப்பா படுற கஷ்ட நஷ்டங்கள் எங்க அவனுகளுக்கு வெலங்கப் போகுது."

"நீங்க பட்ட கஷ்ட நஷ்டங்களெல்லாம் எனக்குத் தெரியாமலேயே மகள்ட வாப்பா? பகலெல்லாம் ஸ்கூலில படிப்பிச்சுப் போட்டு ராவெல்லாம் டியுஷன் கிளாஸ் வச்சீங்க. பசிக்குத் திண்டுட்டா, நோய்க்கு மருந்தெடுத்திட்டா நீங்க இந்தப் புள்ளகளுக்காக பாடுபட்டீங்க? ஈந்தாலும் புள்ளகளுக்காக உம்மா, வாப்பா கஷ்டப்படுரத்த, நஷ்டப்படுரத்த ஒரு நாளும் பேசப்படாது மகள்ட வாப்பா. அதோட இன்னமொரு விஷயத்தையும் கேளுங்கோ. இந்தக் காலத்துல அதிகமான குடும்பங்களுல புள்ளகள் கலியாணம் காப்பொன்ட முடிச்சி புள்ள குட்டியான கைக்கு தான் உண்டு தன் குடும்பமுண்டு என்ட நிலயில உம்மா வாப்பாவ பிரிஞ்சி போறாங்க. அவங்கள கவனிக்காம உடுறாங்க. இதுகளுக்கும் நாங்கள கவலப்படப்படாது.

"ஏதோ, கால் ரெண்டும் ஏழாமப் போனதால சின்ன மகனுக்கு ஆரும் பொண் கொடுக்க மாட்டாங்க. அதனால அவன் கலியாணம் முடிச்சவும் மாட்டான். எகட கடசி காலத்துல எகல விட்டுப் பிரிஞ்சி போகவும்மாட்டான் என்ட நம்பிக்க எனக்கு ஈக்கு. அது ஏன்ட மனசுக்கு ஒரு ஆறுதலாக ஈக்கு. அல்லா எகலுக்கு கிருப செய்வான்."

"சின்ன மகனும் நீங்க நெனச்சிற மாதிரி ஆள் அல்ல போலத்தான் எனக்கு வெலங்குது. போன கெழம ஒரு நாள் நான் சின்ன மகன்ட காமரய கூட்டிக் கீட்டித் துப்பரவாக்கப் போன நேரம் நெலத்துல கடிதம் ஒன்டு விழுந்தீரதக் கண்டு அத எடுத்து சும்மா வாசிச்சுப் பாத்தேன். இரீங்கோ ஓடிப் பெய்த்து அத எடுத்துட்டு வாரேன். இல்ல, கடிதத்த நீங்க பாக்கிறது அழகில்ல. நான் விஷயத்தைச் செல்லுரேன். நீங்க கேட்டுக்கோங்கோ. எகட ஊட்டுக்கு ஏழெட்டு ஊடு தள்ளி ஒரு சிறுக்கி இருக்கிறாளே சுமயா என்டு."

"அந்த ஒசந்த, மெல்லிய, கறுத்த புள்ளயா?"

"அவள்தான், அவள்தான், அந்தக் கறுப்பிதான். சின்ன மகனுக்கும் அவளுக்கும் எடயில என்னமோ ஒன்டு ஈக்குரத்த கடிதத்த வாசிச்சதும் நான் வெலங்கிக் கொண்டேன். நீங்க இல்லாத நேரமொன்டாப் பாத்து இந்த விஷயத்தப் பத்தி நான் சின்ன மகனுட்ட கேட்டேன்."

"அதுக்கு சின்ன மகன் என்ன சென்னான்? கால் ரெண்டு ஏழாத பொடியென். அவன் எங்க கலியாணம் காப்பொன்டு செஞ்சி குடும்பம் நடத்தப் போறான்?"

"நீங்க என்னமோ, செல்லுரீங்க? அவன், தான் புடிச்ச மொசலுக்கு மூனு கால் என்டு நிக்குறான். அந்தக் கறுப்பியக் கலியாணம் முடிச்ச வேனுமென்டுறான். நான் எடுத்த வாய்க்கே செல்லிட்டேன் அது என்டா ஒரு நாளும் நடக்க மாட்டாதென்டு. மகள்ட வாப்பா, நீங்களும் உட்டுக் குடுக்க வானாம். அந்தச் சிறுக்கீட வாப்பா எகட வாப்பாட கடயில சம்பளத்துக்கு ஈந்தவரு. அவன்ட உம்மா ஆமினத்து, கடயாப்பம் சுட்டு குடும்பம் நடத்தினவ. சின்ன மகன், அவள இந்த ஊட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தா நாங்க எப்படியென் அவளுக்கு வாயொத் தொறந்து மருமகள் என்டு செல்லுற?"

"ஜென்னத் நீங்க சும்மா பதறாம இரீங்கோ. அவன் அந்த மாதிரி வேலயெல்லாம் செய்ய மாட்டான்."

அன்சார் ஆசிரியர், ஜென்னத் உம்மாவின் மனதை ஆறுதல்படுத்த அவ்வாறு சொன்னாலும் சின்ன மகனின் போக்கு அவரின் உள்ளத்தையும் பெரிதும் வாட்டியது. கால் ஊனமுற்றிருந்த தனது சின்ன மகன் இறுதி வரை தன்னுடன் இருப்பான் என்ற நம்பிக்கை, சிதைந்து சின்னாபின்னமாகிப் போன சித்திரமொன்றாகிவிட்டதை அவர் உணர்ந்து கொண்டார்.

"ஊதுபத்தி சுத்தினத்த எடுத்துக் கொண்டு சுமயாவும் அவள்ட உம்மாவும் ரெண்டு மூனு நாளெக்கி முந்தி இங்க வந்தாங்க. நான் அவங்களுக்குச் செல்ல வேண்டியத்த நல்ல அழகா உப்புப் புளியிட்டுச் செல்லி, இதுக்குப் பொறகு இந்த பவுன்டர மிரிச்சவும் வர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணாம் என்டு ரெண்டு பேரயும் வெரட்டிக் கொண்டேன்"

"அப்ப சின்ன மகனும் ஈந்தானா?"

"ஈந்தான், ஈந்தான், அவனுக்கும் பட்டும் படாமலீக்க அழகா செல்லிட்டேன். அதுல ஈந்து அவன் மொகத்த 'உம்' என்டு வச்சிக் கொண்டு ஈந்தான். நீங்க கவனிக்க இல்ல போல. இன்டெய்க்கு ஊட்ட உட்டு வெளியே போகக்குள்ள எனக்கிட்ட செல்லிட்டாவது போக இல்ல."

"ஜென்னத் இவ்வளவு விஷயம் நடந்தும் எனக்கிட்ட ஈந்து மரச்சி வச்சிக் காரியம் பாத்திருக்கிறீங்க."

"இந்த விஷயத்த எனக்கு சமாளிக்க ஏழும் என்ட நம்பிக்க ஒன்டு ஈந்திச்சி. அடுத்து நீங்க ஒரு நோயாளி. பிரஷர் ஈக்கு, சீனி நோய் ஈக்கு."

"கால் ரெண்டும் ஏழாமல் போனாலும் சின்ன மகன, அன்பாதரவா வளத்தோம். கடசி வரக்கிம் அவன் எகளோட ஈப்பான் என்டு நம்பினோம். ஜென்னத் நீங்க சென்ன இந்தக் கதயெல்லாத்தயும் கேட்க, அந்த நம்பிக்க கொஞ்சம் கொஞ்சமா தளர்ந்து கொண்டு போகுது."

"அவன் போனாப் போகட்டும். நான் கடசி வரயும் ஒகளோட ஈப்பேன். நீங்க ஒன்டுக்கும் பயப்புட வானாம்."

"ஜென்னத் டெலிபோன் மணி அடிக்குது. சின்ன மகனோ தெரியாது பாருங்கோ பாக்க."

"ஹலோ, உம்மா நான் சின்ன மகன் பேசுரேன்."

"ஏன்ட வாப்பா, நீ எங்க ஈந்து தொரே இது பேசுறாய்?"

"நான் இது கண்டீல ஈந்துதான் பேசுரேன்."

"இப்ப மணியும் பதினொன்டாகப் போகுது. இப்ப என்ன தொரே ஒனக்கு கண்டீல ஈர வேல?"

"உம்மா நான் செல்லுரத்த நீங்க நல்லாக் கேட்டுக்கோங்கோ. அன்டு நீங்க சுமையாவுக்கும் அவட உம்மாவுக்கும் பேசின விதம் சரி இல்ல. உம்மா, நான் ரெண்டு காலயும் எழந்த சொத்தி. அப்பிடி ஈக்க அவ என்ன விரும்புறா என்டால் நானும் அவவ விரும்பத்தான் வேணும். நீங்களும் வாப்பாவும் இல்லாத காலத்துல ஏன்ட எதிர்காலத்தப் பத்தி நீங்க ரெண்டு பேரும் சும்மாவாவது யோசிச்சிப் பாத்தீங்களா? நீங்க அன்டு சுமையாவுக்குப் பேசின பேச்சீல ஈந்து நான் நல்லா வெலங்கிக் கொண்டேன், நீங்க அவவ மருகமளா ஏத்துக் கொள்ள மாட்டீங்க என்டு. அதனால நான் ஒரு முடிவுக்கு வந்து கண்டீல வைத்து சுமையாவ நிக்காஹ் செய்து கொண்டேன். நான் செய்தது தவறா ஈந்தா....."

இவற்றைக் கேட்க ஜென்னத் உம்மாவின் கையில் இருந்த தொலைபேசி தானாக மேசையில விழுந்து விட்டது.

"என்ன ஜென்னத், என்ன நடந்திச்சி?"

"மகள்ட வாப்பா, நாங்க நெனச்சது நடத்திக்கு. சின்ன மகன், சுமையாவ கண்டிக்குக் கூட்டிக் கொண்டு பெய்த்து நிக்காஹ் செஞ்சி கொண்டீக்கிறான். இவளவு காலமும் நீங்க சென்னத்த நான் கேட்டேன். இப்ப நான் செல்லுரத்த நீங்க கேக்க வேணும். பெரிய மகன்தான் ஈந்தான். லண்டன் போக வேணுமென்டான். அனுப்பி வச்சோம். அங்க பெய்த்து அரபிப் புள்ளயொன்ட கலியாணம் செய்து கொண்டான். அத, அவன் எகளுட்ட கேட்டுட்டா செஞ்சான். மாசத்துக்கு ஒரு மொற எகளோட பேசுரதுக்கே நேரம் இல்ல என்டு செல்லுறான். மகள்ட விஷயங்களையும் நான் செல்லி நீங்க அறிய வேணுமென்டு இல்ல. மகள்ட வாப்பா, உம்மா, வாப்பா என்டு செல்றது உம்மாக் குருவியொன்டையும், வாப்பாக் குருவியொன்டையும்போல. புள்ளகள் குஞ்சுக் குருவிகளப் போல. குஞ்சுக் குருவிகள் உம்மா குருவியையும் வாப்பாக் குருவியையும் உட்டுட்டு பறந்து போறத்தப்போலதான், புள்ளகளும் அவங்கட கற்பனைக்குள்ள வளர்ந்த உலகமொன்டுக்கு பறந்து போறாங்க. அதப் பத்தி நாங்க கவலப்படத் தேவ இல்ல."

"ஜென்னத், எகட மூனு புள்ளகளும் எகள விட்டுப் பிரிஞ்சி பெயித்திட்டாங்க. நாங்க வயசான காலத்துல எகள இனி யாரென் கவனிச்சிற. ஜென்னத் அதுக்குத்தான் நான் பயப்படுறேன்"

"குஞ்சுகள் காலியாப் பேன கூட்டுள உம்மாக் குருவியும் வாப்பாக் குருவியும் வாழத்தான் போகுது. அதனால நான் ஈக்கும் வர நீங்க, நீங்க ஈக்கும் வர நான் என்டு ஒருவருக்கு ஒருவர் ஒதவி ஒத்தாச செஞ்சி கொண்டு, புள்ளகளுக்கு ஊழியம் செஞ்சி கொண்டு இந்த ஊட்டுல வாழ்வோம். மகள்ட வாப்பா, இதுதான் மனிஷவாழ்க என்டத்த உணர்ந்து கொள்வோம்."

அவள் தன் கண்களில் உதிர்ந்த கண்ணீர்த் துளிகளை முந்தானையால் ஒற்றிக் கொண்டதை அவர் காணவில்லை.

## 'கொடகே' வாழ்நாள்

### கௌரவ சாஹித்திய விருது [2012] பெறும்

## கே. எஸ் சிவகுமாரன்



ஈழத்தின் சிறந்த திறனாய்வாளர்களில் ஒருவரான கே. எஸ். சிவகுமாரன் இவ் வருடத்திற்கான 'கொடகே' வாழ்நாள் கௌரவ சாஹித்திய விருதினைப் பெறுகிறார். இவர் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு சிறுகதை, கவிதை, கட்டுரை, திறனாய்வு, பத்தி எழுத்து, சினிமா விமர்சனம் ஆகிய துறைகளில் தடம்பதித்து வருகிறார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைத் தமிழ் மொழி தெரியாதோருக்கு ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்தும் பணியையும் இவர் நீண்டகாலமாகச் செய்து வருகிறார். உலக இலக்கியக் களஞ்சியங்கள் இரண்டில் இலங்கை இலக்கியம் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் சில இடம்பெற்றுள்ளன. இலங்கைத் திரைப்படச் சபையின் ஓர் அங்கத்தவராகவும் இவர் இருந்து வருகிறார். 'கொடகே' கௌரவ சாதனையாளர் விருது பெறும் கே.எஸ் சிவகுமாரனை 'ஞானமும்' வாழ்த்தி மகிழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மாறுதல்

● தேவமுகுந்தன்

நூலகத்தின் வீதியோரப் பக்க யன்னலின் அருகே அமர்ந்திருந்தான் வாகீசன். மேசையில் பல புத்தகங்கள் குவிந்திருந்தன. அப்புத்தகங்களை மாறிமாறி எடுத்துப் புரட்டியபடியிருந்தான். வாகீசனைத் தவிர மேற்றளத்தில் யாருமே இல்லை. அனைத்து மின்குமிழ்களும் மழை இருளை விரட்டப் போராடின. முதல்நாள் மதியம் பெய்யத் தொடங்கிய மழை தொடர்ந்து காலைவேளையிலும் கொட்டியது. சூரியன் கருமுகில்களுள் மறைந்திருக்க மெல்லிருள் பரவியிருந்தது..

கீழ்த்தளத்தில் 'கவுண்டரி'ல் இருக்கும் நூலகரைத் தவிர வேறு ஓரிருவர் இருக்கலாம். தடித்த மூக்குக் கண்ணாடி அணிந்த மெலிந்த உயர்ந்த பெண் வழக்கம் போன்று சட்டப் புத்தகங்கள் இருக்கும் இறாக்கைக்கு அருகில் இருந்து பெரிய பெரிய புத்தகங்களைப் புரட்டிக் குறிப்பெடுப்பது மேலேயிருந்து பார்க்கும்போது தெரிகின்றது. இவள் எதிர்காலத்தில் உயர்நீதிமன்ற நீதியரசராகவோ, சட்டமா அதிபராகவோ ஆகக்கூடும். காணும் நேரமெல்லாம் தனிமையில் இருந்து படித்தபடியே இருக்கிறாள்.

கிழமை நாட்களில் வரிசையில் தவங்கிடந்து மாணவர்களால் பயன் படுத்தப்படும் கணினிகள் இப்போது தேடுவாரற்றுக் கீழ்த்தளத்தில் கிடக்கின்றன. ஞாயிறு பத்திரிகைகள் விரிக்கப்படாமலே வாசலோர மேசையில் கிடக்கின்றன.

நாளைக்கு 'நியூட்டனின் இயக்கவியல்' ஒப்படையைச் சமர்ப்பித்தே ஆகவேண்டும். ஒப்படையைச் சமர்ப்பித்து அதில் ஐம்பது புள்ளிகளுக்கு மேலே எடுத்தால்தான் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிப்பார்கள். இல்லாவிட்டால் மேலதிகமாக ஒருவருஷம் பல்கலைக்கழகத்திற்குள் இருக்க வேண்டியிருக்கும்.

ஒப்படையின் ஆறு வினாக்களிலும் ஓரிரு பகுதிகளைத் தவிர மற்றைய பகுதிகள் விடையளிக்கப்படாமலே இழுபட்டுக் கிடக்கின்றன. முன்னரே விடையளிப்பதற்கு பகீரதப் பிரயத்தனமெடுத்தாலும் அனைத்து ஒப்படைகளும் அவை சமர்ப்பிக்க வேண்டிய தினத்திற்கு முதல்நாள் இரவிற்தான் பூர்த்தியாக்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் இடையில் பலசோலிகள் வந்து சேர்ந்து விடுகின்றன.

சத்தியன், ஜெகன், குகா, சேகர் என நண்பர்கள் யாராவது வந்தார்கள் என்றால் பகிர்ந்து செய்யலாம். இரண்டு வருடங்களாக சேர்ந்து படிக்க வராதவர்கள் இனி வருவார்களா? அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. ஞாயிற்றுக்கிழமையும் மழை நாளுமாய் அவர்கள் இப்போது தங்கள் தங்கள் அறைகளில் இழுத்துப் போர்த்திக்கொண்டு நித்திரை செய்யலாம், அல்லது தனிப்பட்ட வகுப்புக்கள் எடுக்க வீடுகளுக்குச் சென்றிருக்கலாம். மதியம் சாப்பிட்டுவிட்டு தியேட்டர்களில் படங்கள் பார்க்கச் செல்லலாம். மழை பொழியும் அருமையான ஞாயிற்றுக் கிழமையை இழக்கத் தயாரில்லாத அவர்கள்... சோம்பலும் சுயநலனும் மிக்கவர்களாய் நண்பர்கள். வாகீசனுக்கும் இன்று முழுதும் வீடுகளுக்குச் சென்று வகுப்புக்கள் எடுக்க வேண்டியிருந்தது. முக்கிய அலுவல் இருப்பதால் வகுப்பை பிறிதொரு நாளில் எடுப்பதாய் பிள்ளைகளுக்கு அறிவித்திருந்தான்.



வாகீசன் பல்கலைக்கழகத்தில் படிப்பது ஆங்கில மொழி மூலமாகத்தான். வகுப்பில் சிங்கள, தமிழ், முஸ்லீம் என அனைத்து இன மாணவர்களும் பயின்றாலும் தமிழர்களே நண்பர்களாகவுள்ளனர். பதினெட்டு வயதுவரை சிங்களப் பொதுசனங்களைக் காணாமலே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதுதான் சில சிங்களச் சொற்கள் பரிச்சயமாகிவருகின்றன. கன்ரீனில், பஸ்சில் ஓரிரு வார்த்ததைகள் கதைக்கும் அளவுக்கு சிங்களத்தில் முன்னேறி யுள்ளான்.

வகுப்பில் கூடப்படிக்கும் சிங்கள மாணவர்கள் வாகீசனைக் கண்டால் 'குட் மோனிங்' அல்லது 'குட் ஈவினிங்' சொல்வார்கள். வாகீசனும் திருப்பிச் சொல்வதோடு சரி. ஊரில் இருந்தபோது இந்த வார்த்தைகளை வழமையாக வகுப்பறைக்கு ஆசிரியர்கள் வரும்போது மட்டுமே பயன்படுத்தியிருந்தான். அதனை ஏனையவர்களுக்கும் சொல்லிப் பழக்கமிருக்கவில்லை.



'குட் மோனிங்' 'குட் ஈவினிங்' என்பவற்றைத் தவிர சிங்கள மாணவர்களுடன் கதைத்துப் பழக்கமில்லை. ஒருமுறை பல்கலைக் கழகத்திலிருந்து அறைக்குத் திரும்ப பஸ்சில் ஏறிய போது நிஸாந்தவும் ஏறினான். அவனே இவன் தடுத்தும் இவனுக்கும் சேர்த்து 'ரிக்கெட்' எடுத்தான். நிஸாந்தவின் வீடு கல்கிஸையில் இவனது அறையிருக்கும் தெருவின் அந்தத்தில் தண்ட வாளத்தை அண்மித்து கடற்கரையோரமாய் அமைந்துள்ளதாய் சொன்னான். இருவருக்கும் உரையாட மொழிதான் இடைஞ்சலாய் இருந்தது. இவ்வளவுதான் அவர்களுடனான வாகீசனது பழக்கமாயிருக்கின்றது.

மற்றப்படி பல்கலைக்கழகம், தமிழ் நண்பர்கள், வெள்ளவத்தைச் சைவச்சாப்பாட்டுக்கடை, பிரத்தியேக வகுப்புக்கள் வெள்ளி பின்னேரங்களில் பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோவில் என்பனவே கடந்த இருவருடங்களாக வாகீசனது உலகமாயுள்ளது.

இன்றும் வழமை போலவே தனியே இருந்து இந்த ஒப்படை வினாக்களுடன் மாயவேண்டியது தானோ? எப்படித்தான் இந்தத் தடித்த ஆங்கில புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் படித்தாலும் அனைத்து வினாக்களுக்கும் விடை கண்டுபிடிக்கலாமென்ற நம்பிக்கை வாகீசனு க்கில்லை. விரிவுரையாளர்கள் ஒப்படை வினாக்கள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்திய புத்தகங்களை நூலகத்தில் இரவல் எடுத்து விடுவார்கள். அப்புத்தகங்களை ஒப்படை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் தினம்வரை அவற்றை மீள ஒப்படைக்கமாட்டார்கள். அந்தப் புத்தகங்களைப் படித்தால் இலகுவாக விடையளிக்கலாம்.

தொடர்ந்து புத்தகங்களைப் புரட்டிப் புரட்டித் தேடியும் விடை கண்டுபிடிக்க முடியாமலிருப்பது களைப்பாகவும் எரிச்சலாகவுமிருந்தது.

நாளை காலையில் ஐந்தாறு தூய வெண்ணிற 'பொட்டோக் கொப்பி' தாள்களுடனும் பெரிய அடிமட்டம், பென்சில், நீல-சிவப்பு-கறுப்பு-பச்சை பேனாக்கள் சகிதம்வரும் வாகீசனது நண்பர்கள்,

"மச்சான் உன்ரை அசைன்மென்டை ஒருக்காத் தாடா" என்று கேட்டு 'போட்டோக் கொப்பி'யெடுத்துக் கொண்டு 'ஸ்ரோண் பெஞ்'சுக்குப் போயிருந்து ஆறுதலாக பேப்பரைச் சுற்றிவரகோடடித்து அழகாகப் பார்த்தெழுதிக் கொண்டு போய்ச் சமர்ப்பிப்பார்கள். வாகீசன் ஏதாவது கவலையீனப் பிழைகள் விட்டிருந்தால் அதனை சுட்டிக்காட்ட மாட்டார்கள். ஆனால் தங்கள் தங்கள் ஒப்படைகளில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டிருப்பார்கள்.

வெட்டிக்கொத்தி பலரது கரங்களில் கிடந்து கசங்கிப்போன பளுப்புநிற மெல்லியதாள்களில நீலநிறப் பேனாவால் அவசர அவசரமாக எழுதப்பட்டிருக்கும் வாகீசனது ஒப்படையையும் காகித மணம் நீங்காத பால்வெண்ணிற தடித்த 'போட்டோக் கொப்பி' தாள்களில் தெளிவாக பல நிறப் பேனா-பென்சில்களைப் பயன்படுத்தி அழகாக எழுதப்பட்டிருக்கும் அவர்களின் ஒப்படைகளையும் திருத்தும் விரிவுரையாளர்கள்-போதனாசிரியர்கள், வாகீசனுக்கு குறைவான புள்ளிகளை இட்டால் பரவாயில்லை. ஆனால் அவர்கள் தடித்த சிவப்புப் பேனாவால் ஒப்படையின் முகப்பில் 'பார்த்து எழுதப்பட்டது.' எனக்குறிப்புமெழுதி புள்ளிகளையும் கழித்து விடுவார்கள்

ஒப்படைகள் திருத்தப்பட்டு வகுப்பில் தரப்பட்டதும் வாங்கிப் பார்த்தெழுதிய நண்பர்களே,

' மச்சான் உனக்கு 'சீ' யே கிடைச்சது. எனக்கு 'ஏ' மச்சான். நான் உண்மையிலை உன்ரையைப் பார்த்து எழுததேலை.. எழுதியிருந்தால் எனக்கும் உன்னை மாதிரி 'சீ' யெல்லே கிடைத்திருக்கும். ஒரு 'மொடலு'க்காகத்தான் வாங்கிப் பார்த்தனான். உன்னை மாதிரி எந்த நேரமும் 'லைபரி'க்கை இருந்து படித்தால் எனக்கு எல்லாப் பாடத்திற்கும் நூறுதான் மச்சான்'

என்பார்கள். அடுத்த ஒப்படைக்கு விடை கேட்டு வரும்போது இவர்களுக்கு கொடுக்கக் கூடாது என ஒவ்வொரு முறையும் மனதில் சபதம் எடுப்பான். ஆனால் அடுத்த ஒப்படை சமர்ப்பிக்கும் தினத்தன்று காலையில் தேடி வரும் நண்பர்களைக் காணும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமாயிருக்கும். முன்னர் எடுத்த சபதம் மீறப்படும். ஒப்படையைச் தூக்கிக் கொடுப்பான். ஒப்படை 'போட்டோக் கொப்பி'களாகி சுற்றுநிருபம் போல பலரது கைகளுக்குப் போகும். யாராவது ஒருவர் விடை கண்டால் மற்றவர்கள் பார்த்து எழுதலாம்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் வாகீசனே கஸ்ரப்பட்டு விடை காண அவர்கள் பார்த்து எழுதகிறார்களே.

மழை இப்போது இன்னும் பலமாகக் கொட்டியது. நூலகத்திற்கு அருகில் ஓடும் தியவன்ன ஓயா பெருக்கெடுத்துப் பாய்கின்றது. அதன் நீர்கரைகளைத் தாண்டியும் வழிகின்றது. மழையில் நனைந்தபடி வெற்றுஎண்ணெய்ப் பரல்களையும் மரக்கட்டைகளையும் பிணைத்து உருவாக்கப்பட்ட சிறிய மிதவையொன்றில் தொழிலாளர் சிலர் நீண்ட தடிகளில் பிணைக்கப்பட்டிருக்கும் கத்திகளால் வாவியினுள் பரவியிருக்கும் சல்பீனியாக்களை அகற்றிக் நீர் பாயவழி சமைப்பது யன்னலால் பார்க்கும்போது தெரிகின்றது. கருமமே கண்ணாயிருப்பவர்களுக்கு மழையென்ன வெய்யிலென்ன? கிழமை நாட்கள் என்றால் என்ன? விடுமுறை நாட்கள் என்றால் என்ன?

பெரும்பாலான சிங்கள மாணவர்கள் ஒப்படை வினாக்களை தங்களுக்குள் பகிர்ந்து விடையளித்து பின்னர் சேர்ந்திருந்து கலந்துரையாடி எழுதுவதை அவதானித்திருக்கிறான்.

✦✦✦

மதிய உணவை 'கன்ரீனி'ல் முடித்துக் கொண்டு தனது யன்னலோர மேசையை நோக்கிப் போனான். மழை நாளாகையால் சப்பாத்து அணிவதைத் தவிர்த்து ரப்பர் செருப்புக்களையே அணிந்திருந்தான். நீரில் நனைந்த செருப்பு வாகீசன் நடக்க நடக்க 'சளக் சளக்' என ஒலியெழுப்பி நூலகத்தின் அமைதியைக் குலைத்தது. நூலகத்தினுள் இருப்பவர்கள் அனைவரும் இவனையே பார்க்கிறார்களோ. வாகீசனது மேசையில் புத்தகங்களைத் தூக்கி ஒதுக்கி வைத்துவிட்டு சோடியொன்று சல்லாபித்தபடி அமர்ந்திருந்தது. அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் புத்தகங்களைக் காவியபடி வேறிடம் தேடிப்போனான்.

நான்கு வினாக்களுக்கு பூரணமாக விடை கண்டாயிற்று ஆறாம் வினாக்களுக்குக் கூட சரியாக வகையீடு, தொகையீடுகளைச் செய்தால் விடை கிடைக்கும் போலிருந்தது. முயற்சித்தபடியிருந்தான். ஆனால் ஐந்தாம் வினாவுக்கு விடையளிபப்பது மிகவும் சிரமமாயிருந்தது.

வேகங்கொண்டு பாயும் தியவன்ன ஓயாவில் இழுபட்டுப்போகும் பெரிய கபரக்கொய்யாவொன்று கரையேற முயல்வது தெரிகின்றது. நீரின் உதைப்பு அதன் முயற்சியை தாமதப்படுத்திக் கொண்டிருக்கின்றது. கபரக்கொய்யா எப்படியும் கரையேறி விடுமென்றே எண்ணினான்.

பல வெற்றுத்தாள்களில் எழுதியெழுதி விடை காணமுயற்சித்தபடியிருந்தான் பிழைத்தவற்றை வெட்டிவிட்டு தன்முயற்சி சற்றும் தளராத விக்கிரமாதித்தனாய் மீண்டும் மீண்டும் தாள்களில் எழுதிக் கொண்டிருந்தான். கீழ்த்தளத்தில் கணிதநூல்கள் அடுக்கியிருக்கும் இறாக்கைக்குப் போய் நான்கைந்து நுண்கணித நூல்களை கொண்டு வந்தான். அவற்றினைப் புரட்டிப் புரட்டிப் படித்த பின்னர் ஆறாம் வினாவுக்கும் விடை வந்திறங்கியது.

வெளியே மழை சற்றுத் தணிந்திருந்தது.

மீண்டும் ஐந்தாம் வினாவை வாசித்து வரிப்படத்தை வரைந்து அதில் தரவுகளைக் குறித்தான். தொடர்ந்து முயற்சிக்க களைப்பாகவிருந்தது. புத்தகங்களை மூடி வைத்துவிட்டு கதிரையில் இருந்தபடி கண்களை மூடி மேசையில் தலையைச் சாய்த்தான்.

✦✦✦

" மச்சாங் நிதித?" என்றபடி நிஸாந்த வாகீசனை எழுப்பினான். அவனுடன் பிரசன்ன, சரத், நவ்சாத் என ஐந்தாறு பேர் நின்றனர்.

அவர்களுக்கு ஒப்படையின் ஆறாம் வினாவுக்கு மட்டும் விடை தெரிந்திருக்கவில்லை. விடையெழுதப்பட்ட வாகீசனது தாளினை நீட்டினான். அவர்கள் அதனை வாங்காமல் விளங்கப்படுத்துமாறு கேட்டு இவனைச் சூழ கதிரைகளில் அமர்ந்தார்கள். வாகீசன் தாளொன்றினை எடுத்து வரிப்படத்தினை வரைந்து, சமன்பாடுகளைப் பெற்று விளக்கிக்கொண்டு போனான். அவர்கள் முகங்களில் சந்தோசம் தெரிந்தது. அதற்கு அப்பால் அவர்களால் சமன்பாடுகளைத் தீர்த்து விடைகாணமுடியும் எனச் சொன்னார்கள். திரும்பத்திரும்பத் நன்றி சொன்னார்கள்.

அந்த விடையை அவர்களுக்கு விளக்க அவனுக்குத் தெரிந்திருந்த ஆங்கில அறிவு போதுமானதாக விருந்தது. கணிதத்தை விளக்கு வதற்கு மொழி தேவையில்லையே! கணிதமே விஞ்ஞானத்தின் மொழிதானாமே!

வாகீசன் செய்யாதிருந்த ஐந்தாம் வினாவை பிரசன்னா விளங்கப்படுத்தினான். அது இலகுவாகப் புரிந்தது. வரிப்படத்தில் வட்டத்தினை மிகச் சிறிதாக வரைந்திருந்தது தவறாக இருந்து. வட்டத்தின் ஆரையின் நீளத்தினை அதிகரித்து பெரிய வட்டம் வரைந்திருந்தால், விசைக்கோடுகளை தெளிவாக வரைந்து இவனாலும் இலகுவாக விடைபெற்றிருக்கலாமென்பது புரிந்தது.

புதிய தாள்களில் விடைகளை ஒழுங்காக பார்த்து எழுதிக் கொண்டு கீழ்த் தளத்திற்குப் போனான். நிஸாந்த ஆட்கள் விடைகள் எழுதிய தாள்களைச் சேர்த்து இணைத்து உறைகளில் இட்டு ஒட்டிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கே கணிதத் திணைக்களத்தின் முன்பாக இருக்கும் ஒப்படைப் பெட்டியில் இடப்போகிறார்கள் போல. அவர்களிடம் உறையொன்றை வாங்கி தனது ஒப்படை வைத்து ஒட்டினான். சோம்பேறிகளாயிருக்கும் நண்பர்கள் நாளை இவனைப் பற்றி 'அவன் இப்ப சுயநலவாதியாய் மாறிவிட்டான். முந்தின மாதிரியில்லை அசைன்மென்டை காட்டிறானில்லை' எனத் தங்களுக்குள் கதைக்கக் கூடும்.

நாளைக்கு கையடக்கத் தொலைபேசியை அணைத்துவிட்டு பல்கலைக்கழகப் பக்கம் வராமல் அறைக்குள் இருக்க வேண்டுமென எண்ணிக் கொண்டான். வெளியே மழை பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது. அந்த இதமான மழையில் நனைந்தபடி ஒப்படைப் பெட்டியை நோக்கி நடந்தான். மழை இனி ஓய்ந்துவிடும் போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை சொல்லும் கட்டுரை

# பேச்சு வழக்கும் அவதூறு வார்த்தைகளும்

## சில அனுபவங்கள்

● வே. தில்லைநாதன்



அண்மையில் ஓர் ஆங்கிலப் பத்திரிகையின் பெண் ஆசிரியர் மீது பாதுகாப்பு அமைச்சின் உச்சநிலை அதிகாரி ஆங்கிலத்தில் தரக்குறைவான அவதூறு வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டதும் அவரது செயல் பரவலான கண்டனத்துக்குள்ளானதும் அந்த அதிகாரி இன்னொரு பத்திரிகையில் குறித்த நாலெழுத்து வார்த்தை சர்வசாதாரணமாக அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் வார்த்தை என்று தன்னை நியாயப்படுத்த முனைந்ததும் பலரும் அறிந்ததே.

அதிகளவு அமெரிக்க நாவல்களை வாசித்திருந்தமையால் நானும் ஒரு காலத்தில் அந்த வார்த்தை அமெரிக்கரிடையே அதிக புழக்கத்தில் இருப்பது என்ற அபிப்பிராயத்தையே கொண்டிருந்தேன். ஆயினும் இருபதாண்டுகளுக்கு முன்னர் ஓர் அமெரிக்க யுவதியுடன் எனக்கேற்பட்ட எதிர்மறையான அனுபவம் எனது தப்பெண்ணத்தைச் சிதறடிக்க உதவியிருந்தது. அது குறித்துப் பின்னர் பார்ப்போம்.

பேச்சுவழக்கின் செழுமையும் அதன் வல்லமையும் படைப்பாளிகளுக்கு நன்கு புரியும். பல வருடங்களுக்கு முன்னர் ஓர் ஆங்கிலேயர் கூறினார், "உங்கள் நாட்டவர் பேசும் ஆங்கிலம் Bookish English' என்று. தமிழில் அதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறலாம். எனது சிங்கள ஆசிரியர் திருகோணமலையில் கடமையாற்றிய ஒரு சிங்களப் பாடசாலை அதிபர். அவருக்கு நன்கு தமிழ் தெரிந்திருந்தது. அவர் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறினார், "நான் நேற்று திரு. திருச்செல்வம் அவர்கள் பஸ் நிலையத்தில் சந்தித்தேன்" என்று. அவர் பேசியதை Bookish Tamil என்று கூறலாம்.

கெட்ட வார்த்தைகளும்கூட பேச்சு வழக்குக்கு உரமூட்டத்தான் செய்கின்றன. எப்போதோ இரு பெண்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் இப்போதும் என் நினைவில் நிற்கிறது. திருகோண மலையில் எமதில்லத்துக்கு முன்னாலிருந்த தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் இருந்த பொது நீர்க்குழாயில் ஒரு நாள் சில பெண்கள் நீர் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இரு பெண்களிடையே ஏற்பட்ட சண்டை என் கவனத்தை ஈர்த்தது. வாய்த்தர்க்கம் முற்றி ஒருத்தி மற்றவளைப் பார்த்துக் கத்தினாள், "ஏன்டி, எம் புருஷன் உனக்கு ...லாம் எண்டால் உம் புருஷன் எனக்கு ...கிறதிலை என்னடி தப்பு?"

அவளது ஆவேசத்தையும் ஆக்ரோஷத்தையும், "எடி பெண்ணே, எனது கணவன் உன்னைப் புணர்கிறபோது உனது கணவன் என்னைப் புணர்வதில் என்னடி தப்பிருக்கிறது" என்ற வார்த்தைகளில் கொண்டு வருதல் சாத்தியப்படுமா என்பதே எனது மனதில் எழும் வினா. ஆகவே மேலைநாட்டுக் கதாசிரியர்களின் சங்கோசமின்மை புரிந்து கொள்ளக்கூடியதே.

இதை வாசித்து விட்டு முகத்தைச் சுழிப்பவர்களுக்கு ஆறுதல் தரும் பொருட்டு சிங்களப் பேச்சு வழக்கு கை வராததால் எனக்கு ஏற்பட்ட ஓர் இனிய அனுபவத்தைப் பதிவு செய்து கொண்டு மீண்டும் இந்த விடயத்தைத் தொடுவது நல்லது என்று தோன்றுகிறது.

நான் அனுராதபுரத்தில் ஓர் உயர்கல்வி நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் ஆசிரியர் குழாத்தில் தனி ஒரு தமிழனாக இருந்தமை மொழி ரீதியாக எனக்குச் சில சிக்கல்களை ஏற்படுத்தியது. சக ஆசிரியர்களோடும் வேறு சிலருடனும் ஆங்கிலத்தின் துணை கொண்டு உறவாடக் கூடியதாக இருந்தது. ஏனையோரிடம் எனது Bookish Sinhala அறிவினைக் காட்டக் கூச்சமுற்று தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் சில வார்த்தைகளில் எனது தேவைகளைத் தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

இதனால் நான் தங்கியிருந்த விருந்தினர் விடுதியில் சமையற்காரர், சாரதிகள், சிற்றூழியர் போன்றோர் எனக்குச் சிங்களம் அறவே தெரியாது என்று கருதி என் முன்னிலையில் புலிப்போராளிகளின் கொடூரச் செயல்கள் குறித்துப் பேசுவதுண்டு. ஒரு தடவை அவர்கள் புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவுற்றிருக்கும் பெண்களைக் கொன்று அவர்களது வயிற்றைக் கிழித்து வயிற்றிலிருக்கும் சிசுக்களை வெளியே எடுத்துக் கூறுபோட்டு விடுவர் என்று பேசிக் கொண்டனர்.

அப்போதெல்லாம் உள்ளூர அவர்கள் என்னை ஏதும் செய்து விடுவார்களோ என நான் அச்சமுறுவேன். ஆயினும் என்னுடன் ஒரே அறையில் தங்கியிருந்தவரும் என்னோடு நெருங்கிப் பழகியவருமான உதவிப் பதிவாளர் ஏக்கநாயக்க, என்னைக் காப்பாற்றுவார் என என்னை நானே ஆறுதல் படுத்திக் கொள்வேன். எனினும் எனது அச்சம் அடிப்படையற்றது என்பதை நான் விரைவிலேயே புரிந்து கொள்ளக்கூடியதாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

விருந்தினர் விடுதியின் உள்ளேயிருந்த குளியலறையில் குளிக்க முடிந்தாலும் உடுப்புக் கழுவுவதற்காக நான் வெளியே இருந்த கிணற்றையே நாட வேண்டியிருந்தது. ஒரு நாள் நான் கிணற்றடிக்குச் சென்றபோது கிணற்று முற்றத்திலிருந்த பாசியை இருபதுக்கும் இருபத்தைந்துக்கும் இடைப்பட்ட வயதினனான கார்ச்சாரதி சந்தன மண்வெட்டி கொண்டு வழித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அருகிலிருந்த சமையற்காரரிடம் அவன், "தில்லநாதன் மாத்தெயா வழுக்கி விழுந்து விடக்கூடாது என்பதற்காகவே நான் இதைச் செய்கிறேன்" என்று கூறிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. போலியோ நோயினால் பாதிக்கப்பட்டிருந்த என்மீது அவன் கொண்டிருந்த கரிசனை என் நெஞ்சைத் தொட்டது.

மீண்டும் கெட்ட வார்த்தைகளுக்கு வருவோம். அவை 'மறைவாக நமக்குள்ளே' பேசப்படுபவையே என்றாலும் சமுதாய நெறிமுறைகளுக்கும் கட்டுக்கோப்புகளுக்கும் அமையத் தீண்டத் தகாதவையாகக் கருதப்படுபவை. அத்தகைய சொற்கள் பெரும்பாலும் பாலுறுப்பு, கலவி என்பன சம்பந்தப்பட்டவையாக இருப்பதனால் சிறுவயது தொட்டே உடலுறவு பற்றி எம்மிடையே ஏற்படுத்தப்படும் அருவருப்புணர்வு காரணமாக அச்சொற்கள் எம்மைச் சங்கடத்துக் குள்ளாக்குகின்றன.

பல்வேறு சமூகங்களைச் சார்ந்தவர்கட்கும் இது பொதுவான நியதி என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆயினும் ஒரு மொழி பேசும் சமூகத்தவர் இன்னொரு மொழியிலுள்ள கெட்ட வார்த்தைகளின் அர்த்தம் தெரிந்து அவற்றை உபயோகிக்கும் போது கூட அவை அவர்கள் மீது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை அவை வெறும் வார்த்தைகள்தாம். சமூக விழுமியங்களுக்குச் சவாலாக அமையும்போதே அவை கூர்மைபெற்று வெந்த புண்ணில் வீறு கொண்டு பாய்கின்றன.

இப்பொழுது நாம் **ஆரம்பத்தில் குறிப்பிட்ட** அமெரிக்க யுவதியைச் **சந்திக்கலாம். அதற்காக** மீண்டும் நாம் **அனுராதபுரம் செல்ல** வேண்டியிருக்கிறது. **அங்கே ஆங்கிலப் பிரிவில்** ஆசிரியர்களாக நானும் **ஓர் அமெரிக்க யுவதியும்** பெரும்பான்மைச் **சமூகத்தைச் சேர்ந்த சிலரும்** பணியாற்றிக் கொண்டிருந்தோம்.

அமெரிக்க யுவதி சில **சிங்கள வசனங்களை** அறிந்து வைத்திருந்தாள். **அவளுடைய உச்சரிப்பில்** 'மாட்ட பட கினி' (எனக்குப் **பசிக்கிறது) என்று** சிங்களம் சங்கீதமாக **ஒலிக்கும். அத்துடன்** யாரிடமிருந்தோ சிங்களத்திலுள்ள **அத்தனை கெட்ட** வார்த்தைகளையும் அவள் **தெரிந்து** வைத்திருந்தாள்.

நெடிதுயர்ந்த தோற்றங் கொண்ட **அவள்** மிதிவண்டியில் செல்லும்போது யாராவது **அவளுடன்** சேட்டை செய்தால் அவள் வண்டியை நிறுத்தி எழுந்து நிற்கும்போது அவளுக்கும் ஆசனத்துக்குமிடையே குறைந்தது ஓரடியாவது இடைவெளியிருக்கும். அவள் சேட்டை விடுபவர்களை உறுத்து நோக்கி, "ஆச்சிட்ட..." என்று கெட்ட வார்த்தைகளை வீசும் போது அவர்கள் அதிர்ச்சியடைந்து தலைதெறிக்க ஓடுவர்.

ஒருநாள் நானும் அவளும் இரு சிங்களப் பெண்களும் அறையில் இருந்தபோது அவளுக்கென்னவோ தனது தூஷணப் புலமையை வெளிக்காட்ட வேண்டுமென்ற ஆர்வம் பிறந்து விட்டது. உற்சாகத்துடன் அவள் தனது உதட்டிலிருந்து உச்சரிப்புப் பிறழ்வோடு ஒவ்வொரு கெட்ட வார்த்தையாக உதிர்க்க - என்னையும் அவளையும் பொறுத்தமட்டில் அவை சாதாரண வார்த்தைகளாக இருந்தும் - இரு சிங்களப் பெண்மணிகளும் அருவருப்பால் உடல் கூசி ஒன்றுமே சொல்ல முடியாது நெளிந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களது சங்கடத்தைக் கண்டு சகிக்க முடியாது, நான் அந்த யுவதியைப் பார்த்து பாதுகாப்பமைச்சின் உயரதிகாரி அண்மையில் உபயோகித்த, F_ _ K என்ற நாலெழுத்து வார்த்தையைக் கூறி, "அது போலவா?" என்று கேட்டேன். அந்தச் சொல் எனது வாயிலிருந்து பிறந்தது தான் தாமதம் அவள் அதிர்ச்சியுற்று நிலைகுலைந்து சிவப்பான அவளது முகம் மேலும் சிவந்து இரத்தக் குழம்பாகி வெகுவேகமாக அறையை விட்டுப் பாய்ந்தோடினாள். அடுத்த சில நாட்களுக்கு அவள் என்னிடம் முகங்கொடுத்துப் பேசவே கூச்சப்பட்டாள்.

நிலைமை அவ்வாறிருக்கையில் பாதுகாப் பமைச்சின் உயரதிகாரி அந்த வார்த்தை அமெரிக்க மக்கள் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தும் வார்த்தை என எவ்வாறு துணிந்து கூறினார் என்பதுதான் எனக்குப் புரியாத புதிராக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்

கொற்றை பி.கிருஷ்ணானந்தன்



## 24 தவறவிடும் ரயில்பயணங்கள்...

எழுபதுகளின் நடுப்பகுதி. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ரயில் சேவை ஒழுங்காக நடந்து கொண்டிருந்த காலம் அது.

கொழும்பு மாநகரில் அனேக அரச திணைக்களங்களில் யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் உத்தியோகக் கடமைகளில் இருந்தார்கள். குடும்பஸ்தவர்களில் பெரும்பாலானோர் வெள்ளிக் கிழமைகளில் கொழும்பிலிருந்து யாழ்தேவியில் பயணப்பட்டு அன்றிரவே பத்து அல்லது பத்தரை மணியளவில் வீடு வந்து சேர்ந்து விடுவார்கள். பின்னர் ஞாயிறு முன்னிரவு மெயில் ரெயினைப் பிடித்தார்களென்றால் திங்கள் அதிகாலை கொழும்பு சென்றடைந்து எட்டு மணிக்கு கடமைக்கு தயாராகி விடுவார்கள்.

வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ்ஸில் ஏறி கொடிகாமத்தில் ரயிலைப் பிடிப்பதும், கொழும்பில் இருந்து வரும் போது கொடிகாமத்தில் இறங்கி பருத்தித்துறை பஸ்ஸில் வந்து வடமராட்சி சேர்வதும் வழமை.

புதிதாகக் கல்யாணம் செய்த மாப்பிள்ளைகளென்றால் இரண்டு நாட்கள் மட்டும் வீட்டில் சந்தோசமாக நின்று விட்டுப் போவதில் திருப்திப்படுவதில்லை. பருத்தித்துறையில் அல்லது நெல்லியடியில் வேண்டுமென்றே பஸ்ஸைத் தவற விட்டுவிட்டு வீட்டிற்கு வந்து ஞாயிறு இரவையும் வீட்டில் சந்தோசமாகச் செலவழித்துவிட்டு அடுத்தநாள் பயணம் செய்வார்கள். சில மாப்பிள்ளைகள் ஒருபடி முன்னேறி கொடிகாமம் மட்டும் சென்று மெயில் ரெயில் கொடிகாமம் ஸ்ரேசனில் தரித்து பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்படும் வரையும் எங்காவது தேநீர் கடைகளில் மறைந்து நின்றுவிட்டு வீட்டுக்கு வந்து ரயிலைத்தவறவிட்ட கதையை சோகத்துடன் சொல்லி விட்டு, அதன்பின் சந்தோசமாக இருப்பார்கள். இந்த பஸ்ஸை, ரெயிலைத் தவறவிடும் நாடக செயற்பாட்டுக்கு அனேகமாகப் புதுப்பெண்ணும் உடந்தையாகத்தானிருப்பாள் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மேகநாதன் கொழும்பில் தொழில் திணைக்களத்தில் எழுதுவினைஞராகச் சேர்ந்த ஒருவருடத்திற்குள்ளேயே கெக்கிறாவையில் சுருட்டுக்கடை வைத்திருந்த கொற்றாவத்தையில் முதலாளிகளில் ஒருவராகத் திகழ்ந்த சண்முகம் பிள்ளை கொழுத்த சீதனம் கொடுத்து தனது மாப்பிள்ளையாக்கிக் கொண்டார். திருமணம் நடந்து இரண்டு கிழமைகள் விடு முறையில் கழிந்தன. இன்று வேலைக்குப் புறப்பட வேண்டிய நாள்.

மனைவியின் தம்பி (மைத்துனன்) சைக்கிளில் நெல்லியடியில் கொண்டு போய்விட பருத்தித் துறையில் இருந்து வரும் பஸ்ஸில் கொடிகாமத் திற்குப் போய் ரயில் ஏறுவது என்பதுதான் ஏற்பாடு. இன்று இருப்பது போல அன்று தனியார் பஸ்கள் இல்லை. இ. போ. ச. பஸ்ஸைத் தவறவிட்டால் வேறு சேவையில்லை.

புறப்படத் தயாராகுவதில் மேகநாதன் உள் நோக்கத்தோடு தாமதமாகிக் கொண்டிருந்தான். சண்முகம்பிள்ளை மகளை அடிக்கடி கூப்பிட்டு மாப்பிள்ளையைத் துரிதப்படுத்தச் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

ஒருவாறு மாப்பிள்ளை தயாரகிவிட்டார். பயணப்பையுடன் சைக்கிளில் baral இருந்து கொண்டு ஏக்கத்துடன் மனைவியைப் பார்த்தான். அவளது முகத்திலும் ஏக்கம் தெரிந்தது. சைக்கிள் புறப்பட்டது. பஸ் எப்படியும் போயிருக்கும் என்ற நம்பிக்கை மேகநாதனுக்கு இருந்தது. நம்பிக்கை வீண் போகவில்லை. பஸ் போய் பத்து நிமிடங்களாகி விட்டிருந்தது.

மிகுந்த சந்தோசத்துடன் வீட்டிற்கு வந்து பஸ் புறப்பட்ட கதையைக் கவலையுடன் கூறினான். இனியென்ன நாளைக்குத்தானே.

சண்முகம் முதலாளி பதட்டப்பட்டார். அரசாங்கத்தில் கிளறிக்கல் மாப்பிள்ளையென்றுதானே பெரும் சீதனம் கொடுத்து எடுத்த மாப்பிள்ளை.

"ஐயையோ.. உத்தியோகத்தில் சேர்ந்து ஒரு வருஷம் கூட முடியேல்லை. பிறகும் லீவிலை நிற்க வேலைக்கு ஆபத்தாயிடும். டேய் தம்பி ஓடிப் போய் இரத்தினம் அண்ணையின்ரை காரைப்பிடிச்சுக் கொண்டு உடனே வா. நேரே கொடிகாமத்தில கொண்டு போய் விட்டு விட்டு வரட்டும்."

இரத்தினம் அண்ணையின் "சோம செற்" வாடகைக் கார் உடனே வந்தது. மாப்பிள்ளை காரில் ஏறும் போது மனைவியைச் சோகத்துடன் பார்த்தான். அவளது கண்கள் பனித்திருந்தன. இந்தச் சூழ்நிலையின் வலியை உணரும் சக்தியில்லாமல் கார் கொடிகாமத்தை நோக்கி விரைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 பொன் முட்டையிடும் வாத்து

அப்போது கொழும்பில் இலங்கை மின்சார சபையில் பொறியியலாளனாக வேலை செய்து கொண்டிருந்தான் அச்சுதன். கை நிறையச் சம்பளம். வயதும் முப்பத்திரண்டாகிறது. மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஊருக்கு வந்து போவான்.

நல்ல சம்பளத்தில் வேலை பார்க்கும் மகனையோ , மகளையோ பொன் முட்டையிடும் வாத்தாகக் கருதி நேரத்திற்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிடப் பெற்றோர் விரும்புவதில்லை யென்பது பொதுவான அபிப்பிராயம். அச்சுதனின் பெற்றோரும் இதற்கு விதி விலக்கானவர்களல்ல என்பதைப் போல் அவனுக்கு திருமணம் செய்து வைப்பதில் சிரத்தை எடுத்ததாகத் தெரியவில்லை.

அச்சுதனின் இரு சகோதரிகளும் திருமணம் முடித்து நல்ல நிலையிலிருக்கிறார்கள். இவனுக்கு எந்தப் பொறுப்புமில்லை.பிறகேன் தாமதம் ?

அச்சுதனுக்கு ஏழுகழுதையின்ரை வயசாகப் போகிறது என்று நண்பர்கள் கூட கேலி பேசத்தொடங்கிவிட்டார்கள். அவனது பல்கலைக் கழகத் தோழர்களில் அனேகர் குடியும் குடித்தனமுமாகிவிட்டனர்.

சிலர் திருமணம் முடித்தோ முடியாமலோ ஜோடி ஜோடியாக கொழும்பு வீதிகளில் கை கோர்த்து உலா வருவதை இவனும் கண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டிருக்கிறான்.

விடுமுறைகளில் வீட்டிற்கு வரும் போது இந்த மாதம் தனது அந்த நண்பனுக்குக் கல்யாணம், அடுத்த மாதம் இந்த நண்பனுக்குக் கல்யாணம் என்று சாடைமாடையாகச் சொல்லிப்பார்ப்பான். பெற்றோர் அதைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

இறுதியாக அச்சுதனும் அவனது நெருங்கிய நண்பன் ஒருவனும் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டினார்கள். அச்சுதனின் பெற்றோருக்கு ஒரு மொட்டைக் கடிதம் அனுப்பினார்கள்.

***"அன்பிற்குரிய தில்லையம்பலத்திற்கும் அவரது மனைவியாருக்கும் அறியத் தருவது, உங்களுடைய மகன் அச்சுதன் ஒரு வசதி குறைந்த பெண்ணின் காதல் வலையில் விழுந்து விட்டான்.இருவரும் கோல்பேஸ் கடற்கரை, விக்டோரியாப் பூங்கா என்று சுற்றித் திரிகின்றனர். விரைவில் பதிவுத் திருமணம் செய்யவுள்ளனர் என்ற நல்ல செய்தியையும் உங்களுக்கு அறியத் தருகின்றேன்.எல்லாம் நல்லதே நடக்கும்."***

***இங்ஙனம்,***
***உங்கள் நலன்விரும்பி.***

கடிதம் தில்லையம்பலத்தின் கைக்குக் கிடைத்ததுதான் தாமதம் இதுவரை தேடி வந்து இவர் நிராகரித்த சம்பந்தப் பேச்சு வார்த்தைகளில் ஒரு பெண்ணைத் தெரிவு செய்து போட்டோவுடன் கொழும்பு போய்ச் சேர்ந்தார்.செல்வச் சந்நிதி கோவிலில் வெள்ளிக்கிழமை வைத்துப் பெண் பார்க்கும் ஒழுங்குடன் மகனை ஊருக்குக் கூட்டிக்கொண்டு வந்தார்.எல்லாம் நல்லதாக நடந்தன.

## ஏன் இந்த வெளிநாட்டு மோகம்?

அன்புமணி

திரைகடலோடியும் திரவியம்தேடு
என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள்தான்
அதற்காக இப்படியா?
தாலிக்கொடி விற்றுப் பணம் சேர்த்து
கள்ள ஏஜண்டுக்குக் கொட்டிக்கொடுத்து
மனைவி, மக்களுடன் புறப்பட்ட
கள்ளக்கப்பலில் ஏறி, நடுநிசியில் பயணித்து
ஆசையே அலைபோலே,நாம் எலாம் அதன்மேலே
ஓடம்போல ஆடிஅசைந்து பயணம் செய்து
இடையில் அதிகாரிகளால் தடக்கப்பட்டு
கிறிஸ்மஸ் தீவில் சிறைவைக்கப்பட்டு
தண்ணி வென்னியில்லாமல் தவித்து
அவுஸ்திரேலியாவுக்குப் போகும்
அதிர்ஷ்டம் உள்ளவர்கள் போக
ஏனையோர் நாட்டுக்குத் திரும்பும்
அவலம் நமக்குத் தேவையா?
ஏஜெண்டுக்குக் கொடுக்கும்
ஐந்துலட்சத்தில், நாம் சொந்தமாக
ஒரு கடை ஆரம்பித்து
வாழ்வில் முன்னேற முடியாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வானொலி எங்கே செல்கிறது?



–கெகிறாவ ஸஹானா

## மீண்டும் வருமா அந்தக்காலம்?

147 வது 'ஞானம்' இதழில் கலாநிதி துரைமனோகரன் அவர்கள் எழுதிய இலங்கை வானொலி பற்றிய கட்டுரையைப் படித்தபின்னர், நான் ஏற்கனவே எழுதி வைத்திருந்த இக் கட்டுரையை 'ஞானத்திற்கு' அனுப்ப உளங்கொண்டேன். கலாநிதியின் அக்கட்டுரை என்னுள் எழுப்பிவிட்ட சில கருத்துகளையும் இங்கு பதிவு செய்கிறேன்.

முன்பு ஒரு கதை சொல்வார்கள்; அது கதையா உண்மையா என்று தெரியவில்லை.

டேன்சிங்கும், ஹில்லரியும் இமயமலைச் சிகரத்திற்கு ஏறியபோது கையோடு ஒரு வானொலிப் பெட்டியையும் கொண்டு சென்றார்களாம். அங்கே வானொலிச் சேவைகள் யாவும் பேச்சு மூச்சற்றுப் போய்விட்டனவாம். ஆனால், ஒரே ஒரு குரல் மட்டும் தெளிவாக ஒலித்ததாம். அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கில சேவையின் குரலாம். இந்தக் குறிப்பை நமது தேசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது 45ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது அதன்மூலமாகவே கேட்ட ஞாபகம்.

அவ்வளவு உயர்ந்த நமது தேசிய ஒலிபரப்பின் தற்போதைய நிலையோ சொல்லுந் தரமன்று. ஆங்கில சேவையைக் கேட்கவே முடியவில்லை; வர்த்தக சேவை, தென்றல் ஒலிபரப்புகள் அடிக்கடி காணாமல் போய்விடுகின்றன. பல தனியார் சேவைகள் இடையில் குறுக்கிடுகின்றன. அவற்றைக் கடந்து நிலைத்து நிற்கும் திறனை எமது கூட்டுத்தாபனம் இழந்து நிற்பது பரிதாபமே.

இலங்கை வானொலியின் தமிழ் கேட்டு ஆரம்பத்தில் தமிழ் படித்தவள் நான் என்பதைப் பெருமையுடன் எண்ணிக்கொள்ளும் அதேவேளையில், வளர்ந்து வரும் இளம் சமுதாயத்திற்கும், எனது பிள்ளைகளுக்கும் அத்தகைய ஒரு பாக்கியம் கிட்டவில்லை என்ற ஆதங்கத்துடனும் இதை எழுதுகிறேன்.

முன்பெல்லாம் நமக்கு மன உளைச்சல் அல்லது மன அழுத்தம் ஏற்பட்டால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை இரண்டைத் திறந்தால் போதும்; எல்லாம் தீர்ந்து விடும்; புதிய உற்சாகம் பிறக்கும்.

நாமும் எழுந்து நிற்கவேண்டும், நமது ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற பரபரப்பு மிகைத்து நிற்கும். இன்று அந்த நிலைமை இல்லை. வானொலியைத் திறக்கும் மன உந்துதல் ஏற்படுவதுமில்லை; அப்படி தப்பித்தவறி ஏற்பட்டு விட்டாலுமே ஏன் திறந்தோம் என்ற எரிச்சல் எம்மைக் குடையாமல் விடுவதும் இல்லை.

இப்போது என்னுள் எழுகின்ற கேள்வி இது:

தனியார் வானொலிகளுக்கு ஈடு கொடுத்தேயாக வேண்டும் என்ற கட்டாய நிலைமை எமக்கு ஏன் ஏற்பட்டது?

அவர்கள் துள்ளினால் எமது பாரம்பரியங்களை யெல்லாம் விட்டுவிட்டு அவர்களைப்போலவே நாமும் துள்ள வேண்டும் என்று நாம் ஏன் எண்ணவேண்டும்?

நமக்கென்று இருந்த தனிப்பண்பை விட்டுவிட்டு காலத்திற்கேற்ற கோலம் போடவேண்டும் என்று ஏன் கருத வேண்டும்?

ஒரு அரச ஊடகம் வங்குரோத்து நிலை அடைந்துவிட்டது என்று சொல்லி அதைத் தவிர்க்கமுடியாமல் சப்பைக்கட்டு கட்டுவது எமது தாய்நாட்டிற்கே ஏற்பட்ட அவமானம் இல்லையா?

செய்தி அறிக்கையை எடுத்துக் கொண்டால், மக்கள் மனமறிந்த வங்கியையும், சிங்கர் ப்ளஸ்ஸையும், இன்னும் எந்த வர்த்தக விளம்பரம் ஆனாலும் அதையும் இடைச்செருகித்தான் ஒரு அரசாங்க ஊடகம் செய்தி அறிக்கையை வெளியிடவேண்டுமா? இந்த நிலைமையை நாம் ஏன் ஏற்படுத்திக்கொண்டோம்? பத்து நிமிடங்களில் ஒலிபரப்பாக வேண்டிய செய்திகளை அரை மணித்தியாலத்திற்கு இழுத்தடித்து நேயர்களை ஓட ஓட விரட்டுவது என்ன நியாயம்? உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், பொருளாதாரச் செய்திகள், முதன்மைச் செய்தி என்று அவற்றைப் பிரித்து நேரத்தை வீணடிப்பது ஏன்? எவ்வளவு பணங்கொழிக்கும் விளம்பரமானாலும், எமது பாரம்பரியத்தை அதற்காக விட்டுத்தரமாட்டேன் என்று சொல்லமுடியாத தயக்கம் ஏன்? தனியார் வானொலிகளுக்கு நாம் சமமாகியே தீர வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைக்குள் நாம் விழுந்தது ஏன்?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் முன்பு செய்தி வாசித்த நடேச சர்மா மீண்டும் வந்திருக்கிறார் என்றறிந்து ஆவலோடு ஒருநாள் செய்திகளைக் கேட்க முனைந்தேன். ஆனால், அவரது குரலில் பழைய வளம் இல்லை. அப்புறம் நான் அதைக் கேட்பதில்லை.

எழுவாய், பயனிலை இயைபுகளைக் கவனிக்காமல் பெரல் உருளுவதுபோன்று உருண்டு செல்கின்ற தனியார் வானொலிச் செய்திகளோடு ஒப்பிடும்போது இலங்கை வானொலி பரவாயில்லை என்றாலும் இங்கும் தவறுகள் எற்படுகின்றன. செய்திகளைத் தரமாகவும், கலையழகுடனும் தருவதில் பீ.பீ.ஸீயே முதலிடம் வகிக்கின்றது என்பது எனது கருத்து. ஒப்பீட்டளவில் அங்கு இலக்கணப் பிழைகள் ஏற்படுவது குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தென்றலில்' தரமான நிகழ்ச்சிகளென்று 'எமரல்ட் கலைக்கதம்பம்', 'ஆராதனா', 'மலையாளக் கரையோரம்', 'வர்ணஜாலங்கள்' ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடலாம் என்பது எனது கருத்து. பீ. எச். தயாரித்தளிக்கும் விளம்பர நிகழ்ச்சியாகிய 'எமரல்ட் கலைக்கதம்பம்', மிகத் தரமான ஒரு நிகழ்ச்சியாக, பழைய ஞாபகங்களை மீட்டித் தருவதாக, இலக்கிய உணர்வுகளை வளர்ப்பதாக அமைந்துள்ளது; ஒரு புதிய பாடல், ஒரு கலைஞர் சந்திப்பு, ஒரு நகைச்சுவை நாடகம் என்று எமது பிள்ளைகள் இதுவரை அறியாத பல விடயங்களை சிறப்பாகத் தருகிறது. எனினும், அதற்கு முன்னால் ஒலிபரப்பாகின்ற 'சந்தித்த வேளை' என்கின்ற நிகழ்ச்சி அதன் நேரத்தைப் பின்னால் தள்ளி விடுகின்றது. முன்பு நேரக் கட்டுப்பாட்டுக்குப் பேர் போன இலங்கை வானொலியில் இன்று இந்நிலை.


'மலையாளக் கரையோரம்' நாமும் பெற்றிராத ஒரு அனுபவத்தைத் தருகின்றது. முன்பு மிக அருமையாகக் கேட்ட இனிய மலையாளப் பாடல்களுக்கு வித்தியாசமான குரலில், அழகு தமிழில் விளக்கம் சொல்லும் விசாலாட்சி ஹமீடை நாளெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

பழைய பாடல்களுக்கு விளக்கம் சொல்லி அவற்றை ஒலிபரப்பி வரும் 'ஆராதனா' நல்ல நிகழ்ச்சி. நம் காதில் தூரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் ஈழத்து இனிய மெல்லிசையை வழங்கும் 'வர்ணஜாலங்கள்' இன்னும் தரமாக, பாடலாசிரியர் பெயர் போன்ற விளக்கங்களுடன், இதயத்தின் அடி ஆழத்திற்கே போய்விட்ட மேலும் பல மெல்லிசைப் பாடல்களுடன் ஒலிபரப்பாகு மென்றால் நம் உள்ளங்கள் குளிரும்; அப்பாடல்களைக் கேட்டு நாம் பெற்ற அனுபவங்களை எமது பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்கின்ற வாய்ப்பும் கிட்டும்.

இவை தவிர 'தென்றலில்' கலந்து வருகின்ற யாவும் தொலைபேசியை மையமாக வைத்து வரும் உரையாடல்களாகவே உள்ளபடியால் அவற்றைக் கேட்க மனது ஒப்புவதில்லை. யாரும் வம்பளந்து கொண்டிருப்பதை நாம் ஏன் கேட்க வேண்டும்?

வர்த்தக சேவையில் முன்பிருந்த அதே பெயருடன் இன்றும் ஒலிபரப்பாகிவரும் 'முத்துவிதானம்' நல்ல நிகழ்ச்சி. முன்பு அது அறிவிப்பாளர் தம் ஞாபகங்களைப் பகிர்ந்து கொண்டு கலைஞர் சந்திப்புகளையும் ஒலிக்க விட்டது. இன்று அந்நேரத்தில் ஏற்படும் ஒலிபரப்புத் தெளிவின்மையால் அதை சரியாகக் கேட்க முடிவதில்லை.

என்னைப் பொறுத்தவரை 'தென்றல்' என்றும் , வர்த்தக சேவையென்றும் பிரிக்காமல் இரண்டு ஒலிபரப்புகளையும் சேர்ப்பதால் நிறைந்த பயனை அடையலாமெனவும், ஒரு தரமான சேவையாக அதை மிளிரச் செய்யலாம் எனவும் நினைக்கின்றேன். என்னைப்போலவே முன்பு இலங்கை வானொலி வளர்த்துவிட்ட பலரை நான் சந்தித்திருக்கிறேன். மண்டூர் அசோகன், கோப்பாய் சிவம், பரீட். ஏ. ஜவ்ஸகி ஆகியோர் வானொலியிலும், இலக்கிய உலகிலும் பிரபலமாக இருந்தவர்கள்.' இன்று அத்தகைய அறிவாற்றலும், திறமையும் உள்ள நேயர்கள் இருக்கிறார்களா? அவர்களை வளர்த்து விடுவதற்கேற்ற ஆளுமை நிறைந்த அறிவிப்பாளர்கள் எமது தாய் வானொலியில் இருக்கிறார்களா? நிகழ்வு என்பதற்கும், நிகழ்ச்சி என்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை அறியாத அறிவிப்பாளர்களை வைத்துக் கொண்டு நாம் முன்பு கொண்டிருந்த உயர்ந்த நிலையை மீண்டும் அடைய முடியுமா?



எனது அபிமானத்திற்குரிய வானொலி அறிவிப்பாளரும், எனது முதல் நண்பருமான திரு. ராஜகுரு சேனாதிபதி கனகரட்னம் அவர்களை அவரது மருதங் குளம், காக்காப்பள்ளி (சிலாபம்) இல்லத்தில் சமீபத்தில் சந்தித்தேன். தனது பெற்றோரின் வீட்டில் தன்னந்தனியே ஒரு முனிவரைப்போல, ஒரு ஞானியைப்போல வாழ்ந்து கொண்டிருக்கும் அவரிடம்(வயது 78) ராஜேஸ்வரி ஷண்முகம் பற்றிய ஞாபகங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டேன். வானொலி நிலையத்தில் தமிழ்ப் பண்பாட்டோடு திகழ்ந்த ஒரு பெண்மணி என்றும், எந்தச் சோதனையையும் சமாளிக்குந் திறனும், நகைச்சுவையோடு அதுபற்றி பிறரிடம் சொல்லிச் சிரிக்கும் பண்பும் அவரிடம் இருந்தன என்றும் நினைவு கூர்ந்த அவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது வரலாற்றில் யாருக்குமே செய்யாததொரு சிறப்பான மரண அஞ்சலியை அவருக்குச் செய்தது என்றும் குறிப்பிட்டார்.

வானொலிச் சேவையில் தான் கழித்த 28 வருடங்கள் பற்றியும் அடிக்கடி என்னுடன் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் அவர், வானொலி ஒலிபரப்புகள் சம்பந்தமாக ஒரு நூலும் எழுதியிருக்கிறார். தலைப்பு: 'மனம் போன போக்கில்..'

ராஜேஸ்வரி பற்றிக் குறிப்பிடும்போது, தான் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிய காலத்தில் 'பொங்கும் பூம்புனல்' நிகழ்ச்சியில் அவர் இரண்டு வரிக் கவிதை சொல்வது பொருத்தமாக இல்லையென்றுகூறி அதை நிறுத்தும்படி கட்டளையிட்டதாகச் சொன்னார். இதைக்கேட்டபோது நான் நினைத்துக்கொண்டேன்:

ராஜேஸ்வரியின் தமிழைப் புகழாதவர்கள் இல்லை, அவரது இருவரிக் கவிதையால் வசீகரிக்கப்படாதவர்கள் இல்லை என்ற நிலை இருக்கையிலேயே அதை நிறுத்தும்படி ஒரு தலைமை கூறுவதென்றால்...? இன்றைய நமது தலைமைகளிடம் அந்த வலு உண்டா?

"முற்றத்து மல்லிகையும் மணம் வீசும்" என்று கூறி அவர் ஒலிபரப்பிய 'மல்லிகை என் மன்னன் மயங்கும்..." இன்றும் என் காதுகளில் ஒலிக்கும்போது இன்னும் நினைத்துக் கொள்கிறேன்:

பேர் கேட்ட அனைவரையும் நீராட்ட வந்த அந்தப் பூம்புனல் போன்றதொரு இனிய ஞாபகம் அக்கால நம் வானொலி பற்றி நினைக்கும்போது நம் மனங்களில் நிறைகின்றதே..என் பிள்ளைகள் வளர்ந்த பின்னால் அவர்கள் மனங்களை நிறைக்கும் வானொலி ஞாபகங்கள் வாராமலே போமோ?

2012.08.31.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் இலக்கியத் திறனாய்வியல்

## அடிப்படைகள் — வரலாறு — புதிய எல்லைகள்

கலாநிதி நா. சுப்பிரமணியன்

(23)

4. தமிழின் சமகால இலக்கியத் திறனாய்வியல் ...

4.1.7 எண்பதுகளிலிருந்து தொடரும் செல்நெறிகள் - தொடர்ச்சி

***பெண்ணிய மற்றும் தனித்திய இலக்கிய நோக்குகளின் பொது அம்சங்கள்***



***பெண்ணிய*** மற்றும் ***தனித்திய*** இலக்கிய நோக்குகளின் அடிப்படையான பொது அம்சம் ***'அதிகாரத்துக்கு எதிரான எண்ணங்களைக் கட்டமைத்தல்'*** என்பது முன்னரே சுட்டப்பட்டதாகும். இவை அடக்கியொடுக்கப் பட்டவர்களின் குரல்களாக வெளிப் படுபவை என்பதும் ***பண்பாட்டு நிலையிலும் நடைமுறை வாழ்விலும் தத்தம் 'சுய'த்தை சுதந்திரமாக வெளிப்படுத்தும் ஆர்வ முனைப்பே*** மேற்படி குரல்களின் அடிநாதமான அம்சம் என்பதும் வெளிப்படை. அவ்வகையில், முறையே ஆணாதிக்க அரசியலையும் உயர்சாதி அரசியலையும் அவை தொடர்பான பண்பாட்டுப் படிமங்களையும் 'தகர்ப்பமைப்பு' செய்வதை இவை முக்கிய நோக்காகக் கொண்டவையாகும்.

இவ்வகையில் இவைதொடர்பான இலக்கியச் செயற்பாடுகள் மற்றும் திறனாய்வியல் முயற்சிகள் என்பனவாக அமைந்தவை இருவகைப்படுவன. இவற்றுள் முதல்வகைச் செயற்பாடானது ***'தம்மை அடக்கிவைத்துள்ள ஆதிக்க சக்திகளின் செயற்பாடுகளிலுள்ள அதிகார அம்சங்களை நுனித்து நோக்கி விமர்சித்தல்'*** ஆகும். இரண்டாவது வகைச் செயற்பாடாக அமைந்தது, ***'மாற்றுக் கலாசார அம்சங்களை முன்னிறுத்தல்'*** ஆகும். இவ்விரு நிலைகளிலும் இவை மேற்கொள்ளும் திறனாய்வுச் செயற்பாடுகளின் பொதுவான குறிக்கோளாக அமைந்தது ***'பண்பாட்டு அடையாளங்களையும் அவை தொடர்பிலான வரலாறுகளையும் மீளக் கட்டமைத்தல்'*** என்ற 'நோக்கு' ஆகும். இவ்வகையில் குறிப்பாக, 'இதுவரை பதிவாகியுள்ள வரலாற்றிலே அதிகார மட்டத்தினர்களால் ஒதுக்கப்பட்டுவிட்டவையும் மூடிமறைக்கப் பட்டுவிட்டவையுமான ***பெண்ணிய*** மற்றும் ***தனித்திய*** உணர்வுசார் கூறுகளை மீட்டெடுத்து அவற்றூடாகப் புதிய வரலாற்றை உருவாக்கிக் கொள்ளும் செயற்பாடு'களை மேற்படி ***பெண்ணிய*** மற்றும் ***தனித்திய*** வாதிகள் முன்னெடுத்து வருகின்றனர். இவை இவ்விரு இயக்கநிலைகள்சார் திறனாய்வு அணுகுமுறைகளின் பொதுமைகள் ஆகும். அடுத்து, இவற்றின் திறனாய்வு இயங்கு நிலைகளில் புலப்படும் தனித் தன்மைகளிற் சில இங்கு கவனத்துக்கு வருகின்றன.

***பெண்ணியத் திறனாய்வு வகைகளும் 'பெண் மொழி' என்ற கருத்தாக்கமும்***

மேலைத் தேயங்களில் உருவாகி வளர்ந்த ***பெண்ணியத்*** திறனாய்விலே முக்கியமான இரண்டு கருத்தாக்கங்கள் இங்கு நமது கவனத்துக்குரியவை. இவற்றுள் ஒன்று, ***பெண்ணியத் திறாய்வு*** (*Feminist Critique*) என பொதுவாக வழங்கப் படுவதாகும். மற்றது ***கைனோ கிறிட்டிஸிஸம்*** (***Gyno Criticism)*** என வழங்கப்படுவது. இதனைத் தமிழில் பொதுவாக ***பெண்நிலைநோக்கு திறனாய்வு*** மற்றும் ***பெண்படைப்புத் திறனாய்வு*** ஆகிய பெயர்களால் வழங்குவர். இவ்வாறான வகைப்பாடுகளை முன்மொழிந்தவர் அமெரிக்கப் பெண்ணியவாதியும் இலக்கிய விமர்சகருமான எலைன் ஷோவால்டர் (Eline Showalter -1941- ) ஆவார்.

மேற்சுட்டிய இரண்டும் ***பெண்ணியம்*** சார் பார்வைகளேயெனினும் மேற்படி முதல்வகையான ***பெண்ணியத் திறனாய்***வானது பொதுவான இலக்கியக் கோட்பாடுகளினடிப்படையிலே அமைவதாகும். பண்டைய மற்றம் சமகால இலக்கியங்களில் ஆணாதிக்க குணாம்சங்கள் எவ்வாறு தொழிற் பட்டுள்ளன என்பதை நுனித்து நோக்கும் வகையிலான மறுவாசிப்பே இவ்வகைத் திறனாய்வின் முக்கிய செயற்பாடாக அமையும். சுருங்கக் கூறுவதாயின் இலக்கிய வடிவத்திலான பெண் ஒடுக்குமுறை (Women's oppression in literary form) என்ற அம்சத்தை உடைத்தெறிவதே இதன் குறிக்கோளாகும்.

மேலே இரண்டாவதாகச் சுட்டப்பட்ட ***பெண்நிலை நோக்கு திறனாய்***வானது பெண்களின் படைப்புகளை மையப்படுத்திய தான ஆழமான பார்வையாகும். ***'குறித்த படைப்பைத் தரும் ஒருவர் ஆணாக அல்லாமல் பெண்ணாக அமையுமிடத்து அந்த வேறுபாட்டுநிலையானது அப்படைப்பினூடாக தெளிவாகவே இனங்காணக் கூடியதாக இருக்கும்.'*** என்பது இப் பார்வையின் அடிநாதமான அம்சமாகும். இவ்வகையில், அப்படைப்பின் பொருள்தேர்வு, உத்திமுறைமைகள் மற்றும் மொழிநடை முதலிய படைப்பியல் அம்சங்களை நுனித்து நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாக இவ்வகைத் திறனாய்வு அமையும். பெண்களால் உருவாக்கப்படும் படைப்புகளில் பெண்குறித்தான புதிய விளக்கங்களும் மதிப்பீடுகளும் பெறப்படும் என்பதால் இது ***பெண்நிலை நோக்கு திறனாய்வு*** எனப்படுகின்றது. வரலாற்றிலே ஆண்கள் உருவாக்கியுள்ள இலக்கியக் கோட்பாடுகளை முற்றாகவே புறக்கணித்துவிட்டுப் பெண்களே தமக்குரிய அநுபவங்களினடியாகப் புதிய படைப்புகளைத் தரவேண்டும் என்பதே இதன் எதிர்பார்ப்பாகும். அதே வேளை, '***பெண்களின் எழுத்துகள் தொடர்பான ஆண்களின் விமர்சனங்களை முற்றாகவே புறக்கணித்தல்***' என்பதான எல்லைவரை இத் திறனாய்வு நோக்கு செல்கின்றதென்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகிறது.

எலைன் ஷோவால்டர் சுட்டிய வகைமைகளுள் மேற்படி இரண்டாவதான ***பெண்நிலைநோக்கு திறனாய்வை*** வழிமொழிந்து அதற்கு வலுச்சேர்த்த வர்களுள் முக்கியமானவர் ஆனிட் கொலோட்னி (Annette Kolodny-1941—-) என்ற பெயர்பூண்ட மற்றொரு அமெரிக்க பெண்ணியவாதியாவார். ***'பெண் படைப்பாளர்களின் நோக்கையும் போக்கையும் ஆராய்வது பெண்ணியம்சார் திறனாய்வாளர்களின் முதன்மைப் பணி'*** என்பதே இவருடைய கருத்தாகும். இவ்வாறான திறனாய்வு களினூடாக ***பெண்ணிய பாணி*** (Femine mode) என்பதான ஒன்றை இனங் கண்டறிவது சாத்தியம் என்பதை இவர் தம் எழுத்துகளில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறாக பெண்படைப்பாளரின் நோக்கு, போக்கு என்பவற்றை மையப்படுத்திய பார்வையானது ***'பெண்ணிய நோக்கிற்கு நன்மை பயப்பதன்று'*** என்பதான கருத்தும் பெண்ணியத் திறனாய்வுலகில் நிலவுகின்றது என்பது இங்கு பதிவுபெறவேண்டிய முக்கிய செய்தியாகும். இவ்வகையில் மீரா ஜெலன் (Mera Jelan) என்பாரின்.

*"பெண்மைய எழுத்துகளை வைத்துக் கொண்டு, இலக்கியங்களில் பெண்களின் மரபினை எடுத்துரைப்பது பெண்ணியத் திறனாய்வு ஆகாது. இப்போக்கு ஆண்களின் மனதில் 'பெண் என்ற தனித்து' வேலிபோட்டுவிடும் (Female enclave). ஆண்-பெண் வேறு பாடின்றி எல்லாப் படைப்பு களையும் பெண்பார்வைகொண்டு (Women's view point) ஆராய்வதே சிறந்த திறனாய்வுப் போக்கு"*என்ற கூற்று முக்கியமானது. (மேற்கோள்: இரா. பிரேமா-**பெண்ணியம்** -2000. ப.143. எடுத்தாண்டவர் நா. மகாராஜன், ***"இக்காலத் தமிழ்ப் படைப்புகளில் பெண்மொழி"*** முனைவர்ப்பட்ட ஆய்வேடு. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் -2008. ப.65.)

பெண்ணியத் திறனாய்வு நோக்கு தொடர்பான சில பொதுச் செய்திகள் மேலே நோக்கப்பட்டன. அடுத்து, இத்தொடர்பிலே தனிக்கவனத்துக்குரியதான, ***'பெண்மொழி'*** என்ற கருத்தாக்கம் பற்றியதான ஒரு சிறுகுறிப்பு இங்கு முன்வைக்கப்படுகிறது.

*'மொழிகள் சமூக உற்பத்திக் கருவிகளாகும். அவை தன்னைக்கையாளும் பிரிவினர்க்குச் சாதகமாக இயங்கக்கூடிய இயல்பின. இவ்வியல்பு காரணமாக அவை காலந்தோறும் தம்மைப் புதுப்பித்து-புதுமையாக்கம்பெற்று - வந்துள்ளன. அவ்வகையில் **பெண்மொழி** என்பது 'பெண்மைய'க் கருத்தியல் சார்ந்த ஒரு புதுக் கருத்துருவாக்கமாகும்.'*

*'ஆண் மைய' அதிகார நிலைக்கு எதிரான ஒரு மாற்றுக்குரலாக அமைவது பெண்மொழி. இது பெண்கள் பற்றி ஆண்சமூகம் அமைத்துவைத்திருக்கும் அனைத்துவகைக்கற்பிதங்களையும் கட்டவிழ்ப்புச் செய்வது. அத்துடன் பெண்பற்றிய பெண்பார்வை யிலான மதிப்பீடுகளைக் கட்டமைக்கும் செயற்பாட்டையும் அது மேற்கொள்கிறது.'* ***பெண்மொழி*** என்பது தொடர்பான பொதுவிளக்கம் இதுதான். இவ்வாறமையும் ***பெண்மொழி***யானது உடல், உள்ளம், வாழ்க்கை முறைமை, பண்பாட்டு நடத்தை ஆகிய அனைத்தையும் கவனத்திற் கொள்வதாகும். இவ்வகையில் அது மேற்படி அம்சங்கள் தொடர்பாக ஆண்வழிச் சமுதாயம் கட்டமைத்துள்ள நேர்கோட்டுத் தனமான பார்வைகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து விலகிநிற்பதாகும்.அத்துடன் பெண்களின் இயல்பான அநுபவநிலைகள் மற்றும் அவ்வநுபவங்களனடியான மாற்றுக் கருத்தாக்கங்கள் என்பவற்றைப் பதிவு செய்வதாகவும் அது திகழ்வதாகும்.

இவ்வாறான ***பெண்மொழி***யின் சிறப்புக் கூறுகள் பொதுவாக உரைநடையைவிட கவிதைநடையிலேயே துல்லியமாக வெளிப்படுவன என்பது ஆய்வுகளில் தெரியவரும் முக்கிய செய்தியாகும். அதனால் பெண்மொழிக்கான 'படைப்பு மொழிநடை'யாக 'கவிதை நடை'யே கணிக்கப்படுகிறது. இதனடிப் படையில் குறிப்பாக, தமிழின் பெண்மொழி பற்றிய திறனாய்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பெண் கவிஞர்களின் கவிதையாக்கங்களையே நுனித்து நோக்க முற்பட்டுள்ளனர். இவ் வகையில் தமிழின் பண்டைய பெண் கவிஞர்களாக அறியப்படும் வெள்ளிவீதியார், ஔவையார், காரைக்காலம்மையார், ஆண்டாள், உத்திரநல்லூர்நங்கை, ஆவுடையக்காள் முதலிய பலரின் கவிதைகளிலே மேற்சுட்டியவாறான பெண்மொழிக்கான சிறப்புக்கூறுகள் பயின்றுள்ள முறைமைகள் இத்திறனாய்வாளர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேற்படி கவிஞர்களுடைய ***'பெண்மொழி'***ப் பண்புகள் என்றவகையில், *'பெண் தன்காமவேட்கையை வெளிப்படுத்தக் கூடாது என்றபுலமை மரபை மீறுதல், ஒட்டுமொத்த சமூகத்தையே அந்நியப்படுத்தி நிற்றல், சாதியத்தால் ஒடுக்கப்படும் பெண்மையின் எதிர்நிலைக் குரலாக வெளிப்படல் ,பாலின சமத்துவம் பேசல் மற்றும் 'தீட்டு' என்ற சமூகக்கருத்தியலை மறுதலித்தல்'*முதலியன ஆய்வுகளில் இனங்கண்டு காட்டப்பட்டுள்ளன.

நவீன இலக்கியங்களின் ***பெண்மொழி***யில் குறிப்பாக, ***ஆண்களின் பாலியல் நடத்தைகள்*** மற்றும் ***சமூகத்தின் பொதுவான பண்பாட்டு நடத்தைகள் எனப்படுபவை பெண்களின் அடையாளத்தை இழக்கச் செய்கின்றன'*** என்பதான அம்சம் முனைப்பாக வெளிப்படுவது தெரிகிறது. ***ஆண்களின் பாலியல்நடத்தை*** தொடர்பில், ***'பாலியல் வன்முறை'*** மற்றும் ***'பாலுறவு வன்முறை'*** என இருநிலைப்பட்ட அநுபவத்தளங்கள் ***பெண்மொழிக***ளில் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் முதலாவது வகைசார் நடத்தை எனப்படுவது பொதுவான ஆண்சமூகத்தின் வக்கிர நோக்கு சார்ந்த செயற்பாடுகளைச் சுட்டி அவற்றினூடாகப் பெண்மை எய்தும் பாதிப்புகளைக் குறித்துநிற்பதாகும். மற்றது, குடும்பநிலையில் 'கணவன் - மனைவி' உறவில் ஆணின் முனைப்பு முதன்மை பெறுவதால் ஏற்படும் உடலியல் மற்றும் உளவியல் பாதிப்புகள் தொடர்பானதாகும். நவீன இலக்கியங்களின் - குறிப்பாக நவீன கவிதைகளின் - ***பெண்மொழி*** களூடாக அழுத்தமாக வெளிப்படும் அம்சங்களாக இவை கணிக்கப்படுகின்றன.

இவ்வாறாக, சமகாலத் தமிழிலக்கியச் சூழலில் ***பெண்ணிய நோக்கு*** தொடர்பாக நிகழ்ந்துள்ள திறனாய்வுப் பார்வைகளின் வளர்ச்சிப்போக்கானது சான்றாதாரங்களுடன் தனிநிலையில் விரிவாக எடுத்துரைக்கப்படவேண்டிய விரிந்த பொருட் பரப்புடைய தாகும். இவ்வாறான ***பெண்ணியத் திறனாய்வு***சார் சிந்தனைகள் அண்மைக்காலத்திலே ***மாற்றுப் பாலியல்பு*** என்பதான ஒரு தனிப் பெயரிலும் அடையாளப்படுத்தப்படுகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

***'தலித்' இலக்கிய நோக்கும் அதுசார்ந்த உணர்வுநிலை அம்சங்களும்***

தமிழகத்தின் ***'தலித்' இலக்கிய நோக்கு*** பற்றித் தெளிந்துகொள்வதறகு அதன் ***அழகியல்*** பற்றிய புரிதல் நமக்கு அவசியமாகிறது. அவ்வகையில் **தமிழரின் அழகியல் மரபு** தலித்தியரால் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டதென்பது கவனத்துக்குரியதாகிறது.

***அழகியல்*** என்ற தத்துவக் கலைச்சொல்லானது அடிப்படையிலே 'சுவை' அதாவது 'இரஸனை' என்ற உணர்வுத்தளத்தில் முகிழ்த்ததாகும். இந்த 'சுவை 'என்ற அம்சமானது அதனை (சுவைத்தலை) மேற்கொள்பவர் களின் மனப்பக்குவங்களுக்கேற்ப வேறுபடுவதென்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே, "எது அழகு?" என்ற வினாவுக்கான விடைகள் ஆளுக்காள் வேறுபடுவது தவிர்க்கமுடியாதது. ஆயினும் அழகுக்கான முக்கிய மான சில அடிப்படைக்கூறுகள் எனச் சிலவற்றை அழகியலார் இனங்காட்டியுள்ளனர். அவற்றுள் முக்கியமானவையாக, ***'சுத்தம்'***(தூய்மை), ***'குறித்த சீரொழுங்கு'***, ***'உணர்வுகளை நுட்பமாக வெளிப்படுத்தும் முறைமைகள்***(உத்திமுறைகள்) என்பன குறிப்பிடப்படுகின்றன. .

தமிழிலக்கியமரபின் ***அழகியல்*** பற்றிப் பேசுபவர்கள் தொல்லிலக்கணமான **தொல்காப்பிய**த்தின் 'பொருளதிகாரம்' கூறும் ***நாடகவழக்கு*** (அகத்திணை யியல் நூற்பா:55) என்பதையும் மணிவாசகரின் **திருக்கோவையா**ரின் முதற்பாடலுக்கமைந்த உரை விளக்கத்தையும் மையப்படுத்தி விளக்கம் தருவது வழக்கமாகிவிட்டது. **தொல்காப்பிய**த்தின் ***நாடக வழக்கு*** என்ற தொடருக்கு இளம்பூரணர், " ***சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்தக் கூறுதல்"*** எனவும், நச்சினார்க்கினியர், ***'புனைந்துரைவகை'*** எனவும் பொருள் கூறுவர், (இவைபற்றிய மேலதிக விளக்கத்திற்கு நோக்குக: இத்தொடரின் 6ஆம் கட்டுரை) **திருக்கோவையா**ரின் முதற்பாடலுரையிலே ***'திரு'*** என்ற சொல்லுக்கு ***"கண்டோரால் விரும்பப்படும் தன்மை"*** எனப் பொருள் கூறப்பட்டுளது.

மேற்சுட்டிய விளக்கங்களிலே *'சுவைபட வருவனவற்றைத் தொகுத்தல்'* என்பது குறித்த சீரொழுங்கையும் *புனைந்துரைத்தல்* என்பது உத்திமுறைமைகளையும் சுட்டுவன என்பதை உய்த்துணர்ந்துகொள்ளலாம். *'கண்டோரால் விரும்பப்படும் தன்மை'* என்பதனால் 'தூய்மை'யும் 'சீரொழுங்கு'ம் ஒருசேர உணர்த்தப்பட்டுள்ளன.

'அழகு'பற்றிய, தமிழ்மரபு சார்ந்ததான மேற்படி கருத்தியலை முற்றுமுழுதாக விமர்சிக்கின்ற 'கலகக் குரல்'களாகவே ***தலித் அழகியல்*** கருத்தாக் கங்கள் வெளிப்பட்டன. நாம் மேலே நோக்கிய 'அழகு' பற்றிய சிந்தனையானது ***'மேட்டுக்குடியினர் -அதாவது ஆதிக்கசாதியினர் - கட்டிவைத்த கருத்தாக் கங்களின் தொகுதியே'*** என்பதே தலித் இலக்கியவாதிகள் பலருடைய நிலைப்பாடாகும். இவ்வகையில் குறிப்பாக ,

***மேற்படி 'அழகு' பற்றிய கருத்தாக்கங்கள், 'சமூகத்தின் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் அழகுணர்வுகளை சிதைத்து, பார்வைக்கு வெளியே தெரியாதவகையில் மூடிமறைத்துவிட்டன'***

என்பதே அவர்களது கருத்தாகும். அத்துடன், அவ்வாறு மூடிமறைக்கப் பட்டவற்றை உரியவாறு ***மீட்டுருவாக்கம்*** செய்யவேண்டியதான கடப்பாடு தமக்கு உளது என்பதையும் அவர்கள் எடுத்துரைக் கின்றனர். இவ்வகையில் ***தலித் அழகிய***லை, ***தலித் கலை அழகியல்*** என்றும் அவர்கள் குறிப்பிடுவர்.

இத்தொடர்பிலே தலித் இலக்கியவாதிகளின் உணர்வோட்டங்கள் எவ்வாறமைந்துள்ளன என்பதை இனங்காட்டும்வகையில் ராஜ் கௌதமன் மற்றும் விழி. பா. இதயவேந்தன் ஆகிய இருவரின் கருத்தோட்டங்களை இங்கு பதிவுசெய்வது பொருத்தமாக அமையும் எனக் கருதுகிறேன். ராஜ் கௌதமன் அவர்கள் 1993இல் தாம் வெளியிட்ட **தலித் பண்பாடு** என்ற நூலிலே *'தமிழில் தலித் இலக்கியம்'* என்ற தலைப்பிலான இயலிலே அழகியல் பற்றிய மரபான பார்வைகளுக்கும் ***'தலித்திய'***ப் பார்வைக்கு மிடையான வேறுபாட்டைத் தெளிவாகவே வரையறுத் துள்ளார். அதில் அவர் தமிழின் மரபான ***அழகியல் பார்வை***சார் இலக்கியங்களை ***'அறிவாளி இலக்கியம்'*** என்ற வகைமையில் அடக்குகிறார். இதற்கு மாறான பார்வைசார் இலக்கிய ஆக்கங்களை ***'மக்கள் இலக்கியம்'*** மற்றும் ***'விடுதலை இலக்கியம்'*** ஆகிய பெயர்களால் அவர் அடையாளம் காட்டுகிறார். இவ்விரண்டாவது கைமையின் ஒரு புதுவரவாகவே ***தலித்திய இலக்கிய***ங்களை அவர் காண்கிறார். (பக்: 93-97)

***அறிவாளி இலக்கியம்*** பற்றியும் அதனைச் சார்ந்த இலக்கியவாதிகள் பற்றியுமான அவரது விமர்சனம் வருமாறு:

*"இதைத்தான் கலைத்தரமான, தூய இலக்கியம் என்பார்கள்.....இதனைப் படைக்கின்ற–படிக்கின்ற கலை இலக்கிய அறிவாளிகளுக்கு,இலக்கியத்தை விட்டால் வாழ்வில் உன்னதமானது வேறு ஒன்றும் கிடையாது. இலக்கியத்தை, கலையைக் கடந்து இவற்றுக்கு வேறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பயன் ஏதும் கிடையாது என்பது இந்தவித இலக்கியத்தின் சித்தாந்தம். அறிவாளி இலக்கியவாதிகளுக்கு இலக்கியம் 'புனிதமான கோவில்'மாதிரி. அழகியல் அநுபவம் பக்திப் பரவசம் மாதிரி , இலக்கியப் படைப்பு தவம் மாதிரி. இலக்கியப் படைப்பாளி மேதை மாதிரி. இந்த மேதை எப்போதும் காலம். இடம், சாமான்ய மக்களின் அன்றாடக் கவலை ஆகிய அனைத்தையும் கடந்தவன்... இப்படிப்பட்ட அறிவாளி இலக்கியமானது, இலக்கியத்தின் சமூக,அரசியல் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை தருவதில்லை." (**தலித் பண்**பாடு ப. 93-94)

இவ்வாறு மரபான அழகியற் சார்பான ஆக்கமுயற்சிகளை ***அறிவாளி இலக்கியம்*** எனச் சுட்டி விமர்சிக்கும் ராஜ் கௌதமன் அவர்கள் ***மக்கள் இலக்கியம்*** என்ற வகைமையில் சமூக இயக்கங்கள் சார்பான இலக்கிய முயற்சிகள் பலவற்றையும் - குறிப்பாக ,***சுயமரியாதை, இடதுசாரி, திராவிட*** மற்றும் ***பெண்ணிய, தலித்திய*** இலக்கிய முயற்சிகளை- தொகுத்துப் பேசுகிறார். 'விடுதலை சார்ந்த அரசியலை முன்னெடுப்பன' என்பதே இவற்றில் அவர்காட்டும் பொது அம்சமாகும். (**தலித் பண்பாடு**.பக். 94-95). இத்தொடர்பில ***தலித் இலக்கியம்*** பற்றிக் குறிப்பிடுமிடத்து அவர்,

"தலித் இலக்கியம் , தலித் பண்பாட்டிலிருந்து பிரிக்கமுடியாத ஒரு அங்கமாகும். தலித் பண்பாட்டின் கூறுகள் யாவும்,தலித் இலக்கியத்திலும் இருப்பதை எதிர்பார்க்கலாம். தலித் இலக்கியத்தின் குறிப்பிட்ட நோக்கம் தலித்துகளின் விடுதலை. அடிப்படையில் தலித் இலக்கியமானது ,பரந்துபட்ட தலித் அரசியலின் கீழ்வருகிற பண்பாட்டு நடவடிக்கையாகும். கலகமே இதன் வடிவம். , விசயம் எல்லாமும். இதனை ஒருவிதப் பண்பாட்டு அரசியல் என்று கூறலாம்... இது தலித் கலக அழகியலை தலித் அரசியலோடு இணைக் கிறது,தலித் இலக்கியம் தனக்கான உருவாக்கத்தை பிற பெண்ணிய ,கறுப்பர் மற்றும் சொந்த மண்ணிலுள்ள நாட்டுப்புற இலக்கியங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் (ப.97)

ராஜ் கௌதமன் அவர்களின் பார்வை இது. இனி விழி .பா. இதயவேந்தன் அவர்கள் 2002இல் வெளியிட்ட **தலித் அழகியல்** என்ற கட்டுரைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள சில கருத்துகளை இங்கு நோக்கலாம்.

"தலித் அழகியலை, தலித் கலக அழகியல் என்றும் நாம் சொல்லலாம்."...

"இங்கு நம் தமிழகச் சூழலில் தலித் அழகியல் உள்ளடக்கிய தமிழ் அழகியல் உள்ளது. மேட்டுக்குடியினர் பிரித்துவைத்த இந்தச் சமூக அமைப்பின் மிச்ச சொச்சங்களில் தலித் அழகியல் என்பது பார்வைக்கு வெளியே தெரியாமற்போன வரலாற்றைப் பார்க்கிறோம்."

....

"அழகு என்று சொல்கிற எல்லாம் அழகானதும் அல்ல,அழகற்றவை என்று சொல்வது அழகற்றவை என்றும் நாம் முடிவெடுத்துவிடக் கூடாது. இவ்வாறு முடிவெடுத்தால் நமது பார்வையில் கோளாறு என்ற அர்த்தம்."

.....

"உயர் சாதிகளுக்கென்று உணவு ,உடை,பழக்கவழக்கம், நாகரிகம்,பண்பாடு, கலை, இலக்கியம், என எல்லாம் ஒழுங்கோடும் நேர்த்தியொடும் உள்ளதாகவும் இவற்றிற்கு ஏதும் தீங்கு நிகழாமல் இருக்கவேண்டும் எனக் காலங்காலமாய் அனைத்தையும் ஓர் உன்னத அழகியலாக கற்பிக்கப்பட்டு பராமரித்து வருவதைப் பார்க்கிறோம்."

"... தனிச் சுடுகாடு , தனி (குளக்கரை)துறை , செருப்புப்போட, நகை அணிந்தகொள்ள மறுப்பு, சைக்கிளில் செல்லத் தடை, நேரில் வரத் தடை, குடிநீர் மொள்ளத் தடை, தனித் தேனீர்க்குவளைப் பிரச்சினை, மலம் தின்னவைக்கும் கொடுமைகள், கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதைமேலேற்றுதல் ,குடிசைகள் தீக்கிரையாதல், ஆண்டைக்கு அடிமைப்பணி புரிதல், நிலமிழப்பு ...இப்படிப் பலவாறாகச் சிதைந்து போயிருக்கிறது தலித் வாழ்க்கையில் அழகியல். இவை எல்லாவற்றிலும் தலித்துகளின் பதிவுகள் இருப்பதோடு அழகியல் கூறுகள் மேம்பட்டு நிற்கிறது. உயர் சாதிப் பண்பாட்டில் எல்லாம் மேலானவையாகப் பாவிக்கப்படுகின்றன. கற்கவும் புரோகிதம் பண்ணவும் நாட்டை ஆளவும்... இன்னபிற எல்லாப் பணிகளுக்கும் தான்தான் சிறந்தவன் என்பதை உயர்சாதிப் பண்பாட்டு அழகியலாக நிறுத்தப்படுகிறது. இந்த மரபுவழிப்பட்ட சிந்தனைமுறைகளை ஒழிப்பது என்பதுதான்



வே. ஐ. வரதராஜன்

கனிவுப் பேச்சில்
காமம் துளிர்க்கிறது;

பாதி இரவின்
கனத்த இருள்
தனித்துக் கிடக்க,
தூண்டிய திரியில்
பற்றிய நெருப்பால்,
சிறிது வெளிச்சம்
கடந்து போகிறது;

மீதி இரவில்
வெறும் வயிற்றில்
சிறகுகள் படபடக்கும்;

காமம் தொலைந்த
நாளின் விடியலில்
வெளிச்சத்தை நோக்கி
வயிற்றினைத் திறந்தவாறு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இன்றைய தலித்தியவாதிகளின் கடமையாக உள்ளது. மேல்சாதிப் பண்பாட்டு அழகியலுக்கெதிராக படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று அணிசேர்ந்து இது தாண்டா 'தலித் அழகியல்' என்பதை முன்னிறுத்த வேண்டியது அரசியல் பங்களிப்ப மட்டுமன்றி படைப்பாளர்களின் கடமையுமாய இருக்கிறது."* **(தலித் அழகியல்.**பக்.4-7.)

***தலித்*** அழகியல் தொடர்பான மேற்படி உணர்வோட்டங்களின் நியாயப்பாட்டிற்கு விளக்கம் தேவையில்லை. அந்த அளவுக்கு அவ்வுணர் வோட்டங்களின் நியாயப்பாடு வெளிப்படையானது. பண்பாட்டு மரபுகளாக பேணப்பட்டவை தொடர்பாக நமக்குக் கிடைத்துள்ள வரலாற்று மூலங்களில் அமைந்திருக்கக் கூடிய ***அழகியல் கூறுகள்*** எனப்படுபவற்றுள் - குறிப்பாக எழுத்தாக்கங்கள் மற்றும் கலைப் படிமங்கள் முதலியவற்றில பயின்றுள்ளவற்றுள் -மிகப் பெரும்பான்மையானவை சமூகத்தில் மையப்படுத்தப்பட்டிருந்த -அதாவது ஆதிக்கம் பெற்றிருந்த- பிரிவினரின் பதிவுகளாக அமைந்த வையே என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாற்றுண்மையாகும். தெளிவாகக் கூறுவதானால்,

***சமூகத்தின் விளிம்புநிலைகளில் ஒதுக்கப்பட்டிருந்தவர்களின் பண்பாட்டுணர்வுகள் மற்றும் அவற்றில் உட்கூறுகளாக விளங்கி யிருக்கக் கூடிய அழகியல் அம்சங்கள் என்பவை எழுத்து நிலையில் பதிவுபெறுவதற்கான சூழல் பண்டைக்காலத்தில் இருக்கவில்லை. அல்லது, இன்னொரு வகையிற் கூறுவதானால், அவ்வாறு பதிவு பெற்றிருக்கக் கூடியவைகூட உரிய கவனத்துடன் பேணப்பட்டுப் பிற்காலத்தில் நம்மிடம் கையளிக்கப்படவில்லை.***

இதுவே நமது பண்பாட்டுவரலாற்றின் இன்றைய நிலைமையாகும்.

இந்த நிலைமையில்தான் ***தலித் அழகியல்*** என்ற கருத்தாக்கமானது ஏற்கெனவே உள்ள ***மரபான அழகியல்*** மீதான விமர்சனமாக -***கலக அழகிய***லாக-வும் ***மீட்டுருவாக்கம்*** செய்யப்படவேண்டிய ஒன்றாகவும் நமது தலைமுறையில் பேசப்பட்டு வருகிறது. இவ்வாறான ***மீட்டுருவாக்க***முயற்சியின் ஒருகூறாக தமிழிலக்கிய பாரம்பரியத்திலே தாழ்த்தப்பட்டோரின் குரல்களாகப் பதிவாகியுள்ளவற்றைத் தேடித் தொகுக்கும் முயற்சிகள் பலராலும் மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் தாழ்த்தப்பட்டோர் இயக்கநிலையில் செயற்படத் தொடங்கிய வரலாற்றுச் செய்திகளும் வெளிக்கொணரப்பட்டன. சாதி எதிர்ப்புக் குரல்களாக வெளிப்பட்ட இலக்கியப் பதிவுகள் என்றவகையில் தேடியறியப்பட்வற்றுள் முக்கியமான இருஆக்கங்கள் இங்கு நமது கவனத்துக்குரியன. அவற்றுளொன்று, 13-14ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்ததான **கபிலரகவல்** ஆகும். மற்றொன்று, 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததான **உத்திரநல்லூர் நங்கை பாடல்** ஆகும

புலைச்சியாகிய ஆதிக்கும் பிராமணராகிய பகவனுக்கும் மகனாகப் பிறந்தவர், கபிலர். இவர் பூணூல் தரிப்பதைப் பிராமணர்கள் எதிர்த்தனர். அவ்வேளை கபிலர் பாடியதாக அறியப்படுவதே **கபிலரகவல்.** பறைச்சியாகிய உத்திரநல்லூர் நங்கை என்பாள் பிராமண இளைஞன் ஒருவனைக் காதலித்தாள். பிராமண சமூகம் அதனை எதிர்த்தது. அத்துடன் பறையர் குடியிருப்பை எரிக்கவும் முற்பட்டது. அச் சூழலில் அப்பெண் எழுப்பும் வினாக்களாக உருவானதே **உத்திரநல்லூர் நங்கை பாடல்.** இவ்விருஆக்கங்களும் சாதிசார் ஏற்றத்தாழ் வுணர்வின் பகுத்தறிவுக்கொவ்வாத நிலையை பற்றிய விமர்சனங்களாக வெளிப்பட்ட வையாகும். . பொ. வேல்சாமி மற்றும் அ. மார்க்ஸ் ஆகியோர் எழுதிய, *"தமிழிலக்கிய பாரம்பரியத்தில் சாதி எதிர்ப்புக் குரல் ... சில குறிப்புகள்"* என்ற கட்டுரையிலே (இதழ் : **நிறப்பிரிகை இணைப்பு** -1994.பக் 59-61)இவ்விரு ஆக்கங்களையும் பற்றிய சில குறிப்புகளை முன்வைத்துள்ளனர். (மேற்சுட்டியவற்றுள் **உத்திர நல்லூர் நங்கை பாடல்** என்ற ஆக்கம் **பாய்ச்சலூர்ப் பதிகம்** என்ற பெயரிலும் அறியப்படுகின்றது. இவ்வாக்கம் பற்றிப் முனைவர் சு. வேங்கடராமன் அவர்களால் எழுதப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரையொன்று அவருடைய, **அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு** (2004) என்ற நூலில் இடம்பெற்றுளது).

தமிழகத்திலே தாழ்த்தப்பட்டோர் இயக்க நிலையில் எழுச்சிபெற்ற வரலாற்றின் தரவுகள் என்றவகையில் அவர்களுக்கு அறிவூட்டிய பலரின் வரலாறுகள் இக்காலப்பகுதியில் தேடித்தொகுக்கப்பட்டன. அவ்வகையில் பண்டிதர் க. அயோத்திதாஸர் ( 1845-1914), இரட்டைமலை சீனிவாசனார் (1860-1945)மற்றும் திரு . எம். சி. ராஜா, பூஞ்சோலை முத்துவீர நாவலர் முதலிய ஆளுமைகளின் பங்களிப்புகள் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் இக்காலப்பகுதியல் கவனத்திற்கு வந்தன. இத் தகவல்கள் தலித்தியரின் உணர்வெழுச்சிக்கு உரமூட்டுவனவாக அமைந்தன.

**தமிழகத்தின் 'தலித்' இலக்கியமும் ஈழத்தின் தாழ்த்தப்பட்டோர் இலக்கியமும் - ஒப்பியல் நோக்கிலான ஒரு குறிப்பு**

தமிழகத்தின் -குறிப்பாக இந்தியச் சூழலின்- ***தலித் இலக்கியம்*** பற்றிப் பேசும் போது அதற்கு முன்பிருந்தே ஏறத்தாழ ஈழத்தில் உருவான 'தாழ்த்தப்பட்டோர் இலக்கியம்' பற்றியதான நினைவு வருவதைத் தவிர்க்கமுடியாது. அத்தொடர்பில் ஒரு குறிப்பு:

ஈழத்தின் நவீன தமிழிலக்கியத்தில் தாழ்த்தப்பட்டோர் பற்றிய பார்வை கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தொடங்கிவிட்டது. இடைக்காடரின் **நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்** (1925), எச். நெல்லையாவின் **காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி** (1937)முதலான இவ்வகை ஆக்கங்கள் சாதியுணர்வு மற்றும் தாழ்த்தப்பட்டோர் நிலைகள் என்பன தொடர்பான கதையம்சங்கள் கொண்டனவாகும். மேலாதிக்கம் பெற்றிருந்த சமூகத்தினரின் பார்வையில் அமைந்த இவ்வாக்கங்கள சீர்திருத்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியவையாகும். இவ்வாறான மேலாதிக்க சாதியினரின் சீர்திருத்த உணர்வைக் கடந்து தாழ்த்தப்பட்டோரின் ஒன்றிணைந்த நிலையிலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வெழுச்சியைப் பேசும்வகையிலான படைப்புகள் ஈழச்சூழலில் 1950களிலிருந்து வெளிவரத் தொடங்கின. ***மார்க்ஸியம்***சார்ந்த வர்க்கப்பார்வை இவ்வாறான படைப்புகளுக்கான உணர்வூற்றாக அமைந்தது. இவ்வாறான வரவுகளில் செ.கணேசலிங்கனின் -**நீண்டபயணம்** (1962),**சடங்கு** (1966) **போர்க்கோலம்** (1968) ஆகியனவும் கே. டானியலின் **பஞ்சமர்** (1972), **பஞ்சமர்** 1ஆம் 2ஆம்பாகம்(1982) **கோவிந்தன்** (1982) **அடிமைகள்**(1984), **கானல்** (1986), **தண்ணீர்** (1988), **பஞ்சகோணங்கள்**(1993) ஆகியனவும் வரலாற்று முக்கியத்துவமுடையன வாகக்கணிக்கப் படுபவையாகும்.

இவற்றுள் டானியலின் ஆக்கங்களின் சிறப்பு அம்சமாகப் பேசப்படுவது அவற்றின் அநுபவச் செறிவு ஆகும். ஈழத்தின் யாழ்ப்பாண பிரதேசச் சூழல்சார்ந்த சமூக ஏற்றத்தாழ்வு நிலைகளின் வெவ்வேறு கிராம நிலைப்பட்ட அநுபவங்களின் பதிவுகளாக வெளிப்பட்ட இவ்வாக்கங்கள் 'சமூக-பண்பாட்டு வரலாற்றுப் பதிவுகளாகவும் திகழ்வனவாகும். மேற்படி டானியலின் ஆக்கங்களை ***பஞ்சமர் வரிசை நாவல்கள்*** எனச் சுட்டுவது மரபாகிவிட்டது. டானியலைத் தொடர்ந்து தெணியான் முதலிய சிலர் இவ்வகை ஆக்க முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர் என்பது வரலாறு. (இத்தொடர்பிலான மேலதிக விளக்கங்களுக்கு பார்க்க: இக்கட்டுரையாளரின் **ஈழத்துத் தமிழ்நாவலிலக்கியம்** - 2ஆம்பதி. 2009).

இவ்வாறாக டானியல் முதலியவர்களால் எழுதப்பட்ட ***பஞ்சமர் வரிசை*** ஆக்கங்களும் மேலே நாம் நோக்கிய தமிழ்நாட்டின் தலித்திய உணர்வெழுச்சியாக வெளிப்பட்ட இலக்கிய ஆக்கங்களும் சாதிநிலையில் ஒடுக்கப்பட்டவர்களின் அநுபவ வெளிப்பாடுகள் என்ற வகையிற் பொதுவகைமைக்குள் அமைவன. அம்மக்களின் சமூக அசைவியக்கங்களைப் பேசுபவை என்றவகையிலும் இவற்றுள் பொதுமை காணலாம். ஆயினும் 'நோக்கு நிலை'யில் மேற்படி இருதள ஆக்கங்களும் வேறுபட்டவை என்பதை இங்கு நாம் கவனத்திற்கொள்ளவேணடும்.

ஈழத்தின் ***பஞ்சமர் இலக்கிய***மானது தமிழகத்தின் ***தலித் இலக்கியம்*** போன்று ***கலக அழகியல்*** என்ற உணர்வுத் தளத்தில் முளைவிட்டதன்று என்பதே இங்கு நாம் கவனத்துட்கொள்ளவேண்டிய முக்கிய 'நோக்குநிலை வேறுபாடு' ஆகும்.

***ஈழத்தின் பஞ்சமர் இலக்கிய முயற்சியானது, மேலாதிக்க சாதியினரின் பண்பாட்டுக் கூறுகளுக் கெதிராக மாற்றுக்கலாசாரம் தேடுவதான முயற்சி அன்று. மேலாதிக்க சாதியினரின் அநுதாபம், ஆதரவு என்பவற்றை வென்றெடுத்து அவர்களின் நிலைக்குத் தாழ்த்தப்பட்ட சாதியினர தம்மை முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என்பதான முனைப்புடன் வெளிப்பட்டது. அது.***

தலித் இலக்கியம் அத்தகையதன்று.

***அது, மேலாதிக்கசாதியினரின் பண்பாட்டு விழுமியங்களை முற்று முழுதாக நிராகரிப்பதான கலகக் குரலாக வெளிப்பட்டதாகும்.***

ஈழத்தின் ***பஞ்சமர் இலக்கிய*** முயற்சிகளைத் தமிழக ***தலித் இலக்கிய*** முயற்சிகளுடன் தொடர்புறுத்திப் பேசவும் ஆராயவும் முற்படுவோர் அவற்றிடையிலான இந்த அடிப்படையான வேறுபாட்டம்சத்தை மனங்கொள்ளவேண்டியது அவசியம். *(தொடரும்)*

# தண்டிக்கப்பட வேண்டியவர்கள்

**-நா. ஜெயபாலன், பிபிலை**

அந்நியப்படுத்தப்பட்ட
அன்னியோன்னியம்
அறுத்துவிடப்பட்ட மனித நேயம்.
மெல்ல மெல்ல மெருகேறும்
நிலையில்,
'தலைமைப் புருசர்கள்',
மீண்டும் தமிழ்த்தாய்க்கு
பரிசோதனை
நடத்தப்பார்க்கிறார்களே!
கடலில் காற்றாடி
விட்டு,
காற்றில் கப்பலை
நகர்த்தும், இவர்களின்
வேஷங்கள் வெளிச்சம்
வீதிக்கு வந்தபின்னும்
வீசையில் மண் ஒட்டவில்லையென்று
வீறாப்புப் பேசுகிறார்களே!
தனிமனித பல்லாக்கு
ஓரம் கட்டவேண்டிய
நிலையில்,
திக்விஜயம்
திருப்தியென்று,
மக்குத்தனமாக
'மார்'தட்டிக்கொள்வது
வெட்கப்படவேண்டிய
விஷயமன்றோ?

சிலரை சிலநாட்கள்
ஏமாற்றி,
பலரை பலநாட்கள்
வஞ்சித்து
கிஞ்சித்தேனும்
கேள்விஞானம் இல்லாது
சொன்னதை மறந்து
சொல்லாதவைகளை
சொல்லி,
சுயபுகழுக்காக -ஒரு
சுதந்திர இனத்தையே
காட்டிக்கொடுக்கும் இவர்கள்
காலத்தால் மட்டுமல்ல;
கன்னித்தமிழாலும்
தண்டிக்கப்படவேண்டியவர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.பொ. பக்கம்



"நீ ஒரு விடுபேயன்" என்று என் நண்பன் என்னைப் பார்த்து சொல்லி விட்டுப்போனது, எனக்குள் வித்தியாசமான வேட்கையை ஏற்படுத்திற்று. அவன் சொன்னதைப் பொருட்படுத்தாது என்மனம் வேறு பரிசீலனைக்குள் புகுந்தது. கேட்கும், வாசிக்கும், சிந்திக்கும் ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் புகுந்துவரும் வேட்கை ஆரம்பித்தது. 'ஆரம்பித்தது' என்று என் உள்மனம் சொல்லிக் கொண்டதுமே என் பழைய பதிவுகள் கிளறப்பட்டு "அன்னகாலையின் ஆரம்பம் யாவையும்" என்ற கம்பனின் வரிகள் மிதந்து வந்தன. 'ஆரம்பம்' என்ற சொல்லின் மூலம் சமஸ்கிருதம், தமிழில் தொடக்கம் எனலாம். அல்லது யாழ்ப்பாணப் பாணியில் 'துவக்கம்' எனலாமா?

"நீ ஒரு விடுபேயன்" என்றான், என் நண்பன். இப்படி நான் அலட்டத் தொடங்கியதைச் சகிக்க முடியாது. 'விடுபேயன்' என்றால் என்ன அர்த்தம்? நான் துழாவினேன். 'விடுபேயன்' என்றால் 'படுமுட்டாள்' என்று சொல்லலாம். அப்படியென்றால் அவன் ஒரு 'பேய்க்காய்' என்கிறார்களே, அதன் அர்த்தம்என்ன?எல்லாம் தெரிந்த மகா புத்திசாலி என்பதே அதன் அர்த்தம். அப்படியா? பேய்க்கு புத்தியுமுண்டு பேய்த்தனமும் உண்டு. சரியா? இதில் வரும் 'காய்' தமிழில் வரும் பழம் பழுப்பதற்கு முந்திய காய் அல்ல.ஆங்கிலத்தில் வரும் 'Guy' என்பதன் திரிபே. இன்னும் ஒருவன் 'என்னைப் பேய்க்காட்டாதே' என்று சொன்னால் 'என்னை ஏமாற்றாதே' என்றுதானே சொல்கிறான்? 'உனக்குப் பேய் உங்கப்பனுக்கும் பேய்' என்கின்ற வார்த்தையாடலும் இதற்குத்தானே வலுவூட்டுகிறது? 'அவர்கள் பேய் மாதிரி வந்து தாக்கினார்கள்' என்று சொன்னால் அவர்கள் எல்லாத் தடைகளையும் உடைத்துக் கொண்டு வந்து வீரமாகத் தாக்கினார்கள்' என்பதுதானே அர்த்தம்? பேய்க்கு 'வீரம்' என்ற கற்பிதம் வேறையா? 'அவனுக்கு பேய் பிடிச்சிற்று' என்றால் என்ன அர்த்தம்? 'அவன் விசர்த்தனமாக நடந்து கொள்கிறான்' என்பதுதானே? பேய்க்கு விசர் வருமா?

இத்தனைக்கும் பேயைக் கண்டவர்கள் யார்?

கண்டவர்கள் இல்லை என்பேன். ஒருவர் கண்டிருக்கிறார் என்று வைத்துக் கொண்டாலும் காட்ட முடியாது.

காணாத ஒன்றை வைத்து காணும் பொருட்களிலெல்லாம் எப்படி பேயை ஏவுகிறார்கள்?

காணொளியில் நாம் காணாதவற்றையெல்லாம் காட்டுகிறார்கள். அது எப்படி? 'சுத்தப் பேய்க்காட்டல்' என்கிறது அரசாங்கம். ஆனால் காணுவோர் 'இப்படியா நடந்தது!' என்று அதிர்ந்து போகின்றனரே ! அவ்வாறெனில் மறைக்கப்பட்டவற்றை எந்தப் பேய் காவிக் கொண்டுபோய் வெளியில் கொடுத்தது? உள்ளூர்ப் பேய்களை எப்படி வெளியூர்க்காரன் வாலாயப்படுத்தினான்?

வாலாயப்படுத்துதல்! இது லயப்படுத்துதல் என்ற சமஸ் கிருதச் சொல்லிருந்து வந்ததோ என்னவோ! ஒவ்வொன்றையும் அதன் பெயர் கொண்டழைத்து, அதற்குரிய படையல் வைத்து மந்திரம் சொல்லி வாலாயப்படுத்தலாம் என்கிறார்கள். பேய்களை மட்டுமல்ல கடவுளையும் வாலாயப்படுத்தலாமாம். காளி வாலாயக்காரன், தேவி வாலாயக்காரன், பைரவ வாலாயக்காரன் என்று சொல்வது இதனால்தானா? ஆனால் இது முன்னதிலிருந்து வேறு வகையானதாம்; மன ஆழங்களைக் கடந்து போவதாம்.

கடவுள் வாலாயக்காரரை அக்காலத்தில் பிராமணர்கள் என்றார்கள். "பிராமணன்" என்றால் என்ன கருத்து? பிரம்மத்தை உணர்ந்தவன். இவன் கல்லிலும் கடவுளைத் தரிசிக்கச் செய்யும் வல்லமையுடையவன். அதனால் இவன் செய்யும் அர்ச்சனைகளையும், ஆராதனைகளையும் கடவுள் ஏற்றுக் கொள்கிறார் என்று நம்பிக்கை. அதனால் தான் போலும் எந்தப் பாவியும் கொடுக்கும் அர்ச்சனைப் பொருட்கள் அவர் மூலம் கடவுளுக்கு அர்ச்சிக்கப்படும் போது அதை கடவுள் ஏற்றுக்கொண்டு பாவியின் பாவங்களை குறைக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

அதாவது ஜனாதிபதியை 'வாலாயப் படுத்தியுள்ள' ஒரு பிரமுகரைப் பிடித்து, தன் தண்டனையை குறைக்கச் சிபார்சு செய்யுமாறு ஒருவன் கேட்டு தன் தண்டனையை குறைத்துக் கொள்வது போன்ற ஒன்றே இது என இன்றைய பாஷையில் சொல்லலாமா?

ஒலிதான் மொழியின் முன்னோடி

'கீகீ' என்பதால் கிளி என்கிறோமா?

'காகா' என்பதனால் காகம் என்கிறோமா?

'கூகூ' என்பதனால் குயில் என்கிறோமா?

அப்படியெனில் 'பாப்பா பாப்பா' என நாம் கூப்பிடும்போது ஓடிவரும் கோழிக்கு நாம் ஏன் அந்தப் பெயர் வைக்கவில்லை. மாறாக குழைந்தை களைத்தான் 'பாப்பா' என்கிறோம். அது BABE என்ற ஆங்கிலச் சொல்லியிருந்து பின்னாடி புழகத்திற்கு வந்த ஒன்றா? நாம் நினைப்பது போல் இருப்பதில்லை நாம ரூபங்கள். நாம்பேசும் மொழி மற்றும் நமது சிந்தனை பற்றியெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால் எம்மை விடக் கீழானவையென நாம் எண்ணும் பறவைகள், விலங்குகள் உயிரினங்கள் என்பவை எழுப்பும் ஒலிகள் நாம் நம் மொழியால் பரிமாறிக் கொள்ளும் விஷயங்களை விட அர்த்தபுஷ்டியானவை மட்டுமல்ல. அற்புதமானவை என்று அல்டஸ் ஹக்ஸ்லி தனது நாவலில் குறிப்பிடுபவற்றை படிக்கும் எவரும் வியப்பினால் அள்ளுப்படுவர். (பக்கம் 48ம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகச் செய்திகள்

**கே.ஜி.மகாதேவா**

## கலைஞரும் 'காவடியை' கை விடவில்லை!

ஈழம் என்று சொன்னாலே, இரண்டு நூடுகளிலும் கொதிநிலை நூறு பாகையையும் தாண்டிவிடும் கோலத்தில்; "ஈழம் என்றால் ஈழநாடு, ஈழநாடு என்றால் இலங்கை என்று இந்திய மத்திய அரசின் காதுகளுக்கு கலைஞர் சங்கு ஊதியும் காது கேளாத குறையில், கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம், எந்தக் கோரிக்கைக்கும் அங்கீகாரம் கிடையாது என்று காங்கிரஸ் தலைமை தி.மு.க.வை மிரட்டி ஒதுக்கிறது. ஆனாலும் பயப்பிராந்தியில், ஒட்டி உறவாடி, மத்திய அரசுக்கு தி.மு.க. தொடர்ந்து காவடி தூக்குகிறது!

இலங்கைத் தமிழர் மீட்சிக்காக தனித்தமிழ் ஈழம் உருவாக விழுப்புரத்தில் ரொசோ மாநாடு என்று கடந்த ஜூன் மாதம் அறிவித்த கலைஞர் கருணாநிதி; தமிழீழம் வேண்டும், அதனைக் கண்ட பின்னரே என் உயிர் பிரியும்: அதற்காக உயிரை விடவும் தயார் என்று சூளுரைத்து, ரெசோ மாநாடு ஆகஸ்ட் 12ல் நடைபெறும், தமிழீழம் தீர்மானம் கொண்டு வரப்படும்" என்று கலைஞர் அறிவித்ததும், அமைச்சர் சிதம்பரம் மூலமாக மத்திய அரசு நேரடி கிடுக்குப்பிடி போட்டது. ஈழம் வார்த்தை நீக்கப்பட்டதுடன், தமிழீழம் பெயரையும் மாற்றி, டில்லி அம்மாவின் மனதைக் குளிரச் செய்தார் கலைஞர். 'கரு'கலைக்கப்பட்டதால் அறிமுகமான - அழைக்கப்பட்ட முகங்களை மாநாட்டில் காண முடியவில்லை.

## 'ஈழம்' அர்த்தம் தீவிரவாதமா? குழம்பும் நிலையில் காங். தலைவர்!

மத்திய அரசின் குட்டுகளினால் கட்டுக்குள் அடங்கிய தி.மு.க., "தமிழில் எனக்குப் பிடிக்காத வார்த்தை தமிழீழம்" என்று அறிவித்து; ஈழம், தமிழீழம் வார்த்தைகள் 'மறந்தும் மூச்சு விடாமல், மாநாட்டுத் தீர்மான விளக்கக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று கட்டளையிட்டார் கலைஞர். காங்கிரஸ் கையில் ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு என்றால், மத்திய அரசை மிரட்ட கலைஞரின் 'முகமூடி' ரெசோ!

போதாக்குறைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்; "ஈழம் எனும் வார்த்தையை பயன்படுத்தும்போது தீவிரவாதம் தலைதூக்க வாய்ப்பிருக்கலாம் என்று உள்துறை அமைச்சகம் கருதுகிறது..." என்று பயமுறுத்தி அதற்கு தி.மு.க.வும் கட்டுப்பட்டிருப்பது... என்னே ஈழப்பற்று!

## "ரெசோ ஒரு நாடகம்; வேஷமும் கலைந்து விட்டது!"

உலகத் தமிழர் பேரவை தலைவர் பழ. நெடுமாறன், கலைஞர் நடத்திய ரெசோ மாநாடு குறித்து கடுமையாக விமர்சித்து; "கருணாநிதி நிறைவேற்றிய தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தவறினால் என்ன செய்வோம் என்பது குறித்து கருணாநிதியால் சொல்ல முடியவில்லை. இதுபற்றி கேள்வி கேட்டதற்கும் பதில் இல்லை. மத்திய அரசு நிச்சயம் கண்டு கொள்ளாது. தி.மு.க. அமைச்சர்கள் பதவி விலகுவார்களா? ரெசோ நாடகம் முடிந்து விட்டது. வேஷமும் கலைந்து விட்டது. ஒரு அரசியல் கட்சி நடத்திய முச்சந்தி மாநாடுதான் ரெசோ..." என்று கருத்து வெளியிட, கலைஞர் கருணாநிதி தனது பதில் அறிக்கையில், "ஈழப் போரைத் தடுக்க கப்பல் படையை நெடுமாறன் அனுப்பியது போலவும், நான் அதை தடுத்து விட்டதைப் போலவும் சொல்கிறார். ரொசோ மாநாடு பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கிறது" என்று கருத்து வெளியிட, தமிழுணர்வாளர்கள் மத்தியில் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## "ஈழத்தமிழர் பெயரில் அரசியல் நடத்தி தொலைந்துபோன முகவரி தேடுகிறார்"

"முள்ளி வாய்க்கால் போரில் சிக்குண்ட ஈழத் தமிழ் மக்களுக்கு ரத்தம், மருந்துகள் சேகரித்து பழ. நெடுமாறன் அனுப்பியபோது கலைஞர் ஆட்சியில்தானே தடை விதிக்கப்பட்டது. இவர் ஆட்சியில் உளவுப் பிரிவுத் தலைவராக இருந்தவர் ஜாபர் சேட். காயம்பட்ட ஈழத் தமிழருக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து போகவிருந்த ரத்த பாக்கெட்டுகளை காலால் எத்தி உடைத்தவர் தானே இவர்! ஈழத் தமிழர்களுக்குச் செல்லும் ரத்தத்தைக் கூட தடுத்து நிறுத்திய தமிழ் ரத்தமல்லவா கலைஞரில் ஓடுகிறது.... ரெசோ மாநாட்டுக்கு மத்திய அரசு கட்டுப்பாடுகள் விதித்தபோது; நான் இங்கு அரசியல் பண்ணவேண்டாமா... என்று பிரதமரிடம் குரல் எழுப்பியவர்தானே கருணாநிதி. ஈழத்தமிழர் பெயரில் அரசியல் நடத்தி, உலகத்தமிழர்களிடம் தொலைத்து விட்ட தனது முகவரியை கலைஞர் இப்போது தேட வருகிறார்.... தமிழர்கள் மறந்து விடுவார்கள் என்று நினைப்பா..." என்றுவெளிப்படையாக எழுத்திலும், பேச்சிலும் தமிழ் உணர்வாளர்கள் கணைகளைத் தொடுக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊடகங்களுக்கு அல்வா ! ஆதீனம் அஞ்சுவது ஏன்?**

நித்தியானந்தா - மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் சமாச்சாரத்தில் பேனாவை நனைக்காவிட்டால், செய்திகள் ஜீரணிக்காத ஒரு மயக்கம் ஊடகங்களுக்கு. இங்கு நீடிக்கும் நிலையில்; கடந்த மாதம் அடுத்தடுத்து வெளிவந்த ஆதீனத்தின் நேர்காணல்களை, அருணகிரிநாதர் செய்தியாளர்களுக்கு நன்றாகவே அல்வா கொடுப்பதுபோல் இருக்கிறது.

நித்தியாரின் சகவாசத்தால் அத்தனை மடாதிபதிகளையும் பகைத்துக் கொண்ட மதுரை ஆதீனம், கடந்த மாதம் முக்கிய மடாதிபதிகளைச் சந்தித்தும் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் தமது வருத்தத்தை தெரிவித்து உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டதும் ஆதீனத்தாரிடம் மனமாற்றம் ஏற்பட்டு விட்டதாக ஊடகங்கள் எழுதின. கைலாய யாத்திரையை முடித்துக் கொண்டு கடந்த மாதம் 17ல் மதுரை திரும்பி, ஆதீன மடத்துக்குள் நுழைந்தபோது அருணகிரிநாதரிடமிருந்து வழக்கமான வரவேற்பு இல்லை. மாறாக கசமுசா. வலியச் சென்று ஆதீனத்திடம் ஆசி பெற்றுக் கொண்ட நித்தியார் பின்னர், அப்படி இப்படி என்று பேசி, வாக்குவாதப்பட்டு ஒரு கட்டத்தில் நித்தியார்; "உங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். தேவைப்பட்டால் அந்த ரகசியங்களை வெளியில் சொல்லி விடுவேன்..." என்று மிரட்ட, ஆதீனமும் கடும் கோபம் கொண்டு "முடிந்ததைப் பார்" என்று சுட்டெரிக்க, முகத்தில் கலவர ரேகைகளைப் படரவிட்டு அன்றிரவு ஏழரை மணியளவில் மடத்திலிருந்து வெளியே கிளம்பினார் நித்தியானந்தா. இச்சம்பவத்தைத் தொடர்ந்து, ஊடகச் செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டு, மதுரை மடத்திலிருந்து நித்தியார் வெளியேற்றம் என்று எழுதப்பட்டன. இந்தச் செய்தியின்மை காய்வதற்குள் இறக்கை கட்டி பறந்தது புதிய தகவல். கொடைக்கானல் சென்று நித்தி பூஜையில் திடீரென கலந்து கொண்ட அருணகிரிநாதர்; "நானும் நித்தியானந்தாவும் பணங்காட்டு நரிகள். சலசலப்புக்கு அஞ்சமாட்டோம். எங்களுக்குள் சண்டை என்று ஊடகங்கள் கூறுகிறது. நாங்கள் இருவரும் ஒன்றாகவே இருக்கிறோம். நித்தியானந்தா ஒரு தமிழர். எவர் சொன்னாலும் இத்தமிழனை விட்டுக் கொடுக்கமாட்டேன். இவர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்துகிறார்கள். பாலியல் வழக்குகள் இல்லாத பீடாதிபதிகள் யார் இருக்கிறார்கள்? ஐந்து மாதங்களாக பத்திரிக்கைகளுக்கு தீனி போட்டுள்ளோம். ஆதீனத்தை உலகம் முழுவதும் பரப்பிய ஊடகங்களுக்கு மிகவும் நன்றி. ரஞ்சிதா, சிறந்த முறையில் கவனித்துக் கொள்வார். ரஞ்சிதா நித்யாவுடன் சென்றிருந்தால் நான் அனுமதி தந்திருப்பேன்..." என்று நெருப்பை அள்ளிக் கொட்டியிருக்கிறார் ஆதீனத்தை நம்பிய சிவனடியார்களுக்கு!

நித்யார் தான் திட்டமிட்டு, காய்களை நகர்த்துகிறார் என்றால்; ஆதீனம் அருணகிரிநாதர் ஏன் ஊடகங்களுக்கு முன்னுக்குப்பின் நாடகம் ஆடுகிறார்? நித்தியானந்தா மிரட்டும் அந்த 'சிடி'க்கு ஆதீனம் பயப்படுகிறாரா? (ஆதீனம்; நித்தியாரின் பிடதி ஆசிரமம் சென்றிருந்த போது மயக்க தீர்த்தம் கொடுத்து ஒரு அறைக்குள் தள்ளப்பட்டதாகவும், அறையில் நான்கு வெளிநாட்டுப் பெண்கள் நிர்வாணக் கோலத்தில் இருந்ததாகவும் அருணகிரிநாதர் புலம்பியிருந்தார்). அல்லது, பகையை மறந்து, சேர்ந்திருந்து குழிபறிக்க திட்டமிட்டிருக்கிறாரா? ஓம் நமச்சிவாய!

**இப்படியும் நடக்கிறது!**

♦ டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி, மதுக்கடைகளுக்கு பூட்டுப் போடும் போராட்டத்தை நடத்திய போது, ஒரு கடைக்குக் கூட பூட்டு போட முடியவில்லை. பொலிஸாரின் கெடுபிடி அப்படி. ஆனால், திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் 12ம் வகுப்பு படிக்கும் மாணவி பிரியங்கா, பள்ளிச் சீருடையில் சென்று, பொலிஸாரின் கண்களில் சிக்காமல் அரசு மதுக்கடை ஒன்றுக்கு, பென்னாம்பெரிய பூட்டு போட்டுவிட்டு நகர்ந்துவிட்டாள்!

♦ மகாத்மா காந்தியை கொலை செய்த கோட்சே பற்றி பிரபல இயக்குனர் ஷாஜி கைலாஷ் திரைப்படம் தயாரிக்கிறார். கொலை செய்ய முன்னர் கோட்சேயின், மனநிலை குறித்து கதை பேசுகிறது. அதுசரி, கோட்சே கையில் முகமது இஸ்மாயில் என்று பச்சை குத்தப்பட்டிருந்ததா? காந்தியை சுட்டுக் கொல்வதுடன் படம் முடிகிறது.

♦ தமிழ் சினமாவின் முதல் சூப்பர் ஸ்டார் எம்.கே.தியாகராஜ பாதவதர். 1944ல் அவர் நடித்த "ஹரிதாஸ்", சென்னை பிராட்வே தியேட்டரில் மூன்று தீபாவளிகளைக் கண்டது. இந்த சாதனையை எந்த ஒரு இந்தியப்படமும் முறியடிக்கவில்லை! பல லட்சம் ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட அவரது எட்டு அடி உயர வெண்கலச் சிலை இன்னும் திறப்பு விழா காணவில்லை.

♦ தி.மு.க.வின் பொதுக் கூட்டத்தில் வரும் கட்சியின் சிறப்பாளர்களுக்கு பேச்சுச் சம்பளம் கொடுக்கப்படுவது உண்டு. பேராசியரிர் க. அன்பழகன் கூட்டத்துக்கு வந்தால் ஐம்பதினாயிரமும், துரை முருகனுக்கு ரூபா 25,000 கொடுக்கப்படுவதுண்டு. கடந்த வாரம் மதுரையில் நடைபெற்ற ரெசோ தீர்மான விளக்கக் கூட்டத்துக்கு குஷ்பு வந்தார், விளாசினார். விமான டிக்கட்டுடன் ஐம்பதினாயிரம் ரூபாவும் கொடுக்கப்பட்டதாம்.

---

*(மு.பொ. 46ம் பக்கத் தொடர்ச்சி...)*

வெற்று ஒலிபோல் தெரியும் பறவைகள், மிருகங்கள் எழுப்பும் ஒலிகள் சிலவேளை கானகத்தின் பொதுமொழியாய், வரப்போகும் ஆபத்தை அறைகூவுவதாய் இருப்பதும் மிக முக்கியமானது. இதனால் கானகத்தில் வாழும் உயிரினங்கள் உஷார் படுத்தப்படுகின்றன.

இந்தப் பிரபஞ்சத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் எண்ணிறந்த கோடி கோள நிரைகள், இயற்கை அதிர்வுகள், கோடானு கோடி உயிரினங்கள் மனிதர்கள் சேர்ந்து எழுப்பும் ஓலங்கள் எல்லாம் எங்கே போய் உறைகின்றன? ஒன்றுக்குள் ஒன்று புகுந்து, திரிந்து, பிணைந்து, சோளகம் வீச எழும் 'ஹோம்' என்ற ஒற்றை ஓசையாய் சப்திக்க அனைத்தையும் உள்வாங்கி **கும்பகமாய்** விரிந்துகொண்டிருக்கும் இப்பேரண்டம் வெளித்தள்ளும். எண்ணிறந்த Probabilities ன் ஆத்மார்த்த நுட்பங்களை அறிய Quantom theory தான் கை கொடுக்கும். இவற்றை மொழி காவமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தியாகராஜன் சர்மா**






நூல்: உடையக்காத்திருத்தல்
ஆசிரியா: ஜமீல்
பதிப்பு: 2010 மார்கழி
வெளியீடு: புதுப்புனைவு இலக்கிய வட்டம், மருதமுனை.
விலை: ரூபா 200/=
isbn:978-955-50248-1-5
பக்கங்கள்: 76
நூல்அளவு:14.5X20.5 செ.மீ.

அப்துல் றகுமான் அப்துல் ஜமீல் என்ற இயற்பெயர் கொண்ட ஜமீல் மருதமுனையில் பிறந்தவர். 1993ம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய விருதைப் பெற்றவர். "தனித்தலையும் பறவையின் துயர்கவியும் பாடல்கள் (2007) யாழ். இலக்கியப் பேரவையின் கவிஞர் ஐயாத்துரை விருதையும் தடாகம் இலக்கிய வட்டத்தின் 'கலைத்தீபம்' இலக்கிய விருதையும் பெற்றது.

உடையக் காத்திருத்தல் என்ற இக்கவிதைத் தொகுதியில் 65 கவிதைகள் அடங்கியுள்ளன. அத்தனையும் எளிய நடையில் எளிய சொற்களால் ஆக்கம் பெற்றவை. ஒற்றை வாசிப்பில் விளங்கக் கூடியவை. படிமம், குறியீடு என இவர் வாசகனைக் குழப்பவில்லை. இவைதான் இவரது கவிதைகளின் பலம். சித்திரவதைக் காலம், சுயம் ஒப்புதல் ஆகிய தலைப்பிலான கவிதைகள் பெண்ணியம் பேசுகின்றன. புரிதல், பாலம், குரூரம், எது முதலில், வடிகால், காடு, புதைகுழிகளின் காடு, இரவு அடையாளம், ஆக்கிரமிப்பு, பயணம் போன்ற கவிதைகள் போர்க்காலச் சிதைவுகளையும் கொடுமைகளையும் ஆழமாகப் பதிவு செய்கின்றன. ஏனைய கவிதைகள் பல்துறை சார்ந்தவை.

"தன்னம்பிக்கையை விதைக்கவும், அறத்தை நிலைநாட்டவும் சமூகநீதியைப் பேணவும், குழந்தைகளின் உணர்வுகளை மதிக்கவும் இயற்கையை மதிக்கவும் அவரது கவிதைகள் முனைகின்றன. தன் பிரதேச வழக்குச் சொற்களை கவிதைகளில் பரவவிட்டிருப்பது அவரின் மற்றுமொரு தனித்தன்மை.." என இவரது கவிதைகள் பற்றிக் குறிப்பிடுகிறார். "அலறி" தனது பின்குறிப்பில். இவரது குரூரம் என்ற கவிதை பின்வருமாறு விரிகிறது.

*"நீ சுடர் வனத்தில் பிறக்கவுமில்லை*
*இலை குழைகளை அணியவுமில்லை*
*குகைகளில் வசிக்கவுமில்லை*

*இன்னும் ஓநாய்க் கூட்டங்களோடு*
*பதுங்கித் திரிந்துமில்லை*
*மான்களின் மேய்ச்சல் நிலத்திற்கு*
*வேட்டைக்குச் சென்றதுமில்லை*

*இருந்தும் ஒரே இரவில்*
*நூற்றிமூன்றுபேரை*
*கொன்று குவித்த குரூரத்தை*
*எங்கிருந்து கற்றுக் கொண்டாய்*

*'ஆக்கிரமிப்பு' என்ற கவிதை*
*பின்வருமாறு அமைகிறது.*
*உறங்கி விழித்தபோது*
*என வீட்டின்*
*நடு விறாந்தையில்*
*சா வ கா ச மா க*
*உட்கார்ந்திருந்தார் புத்தர்*
*வெளியே வந்து பார்த்த*
*போது*
*நான் வாழ்ந்ததற்கான*
*அடையாளங்கள் எதுவுமே இருக்கவில்லை*
*புதிதாக ஒரு அரசமரம் மட்டும் நின்றது.*

ஜமீலிடமிருந்து இலக்கிய உலகம் நிறையவே எதிர்பார்க்கிறது.

◆◆◆◆◆




நூல்: அலைக்குமிழ் (நாவல்)
ஆசிரியர்: அகளங்கன்
பதிப்பு: 2011 மார்கழி
வெளியீடு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
விலை: ரூபா 300/=
பக்கங்கள்: 178
நூல் அளவு:14X21செ.மீ.

நா. தர்மராஜா என்ற இயற்பெயர் கொண்ட அகளங்கள், சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், கட்டுரை, நாடகம், ஆய்வு, கவிதை ஆகிய துறைகளில் எழுதி வருபவர். இதுவரை 39 நூல்களை வெளியிட்டுள்ளார். பல பரிசுகள் பெற்றுள்ளார். இலக்கியப் பணிக்காகக் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவர் கணித புள்ளி விபரவியல் விஞ்ஞானபீட மாணவனாக இருந்த காலத்தில் 1977ல் இந்த நாவலை எழுதியுள்ளார். அப்போது இவருக்கு வயது 23. இந்நாவல் வீரகேசரி வார மலரில் 2010 காலப்பகுதியில் தொடராக வெளிவந்தது. 34 வருடங்களின் பின்னர் இப்போது நூலுருப்பெற்றுள்ளது. இந்நாவல் எழுதப்பட்ட காலகட்ட இலக்கியச் செல்நெறியை பிரதிபலிப்பதாக இந்நாவல் அமைந்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தைக் கதைக்களமாகக் கொண்ட இந்த நாவல், ஒரு நிறைவேறாத காதற் கதையாக அமைந்துள்ளது. மோகன் இந்த நாவலின் நாயகன். இவன் சந்திரா என்ற பெண்ணைக் காதலிக்கிறான். நாவலின் ஆரம்பம் முதல் நடுப்பகுதிவரை மிகவும் சுவையுடன் நாவல் நகர்ந்து செல்கிறது. காதல் வளர்ந்து வரும் பாங்கினை முன்பகுதி விபரிக்கிறது. ஆனால் சந்திரா தனது தங்கை என்று மோகன் அறிந்தபோது மோகன் இந்தக் காதலைத் துறக்கிறான். சந்திரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு மோகனின் தங்கை ஆனாள் என்பதை நாவலின் பிற்பாதி பலவகைத் திருப்பங்களுடன் விபரிக்கிறது. நாவல் துன்பியலில் முடிவுறுகிறது.

அகளங்கன் பழந்தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். அதனால் பழந்தமிழ் இலக்கியச் சுவையையும் ஆங்காங்கே கலந்து இந்த நாவலைப் படைத்துள்ளார். இது பற்றி இந்த நாவலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் தனது முன்னுரையில் விதந்து குறிப்பிட்டுள்ளார்.

"இந்த நாவலை வெளியிடுவதில் அகளங்கன் எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை. விரும்பவும் இல்லை. நூலுருவாக்கம் செய்ய அடியோடு மறுத்துவிட்டார்" எனத் தனது பதிப்புரையில் குறிப்பிடுகிறார் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளர், டாக்டர் ஓ.கே.குணநாதன். அவர்களின் பணியும் போற்றுதற்கு உரியது. இது எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 63ஆவது வெளியீடு எனவும் அறிய முடிகிறது.

இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஓர் இளைஞர் நாவலாகவும் இளைஞர்களுக்குப் படிப்பினைதரும் நாவலாகவும் இந்த நாவலைப் படைத்துள்ளேன் எனக் குறிப்பிடுகிறார் அகளங்கன். அவரது பணி தொடர வாழ்த்துக்கள்.

◆◆◆◆◆




நூல்: ஒரு யுகத்தின் சோகம்
ஆசிரியர்: மன்னூரான்
பதிப்பு: 2011 மாசி
வெளியீடு: மன்னார் எழுத்தாளர் ஒன்றியம்
பக்கங்கள்: 82
விலை: ரூபா 180/=

முஹமட் ஷிஹார் என்னும் இயற்பெயர் கொண்ட மன்னூரானின் கன்னிப்படைப்பு இந்த நூல். இவர் ஓர் ஆங்கில ஆசிரியர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட மாணவ சாஹித்திய விழா படைப்பாற்றல் போட்டிகளில் 1998, 1999, 2000,2001 ஆகிய வருடங்களில் தொடர்ச்சியாகப் பங்குகொண்டு கவிதையாக்கம், பாடல் இயற்றுதல், சிறுகதை ஆக்கம் ஆகியவற்றில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டவர்.

இவரது கவிதைகள் புதுக்கவிதைப் பாணியில் அமைந்தபோதும் சில கவிதைகளில் மரபுக் கவிதைக்குரிய பாங்கினையும் அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான கவிதைகள் போரினால் ஏற்பட்ட அவலங்கள் பற்றிப் பேசுகின்றன. இலங்கையர் மத்தியில் இனமுரண்பாடு, மதமுரண்பாடு மேலோங்கிய நிலையை எடுத்தியம்பி, யுத்தம் முடியவேண்டும் என்ற வேட்கையை வெளிப்படுத்துகிறார். மனிதநேயம் மலரவேண்டும் என வேட்கை கொள்கிறார். சில கவிதைகள் காதற் கவிதைகளாக மிளிர்கின்றன. ஊடக சுதந்திரம் பற்றி கவிதையில் இவர் இவ்வாறு பேசுகிறார்.

**ஊடக (சு) தந்திரம்**

*ஏதோ எழுத நினைத்தேன்*
*எழுதுகோலின் மை*
*உறைந்து போனது*
*ஏதோ சொல்ல எத்தனித்தேன்*
*உதடுகளிரண்டும்*
*ஒட்டிக் கொண்டன*
*வழியேதும் தோன்றாமல்*
*விழி மூடியபடி*
*மௌனமானேன்*

இவரது இன்னுமொரு கவிதையில்,

*அன்ரனியும் அகமதுவும்*
*அப்புகாமி அழகேசும்*
*இன்றுவரை ஓரன்னை*
*ஈன்றெடுத்த பிள்ளைகளாய்*
*ஒன்றி உறவாடி*
*ஒருமித்த காலம்போய்*
*கன்றும் சிறுத்தையும் போல்*
*கலகம் புரிவதென்ன!*

இந்தக் கவிதைத் தொகுதிக்குப் பொருத்தமான ஒரு முன்னுரையை மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் வழங்கியுள்ளார். மேமன்கவியும் ஒரு முன்னீடு வழங்கி வாழ்த்தியுள்ளார். அதேபோன்று பாணந்துறை என் அகமத் யாசீன் அவர்களும் வாழ்த்தியுள்ளார். இவர்கள் மூவரும் இந்த இளம் கவிஞருக்கு ஒரு சிறந்த எதிர்காலம் உண்டு என உறுதிப்படுத்தியுள்ளனர்.

◆◆◆◆◆




நூல்: புனைவும் புதிதும்
(ஆய்வுக் கட்டுரைகளும் பிறவும்)
ஆசிரியர்: சு. குணேஸ்வரன்
முதற்பதிப்பு: சித்திரை 2012
விலை: ரூபா 250/=
ISBN:978-955-51949-1-4
அளவு:14.5X20.5 செ.மீ.

ஈழத்தைப் பொறுத்தவரை புலம்பெயர் இலக்கியம் சார்ந்து முதன்முதலில் உயர் பட்டத்தைப் பெற்ற சு.குணேஸ்வரன் ஏற்கனவே 'மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்', 'துவாரகன் கவிதைகள்' (2008) 'அலைவும் உலைவும்' 'புலம்பெயர் இலக்கியம் குறித்த பார்வைகள்' (கட்டுரைகள்) 2009 ஆகிய நூல்களை வெளிக்கொணர்ந்தவர். கவிதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு, ஒளிப்படம், வலைப்பதிவு ஆகியவற்றில் தமது ஆளுமையைச் செலுத்தி வருபவர். இவர் ஓர் பட்டதாரி ஆசிரியர்.

இந்நூலின் முதலாவது கட்டுரை, எண்பதுகளில் புகலிடக் கதைகள் என்ற தலைப்பில், பார்த்திபன் படைப்புகளை ஆராய்கிறது. பார்த்திபனது ஐந்து நாவல்கள், குறுநாவல்கள் தொகுப்பு பற்றியும் நிறங்கள், ஜனனம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளிலுள்ள கதைகள் பற்றியும் ஆராய்கிறது. நாவல் குறுநாவல்களில் குறைபாடுகள் இருப்பினும் சிறுகதைகளே பார்த்திபனின் படைப்புகளைத் தூக்கி நிறுத்த வல்லனவாக உள்ளன எனவும் பார்த்திபனின் எல்லாக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளிலும் அவரது ஆத்மா கிடந்து துடிக்கிறது எனவும் கூறும் குணேஸ்வரன், எடுத்துக்காட்டாக தெரியவராது, இழவுக்கும் தொழிலுக்கும் ஆகிய கதைகளிலிலிருந்து சிலபகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். தீவு மனிதன் சிறுகதையின் பாத்திர வார்ப்பை சிலாகிக்கிறார். புலம்பெயர் இலக்கியத்தின் செல்நெறியை விளங்கிக் கொள்ள பார்த்திபன் கதைகள் உதவுகின்றன என்கிறார்.

இலத்திரனியற் சூழலில் புகலிடச் சிற்றிதழ்கள் கட்டுரையில் சிற்றிதழ்களை (1) அச்சிதழ்கள் (2) அச்சிதழ்களும் இணைய இதழ்களும் (3) மின்னிதழ்கள் (4) இணையத்தளம் மற்றும் வலைப்பூக்கள் ஆகிய பிரிவுக்குட்படுத்தி ஆராய்கிறார்.

சிற்றிதழ் அச்சில் வெளிவந்தாலும் அவை மின்னிதழ்களாக வெளிவரும்போதுதான் அவை அனைத்துலகத் தளத்துக்குச் செல்லும் என்கிறார். "சிறுபத்திரிகை வடிவமே இன்னும் இணையத்தில் காணப்படுகிறது. இதையொரு குறையாகவே கருதுகிறேன். இணையத்தின் முழுமையான பலத்தை அறிந்து கொள்ளாமலேதான் இவை செயல்படுகின்றன. வீடியோ, ஆடியோ மற்றும் ஓவியங்கள், கூடுதல் தரவுக்கான இணைப்புக்கள் நேர்காணலின் தரவிறக்க வசதி, நேரடியாக எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு உரையாடல் போன்ற இணையத்தின் முக்கிய வசதிகள், இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை" என்ற எஸ். இராமகிருஷ்ணனின் கூற்றை எடுத்துக் காட்டுகிறார்.

"புகலிட இலக்கியமும் பண்பாடும்' என்ற கட்டுரையில் புலம்பெயர் சூழலில் பண்பாட்டுச் சூழலின் தாக்கம் புலம்பெயர்ந்தவர்களின் வாழ்விலும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பிக்கின்றது என்ற கருத்தினை புலம்பெயர்ந்தோர் கவிதைகளிலும் சிறுகதைகளிலும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இந்தப் பண்பாட்டு நெருக்கடியைப் புரிந்து கொள்வதற்கு 1) இளைஞர்கள் தமிழர் அல்லாத பிறநாட்டுப் பெண்களைத் திருமணஞ் செய்தல். 2)தாய் தந்தையரின் விருப்புக்கு மாறாக தமிழ் இளைஞர் யுவதிகள் பிறநாட்டு இளைஞர்கள் யுவதிகளை நண்பர்களாக ஏற்றுக் கொள்ளல். 3) பிறநாட்டுச் சூழலின் மத்தியில் அந்நாட்டுச் சூழலையே கைக்கொள்ளல் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறார். எமது அடையாளத்தைப் பலவிதத்திலும் கட்டிக் காக்க வேண்டிய தேவை தாய்ச் சமுதாயத்துக்கும் புலம்பெயர் சமுதாயத்துக்கும் உண்டு" என்றார்.

புலம்பெயர் சிற்றிதழ்களில் அரசியல் என்ற கட்டுரையில் புலம்பெயர் சிற்றிதழ்களின் அரசியல், காலம், ஈழச்சூழல் என்பன தெளிவாகப் புலப்படுகின்றன எனக்கூறும் ஆசிரியர் சிற்றிதழ்கள் முன்வைத்த பொருட்பரப்பை பின்வருமாறு வகுத்து ஆராய்கிறார். 1) தமிழ்ப் போராளிகளின் அரசியல் நிலைப்பாடு. 2) தமிழ்ப் போராளிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலை 3) இலங்கை அரச படைகள் தமிழ் மக்கள் மீது நடத்திய வன்முறைகள் 4) இந்தியப் படைகள் தமிழ்மக்கள் மீது நடத்திய வன்முறைகள் 5) தமிழர்களுக்கான அரசியல் அதிகாரம் 6) தமிழ்மொழி தமிழ்ப் பண்பாட்டு பேணுகை. 7) சாதிய மேலாக்கம். 8) புகலிடச் சூழலில் ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட நிறவாத இனவாத வன்முறைகள் 9) மூன்றாம் உலக நாடுகள் மீது வல்லரசுகளின் ஆதிக்கம் 10) குடும்பத்திலும் வெளியிலும் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் 11) நவீன கதை சொல்லல் முறை 12) இலக்கியத்தில் புதிய வடிவங்களைப் பரீட்சித்தல்.

புலம்பெயர் இலக்கியம் அனைத்து மட்டத்திற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கு சிற்றிதழ்கள் அளப்பரிய பணியை ஆற்றியுள்ளன என முடிவு கூறுகின்றார்.

இந்நூலில் என். எஸ்.எம். இராமையாவின் 'ஒரு கூடைக்கொழுந்து' தாட்சாயணியின் சிறுகதைகளில் பெண் சித்தரிப்பு, ந. சத்தியபாலனின் 'இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்' என்ற கவிதைத் தொகுப்புகளின் விமர்சனம் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

'புனைவும் புதிதும்' என்ற இந்நூல் பல தரமான கட்டுரைகளைக் கொண்டுள்ளது. ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

◆◆◆◆◆




நூல்: மீண்டும் துளிர்ப்போம்
ஆசிரியர்: கலாமணி பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி
விலை: ரூபா 200/=

கலாமணி பரணீதரன் ஏக காலத்தில் பல்கலைக்கழக மாணவராகவும் எழுத்தாளராகவும் பத்திரிகையாளராகவும் இருப்பது அவரது ஆற்றலையும் அயரா உழைப்பையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. எழுத்தாளர்கள் எழுதிப் பேர்பெற்றபின் சிற்றிதழை தொடங்குவர், இவர் அதற்கு மாறாக இருக்கிறார்.

மீண்டும் துளிர்ப்போம் என்ற நூலுக்கு பிரபல எழுத்தாளர் தெணியான் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். முன்னுரையில் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் நூலாசிரியரின் ஆளுமை பற்றி பின்வருமாறு தெரிவிக்கிறார். சமகாலத்தைய குறுக்குமுகத் தோற்றத்தின் காட்சிகள் கதைகளாக ஆக்கம் பெற்றுள்ளன. பாத்திரங்கள் சமகாலத்தின் குறியீடுகளாகின்றனர். அந்தக் குறியீடுகள் வகை மாதிரியின் நம்பிக்கைகளாக நிற்கின்றன என குறிப்பிடுகிறார். வீழ்த்தப்பட்ட இனம் மறுபடியும் எழும்பி நிற்க வேண்டும் நம்பிக்கையுடன் துளிர்க்கவேண்டும் சரித்திரம் மாற வேண்டும் என்ற கருதுகோள்கள் நூலாசிரியரிடம் வேரூன்றி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இத்தொகுதியில் வரும் கதைகளாக, உயிரினும் மேலானது, மெய்ப்பட வேண்டும், புதிய காலடி, நகுதற் பொருட்டன்று, கற்பக தருக்கள், பொய் முகங்கள், ரோபோ, மீண்டும் துளிர்ப்போம், விட்டுவிடுதலையாகி, உறவுகள், மாறுதல், பகிடிவதை, யதார்த்தம் என்பன இடம் பெறுகின்றன. இவைகள் மல்லிகை, ஞானம், படிகள், தென்றல், கதிரவன், பூங்காவனம், தினக்குரல் முதலிய இதழ்களில் வெளிவந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உயிரினும் மேலானது' கதை ஊறிப்போன சாதியத்தை பற்றிப் பேசுகிறது. மனித சமூகம் இருக்கும் வரை சாதியும் இருக்குமோ?.... இரண்டாவது கதை மெய்ப்பட வேண்டும். குடும்பத்தை காப்பாற்ற சியாமளா கட்டார் புறப்படுகிறாள். அவள் கனவு மெய்ப்பட வேண்டும் என்பது எல்லோருடைய பிரார்த்தனையாக அமைகிறது. 'புதிய காலடி' வாழும்போது மற்றவரும் வாழவேண்டும் என்ற எண்ணம் வேண்டும். அலட்சியப்படுத்தல் அவமதித்தல் அடிமைப்படுத்தல் என்பன ஒருநாள் தனக்கு எதிராக ஈட்டிகளாக மாறும் என்பதை உணர்த்துகிறது. மதன் தன் நண்பர்களை தீமையில் இருந்து மீட்க எண்ணுவது சமூக திருத்தத்தைக் காட்டுகிறது. தன்னுடைய மகன் படிப்பிற்காக தன்னையும் மகனையும் வளர்த்த பனைகளை விற்று சபதத்தை நிறைவேற்றுகிறாள் செல்வநாயகி. பொய் முகங்கள் சாதித் தடிப்பை விளக்குகிறது. 'மீண்டும் துளிர்ப்போம்' இடிந்துபோன வீட்டை கட்டி வாழ்வை நடத்தும் இலட்சிய நம்பிக்கையான எண்ணத்தை உறுதி செய்கிறது.

- *குறிஞ்சி நாடன்*

◆◆◆◆◆




நூல்: புதிய பாதை
ஆசிரியர்: செ. ஞானராசா
வெளியீடு: சர்வீனா வெளியீட்டகம்
விலை: ரூபா 125/=

மேற்படி நூலாசிரியர் செ. ஞானராசா அவர்கள் தம்பலகாமம் சிவசக்தி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய அதிபராவார். இவரது கவிதைகள் வீரகேசரி, தினகரன், தினக்குரல், தினமுரசு, ஞானம், இனிய நந்தவனம், செங்கதிர், நித்திலம் முதலிய பல இதழ்களில் வெளிவந்துள்ளன.

இளைஞர்களுக்காகவும் சிறுவர்க்காகவும் பல நூல்களை வெளியிட்டுள்ளார். 2005ம் ஆண்டு , 'பாடி மகிழ்வோம்' என்ற கவிதை நூலையும் 2006ம் ஆண்டு 'சிறுவர் பா அமுதம்' என்ற கவிதை நூலையும் படைத்து இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார். பல கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இளைஞர் நெறியோடு வாழ்வதற்கும் சமூகத்தின் மீது பற்றுள்ளவர்களாய் வாழவும், சோம்பித் திரியாமல் தொழில் செய்து வாழவேண்டுமென்றும், ஒற்றுமை சமாதானம், பொறுமை முதலிய நல்ல குணங்களைப் பெற்றுக் கொள்ளவும் சிறப்பான பல அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

இக்கால இளைஞர்கள் காதல் செய்வதும் இடையில் பல குதர்க்கமான காரணங்களைச் சொல்லி கைவிடுவதையும் கவிஞர் கடுமையாகச் சாடுகிறார்.

*"சாதி சமய பிரிவு பார்த்து*
*சரிந்து வீழ்வதா*
*பாதியிலே முறித்து விட்டு*
*பறந்து செல்வதா?"*

என்று ஆவேசமாகப் பாடுகிறார் கவிஞர். சமூகத்திலே பலவிதமன கொடுமைகள் நடக்கின்றன. இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதா? கொடுமையை எதிர்த்து போராட வேண்டாமா? என்று மனம் நொந்து பாடுகிறார்.

*"கண்ணெதிரே கொடுமை கண்டு*
*கண்மூடி வாழ்வதா?"*

என்று கவிஞர் குமுறுகிறார். முயற்சி செய்யாமல், வேலைவெட்டி பாராமல் சோம்பலாய்த் திரிவோரைப் பார்த்து கவிஞர் குரல் கொடுக்கிறார்.

வேலை செய்யாதிருந்து
வெட்டிப் பேச்சுப் பேசி
சாலை பார்த்து இருந்தால்
சாவு எழுந்து அழைக்கும்

இளைஞர்க்கு அறிவுரை நல்கும் இந்நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

- *குறிஞ்சி நாடன்*

## கண்ணீர் அஞ்சலி

### அநு.வை. நாகராஜன்



ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவரான அநு. வை. நாகராஜன் சமீபத்தில் அமரரானார் என்ற செய்தி ஈழத்து இலக்கிய உலகைப் பெரிதும் கவலைகொள்ள வைத்துள்ளது. 25-5-1933ல் உடுப்பிட்டியில் பிறந்த அநு. வை. நாகராஜன், அநுராதபுரத்தில் வளர்ந்து, வாழ்ந்து, அங்கு ஆரம்பக்கல்வி பெற்றவர். பயிற்றப்பட்ட ஆசிரியர், சைவப்புலவர், தமிழ்நாட்டில் சமூக சேவையில் பட்டப்பின்படிப்பை மேற்கொண்டவர். சட்டப்பட்டதாரி. ஆசிரியராக இருந்து, அதிபராகி, கல்வி அதிகாரியாக உயர்ந்தவர். சிறுகதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், நாடகம், இதழியல், நாட்டாரியல் ஆகிய துறைகளில் இயங்கி , பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். அநுராதபுரத்தில் ஆசிரியராக இருந்த காலத்தில் "அன்னை" என்ற முத்திங்கள் கலை இலக்கியச் சஞ்சிகையை நடத்தி எழுத்தில் ஆர்வமுள்ள பலரை அச்சஞ்சிகை மூலம் ஊக்குவித்தவர். தமிழாசிரியர் சங்கச் செய்திமடலான "ஆசிரியன்" என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியவர்.அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் இலக்கிய நெஞ்சங்களுக்கும் 'ஞானம்' தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

கே. பொன்னுத்துரை

### சுவிஸ் நாட்டிலிருந்து வந்து மேடையேறிய செல்வி சிவானந்தராஜா ஆரணியின் 'பரத நாட்டிய அரங்கேற்றம்'

சூரிச்சில் நடனாசிரியை திருமதி மதிவதனி சுதாகரன் அவர்களின் கலைக்கூடமாகிய 'திருக்கோணேஸ்வரர் நடனாலயத்தில்' 1999ஆம் ஆண்டு தனது 7ம் வயதில் பரதம் பயில ஆரம்பித்தவர் செல்வி. சிவானந்தராஜா ஆரணி தனது 13 வருட கால பயிற்சியை நிரூபிக்கும் வகையில் 28.07.2012 தினம் மாலை 3.30 மணிக்கு உவர்மலை விவேகானந்த கல்லூரி கலைக்கூடம், திருகோணமலையில், தாய் மண்ணுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தனது பரத நாட்டிய அரங்கேற்றத்தை மிகச் சிறப்பாக சமர்ப்பித்தார்.

சுவிஸ் நாட்டில், திருமலை மண்ணுக்கேயுரிய தமிழ் பாரம்பரியம் மிக்க பெற்றோருக்கு மகளாகப் பிறந்து வெறுமனே இருபது வயதில் தனது மேற்படிப்பை பொருளாதார துறையில் தொடர்வதுடன் ஆறு மொழிகளை பேசக்கூடிய ஆற்றலையும் கொண்டு, பரத நாட்டிய கலையை மனமொப்பி பயின்றதுடன் தனது சுவிஸ் நாட்டு உறவுகளையும் சினேகங்களையும் ஓரங்கட்டி விட்டு இன்று தாய் மண்ணுக்கு பெருமை சேர்க்க முன்வந்த செல்வி ஆரணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

'புஷ்பாஞ்சலி', 'கணேசாதுதி', 'ஜதீஸ்வரம்', 'கௌத்தவம்' (காளி), 'பதவர்ணம்', 'கீர்த்தனம்', 'பதம்', 'இராமர் தாலாட்டு', 'விஷமக்கார கண்ணா', 'தில்லானா' ஆகிய நடனத் தலைப்புகளில் பரத நாட்டியத்தின் தாற்பரியங்களையும் பிரமாணங்களையும் செல்வி ஆரணி மிக மிக சிறப்பாக வெளிப்படுத்தினார்.

இந்தியாவிலிருந்து சிறப்பாக வருவிக்கப்பட்ட கலைஞர்கள் ஸ்ரீ. ஜீ. ஆர். பிரவீன் அவர்கள் வாய்ப்பாட்டிலும் ஸ்ரீ ரி. விஸ்வநாதன் அவர்கள் மிருதங்கத்திலும், ஸ்ரீ முருகானந்தன் அவர்கள் வயலினிலும், பெரும் சாதனை படைத்தார்கள் என்றே கூறவேண்டும்!

நூற்றுக்கணக்கான இரசிகர்கள் மெய் மறந்த நிலையில் ஸ்ரீ. ஜீ. ஆர். பிரவீனின் குரல்வளத்தில் மூழ்கி இருக்க, செல்வி ஆரணியின் நடன இடைவேளை வரைக்கும் மந்த கதியுடன் சென்று கொண்டிருந்தது. இடைவேளைக்குப் பிறகு நடனத்தில் சூடு பிடிக்க தொடங்கியதுடன் 'இராமர் தாலாட்டு', 'விஷமக்கார கண்ணா', 'தில்லானா' ஆகிய நடன பிரிவுகளில் செல்வி ஆரணி தனது வேகத்தையும் துடினத்தையும் சிறந்த அபிநயத்தையும் மிகத் திறமையுடன் வெளிப்படுத்தியதுடன் இது ஒரு பரத நாட்டிய அரங்கம்தான் என்பதை சிறப்புற நிலை நாட்டி தனது குருவுக்கும் மண்ணுக்கும் பெருமை சேர்த்தார்.

திருகோணமலையின் பல நடன சங்கீத விற்பன்னர்கள் சபையில் வெறுமனே பார்வையாளர்களாக வீற்றிருக்க இந்திய கலைஞர்களின் ஒத்துழைப்பு பெறப்பட்டமையை வட இலங்கை சங்கீத சபையின் நிர்வாக செயலாளர் கவலையுடன் வெளிப்படுத்தினார். நிகழ்ச்சி இரவு 8.00 மணிவரை நீடித்தது.

செல்வி ஆரணிக்கு ஒரு சபாஷ்!

### "சங்கத்தமிழ்" வெளியீடு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முத்திங்கள் வெளியீடான "சங்கத்தமிழ்" சஞ்சிகையின் வெளியீட்டு விழா 1.08.2012 மாலை சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தமிழ் வாழ்த்தினை திருமதி கலாராணி ஸ்ரீஸ்கந்தராசா பாட, வரவேற்புரையை சங்கத் துணைச் செயலாளர் தம்பு சிவசுப்பிரமணியம் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையை திருமதி வசந்தி தயாபரன் நிகழ்த்த, மலர் ஆசிரியர் க. இரகுபரன் கருத்துரை நிகழ்த்தினார்.முதற்பிரதியை ஆ.மா. சுப்பிரமணியம் சங்கத்தலைவர் மு. கதிர்காமநாதனிடம் பெற்றுச் சிறப்பு செய்தார்.இந்நிகழ்வில் விருது பெற்ற கலைஞர்களின் சிறப்புக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையை நினைவுகூரல்

கொழும்பு சமூக விஞ்ஞானத் கற்கை வட்டம் வழங்கிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையை நினைவு கூரல் நிகழ்வு கடந்த 01.08.2012 ந் திகதி மாலை தேசிய கலை இலக்கியப் பேரவை கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கவிஞர் மேமன்கவி "இன்றைய பார்வையில் கவிமணி" என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். நூல்அறிமுகம், கவிதைபற்றிய பார்வை, கவியரங்கு என்பன இடம் பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வண்ணச் சிறகு கவிதைகள்" பற்றி கவிஞர் மல்லியப்பு திலகர்

கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக் களம் (106) நிகழ்வில் மாத்தளை நக்லஸ் மலையடிவாரத்தில் வாழ்ந்து 'சென்றுவருகிறேன் என் சென்ம பூமியே' என்று கவிபடைத்து தாயகம் சென்று அங்கு மறைந்த மலையகக் கவிஞர் அரு. சிவாநந்தன் தந்த "வண்ணச் சிறகு கவிதைகள்" பற்றி கவிஞர் மல்லியப்பு திலகர் (03.08.2012) உரையாற்றினார்.இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் அந்தனிஜீவா தலைமை வகித்தார்.

## கர்நாடக இசை விருந்து

கொழும்பு "ஆலாபனா" அமைப்பினர் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கர்நாடக இசை விருந்தினை (04.08.2012) அளித்தனர். இதில் அம்ரிதா கேதீஸ்வரன் தர்மீனா தாமோதரம்பிள்ளை பாட்டு பாட, வயலின் எஸ். திபாகரன், கௌரி நவரட்ணலிங்கம், மிருதங்கம் பி.திவ்யரூப சர்மா, ஈ. பவித்திரன், முகர்சிங் வீ. பிரபா. ஆகியோர் பக்கவாத்தியம் இசைத்தனர்.இந்நிகழ்வில் சிறப்பு இசை விருந்தனை சிங்கபூர் கலைஞர் சுக்ஷ்மா சோமசேகர் அளித்தார். இதற்கான ஏற்பாடுகளை ஏ.கே. கருணாகரன் செய்திருந்தார்.

## கே. வீ. எஸ் வாஸ்-அவர்களின் நூறாவது பிறந்த நாள் விழா

வீரகேசரி முன்னாள் பிரதம ஆசிரியர் அமரர் கே.வீ.எஸ். வாஸ் அவர்களின் நூறாவது பிறந்த நாள் விழா கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தெ. ஈஸ்வரன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.வீரகேசரி நிறுவனத்தின் சார்பில் நிறுவன பிரதம முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ் நடேசன் வரவேற்புரை ஆற்றினார்.இலங்கை தேசிய பத்திகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் பலர் அன்னாரின் சிறப்புகளை பற்றி உரையாற்றினார்கள்.அமரர் கே.வீ.எஸ் வாஸ் அவர்கள் எழுதிய 'வெளிநாட்டு வழிபாடுகளில் நம் கலாசார ஒற்றுமை' என்ற தலைப்பிலான நூல் வெளியீடும் இடம் பெற்றது.அமரர் கே.வீ.எஸ். வாஸ் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு வீரகேசரி பத்திரிகை நிறுவனம் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் இம்மேடையில் வழங்கப்பட்டன. வீரகேசரி நிறுவனத்தினரும், அமரரின் மகன் மோகன், அவரின் துணைவியார், மகள், மருமகன் ஆகியோரும் இணைந்து இவ்விழா வெற்றியில் பங்காற்றினர்.

## "மொழிவழித் தொழிற் சங்கம்- அவசியமும், அவசரமும்"

கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதன்கிழமைகளில் நடத்தும் "*அறிவோர் ஒன்ற கூடல்*" நிகழ்வில் (08.08. 2012) முன்னாள் தொழிற்சங்கவாதி சி. இரத்தினவடிவேல் அவர்கள் "மொழிவழித் தொழிற் சங்கம்- அவசியமும், அவசரமும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் தலைமை தாங்கி நடத்தினார். பெருந்திரளானோர் கலந்து கருத்துரை வழங்கினார்கள்.

## "போருக்குப்பின்னர் ஈழத்து இலக்கியம்"

கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக் களம் (107) நிகழ்வில் "போருக்கு பின்னர் ஈழத்து இலக்கியம்" என்றத் தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் செ. யோகராசா (10.08.2012) உரையாற்றினார்.

இந்நிகழ்விற்குக் கொழும்புத் தமிழ்ச் சங்க பதிப்புத்துறைச் செயலாளரும், தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளருமான திரு. க. இரகுபரன் தலைமை வகித்தார். ஈழத்து இலக்கியம் சம்பந்தமாக சபையோர் பலர் காத்திரமான கருத்துகளை தெரிவித்தனர்.

## "நட்சத்திரங்கள், கிரகங்கள்" ஒரு வானியல் நோக்கு

கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதன் கிழமை தோறும் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடலில் வைத்திய கலாநிதி செ.சண்முகதாஸ் "நட்சத்திரங்கள், கிரகங்கள்" ஒரு வானியல் நோக்கு என்ற தலைப்பில் (15.08.2012) உரையாற்றினார்.இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந. உருத்திரலிங்கம் தலைமை தாங்கி நடத்தினார்.

## பருத்தியூர் பால.வயிரவநாதனின் "வாழ்வியல் வசந்தங்கள்" பதினெட்டு நூல்களின் வெளியீட்டு விழா

வாழ்வியல் சிந்தனைக் கட்டுரைகள் அடங்கிய பருத்தியூர் பால.வயிரவநாதனின் பதினெட்டு நூல்களின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வடமாகாண மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் தலைமையில் 19.08.2012 நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக பேராசிரியர் சபா. ஜெயராசா கலந்து கொள்ள, "உண்மை சாஸ்வதமானது" நூலின் முதற்பிரதியை "இலக்கியப் புரவலர்" ஹாசிம் உமர் பெற்று சிறப்புச் செய்தார்.பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்துகளை செல்விகள் இ. ஹரிசனா, யோ.பிருதிகா ஆகியோர் பாட, ஆசியுரையை "அருட்கவி" வை. ஈ. எஸ். காந்தன் குருக்கள் வழங்க, வரவேற்புரையை ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி வழங்கினார். இலங்கை தேசிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.வாழ்த்துரைகளை அரசாங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர் எஸ்.தில்லைநடராஜா, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், சப்பிரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. கனகசபாபதி நாகேஸ்வரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன், மேல்மாகாணசபை உறுப்பினர் கலாநிதி என். குமரகுருபரன், ஆகியோர் வழங்க ஏற்புரையை நூலாசிரியர் பருத்தியூர் பால. வைரவநாதனும், நன்றியுரையை செல்வன் ந. ராகுலனும் வழங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

மாதத்தின் 1ம் திகதி வந்ததும் ஞானம் எப்ப கைக்கு வரும் என்ற எதிர்பார்ப்பில் என்னைப் போல் பலர் இருக்கிறார்கள் என்பதை கிண்ணியா ஏ.எம்.எம். அலி அவர்களின் வாசகர் கடிதம் உணர்த்தியது.

ஞானம் 147ஆவது இதழ் கிடைத்ததும் கலாநிதி துரை மனோகரனின் பத்தி எழுத்தைத் தேடினேன். அப்பாடா, நீண்ட நாட்களின்பின் இடம்பெற்றிருந்தது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது மாத்திரமல்ல; நான் எதிர்பார்க்கும், எழுத நினைக்கும் இலங்கை வானொலி பற்றி துணிச்சலான விமர்சனங்களை முன் வைப்பதில் கலாநிதிக்கு நிகர் அவரேதான் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அவருக்கு எனது வாழ்த்துக்கள். மேலும் இடம்பெற்ற சிறுகதைகள் அத்தனையும் எவரையும் இருமுறை வாசிக்க வைக்கும் என்றால் அது மிகையாகாது. குறிப்பாக யோகா பாலச்சந்திரன் அவர்களது சக்தி கிளம்புது என்ற சிறுகதை நமது நாட்டில் இடம்பெற்ற யுத்த வடுக்களின் பின்னணியிலும், கலாசார சீரழிவுகளின் விபரீதப் போக்குகளினாலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பிரதிபலிப்புகளேயொழிய சிறுகதையல்ல. உண்மைக் கதைகளில் ஒரு துளி மட்டுமே.

தீரன் ஆர்.எம். நௌஸாத் எழுதிய 'ஒய்த்தா' மாமா என்ற உண்மைக் கதையை, சில சொற்களை தவிர்த்து, நாகரீகமான விரசமற்ற முறையில் எழுதியிருந்தால் ஞானத்தின் தரம் இன்னும் உயர்ந்திருக்கும். இஸ்லாமியர் அல்லாதவர்களுக்கு சுன்னத்து என்றால் என்ன என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார் நௌஸாத் அவர்கள். மதக் கோட்பாடுகளின் ஓர் அங்கமான இந்த புனிதமான நிகழ்வை, ஆண் பிள்ளைகளுக்கு விபரம் அறியுமுன்பே குழந்தைப் பருவத்திலேயே செய்வது தான் நல்லது என்பது எனது அபிப்பிராயம்.

**P.D. பாலரட்ணம், கண்டி.**

*****

ஞானம் ஆகஸ்ட் 2012இல் இடம்பெற்ற 'இலங்கை வானொலி எங்கே செல்கிறது?' என்ற எனது கட்டுரை தொடர்பாகப் பல வாசகர்களும் வானொலி நேயர்களும் தமது பாராட்டுக்களை நேரிலும், தொலைபேசி மூலமும் என்னிடம் தெரிவித்தனர். அதேவேளை, சில வட்டாரங்களில் எனது கட்டுரை தொடர்பாக வாதப் பிரதிவாதங்களும் நடந்து வருவதாகத் தெரிகிறது. நான் நிகழ்ச்சிகளில் பேசும்போதும் சரி, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதும்போதும் சரி விமர்சன பூர்வமாகவே எனது கருத்துக்களைத் தெரிவித்து வந்துள்ளேன். ஒருபோதும் எவரையும் அவதூறு செய்வது எனது நோக்கமன்று. அவதூறு என்பது அருவருப்பானது. விமர்சனம் என்பது ஆரோக்கியமானது; நல்ல நோக்கம் கருதிச் செய்யப்படுவது. குறைகளைச் சுட்டிக் காட்டுவது ஒருபோதும் அவதூறு ஆகாது. அது விமர்சனத்தின் பாற்படும். நான் எப்போதும் எனது பேச்சிலும் எழுத்திலும் செய்து வருவது விமர்சனமே ஆகும். எனது பேச்சுக்களையும் எழுத்துக்களையும் நேர்மையுடனும் நிதானத்துடனும் நோக்குபவர்கள் இதனை நன்கு உணர்வர். விமர்சனத்தை அவதூறு என்று கருதுவது ஆரோக்கியமானது அன்று.

இலங்கை வானொலியில் (தென்றல்) 17.07.2012இல் காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் என்மீது அவதூறு பொழியப்பட்டது. அதற்குப் பதில் அளிப்பதற்கு வானொலியில் எனக்கு இடம் தரமாட்டார்கள் என்பதனால், அவர்களின் தவறுகளை விமர்சனபூர்வமாக ஞானம் இதழில் சுட்டிக் காட்டத் தவறவில்லை. நேர்மையுடனும் நிதானத்துடனும் நான் அக்கட்டுரையை எழுதியிருந்தேன். "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்பதற்கேற்ப, சிலருக்கு நான் எழுதியவற்றை ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

நான் பெயர்களைக் குறிப்பிடாமலே இலங்கை வானொலி நிகழ்ச்சி பற்றிய எனது விமர்சனத்தை எழுதியிருந்தேன். ஆனால், வானொலி நிகழ்ச்சியில் (எங்கேயும் எப்போதும்) என் பெயரைக் குறிப்பிட்டு, அநாகரிகமாக அவதூறு செய்தவர்கள், இரு வானொலி அறிவிப்பாளர்களும்தான் என்பது பலருக்கும் தெரிந்த விடயம்.

விமர்சன பூர்வமாகத் தமது சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு எவருக்கும் உரிமை உள்ளது. அதனையே நான் செய்தேன். என் எழுத்தில் அவதூறு என்பதற்கே இடமில்லை. என்மீது அவதூறு செய்தவர்கள் தொடர்பாக விமர்சன பூர்வமான எனது கருத்துகளை ஞானம் இதழில் எழுதினேன். இரு அறிவிப்பாளர்களும் வானொலி நிகழ்ச்சியில் பெயர் குறிப்பிட்டு என்னை அவதூறு செய்தமை, மிகப்பாரிய தவறாகும். அவர்கள் இருவரும் வானொலியில் நிகழ்த்தியது அவதூறு. நான் ஞானம் இதழில் எழுதியது விமர்சனம். இந்த இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை நேர்மையும், நிதானமும் கொண்டவர்கள். தெளிவாகப் புரிந்து கொள்வர். விமர்சனத்துக்கு விமர்சன பூர்வமாகப் பதில் அளிப்பதே நேர்மையான முறையாகும். ஞானம் இதழில் நான் இலங்கை வானொலி பற்றி எழுதிய விமர்சனத்திற்கு யாரும் தங்களது நியாயபூர்வமான மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அதுவே ஆரோக்கியமான மானிடப் பண்பு.

*****

ஞானம் இதழ் 146இல் 'இலக்கியவாதிகள்..' பற்றிய தேவமுகுந்தனின் ஆய்விடம்பெற்ற இராகவனின் 'யேசுகாவியம்' சிறுகதை பற்றி, அவரது மன உளைச்சலின் நதிமூலம் ரிஷிமூலம் பற்றிய ஒரு சிறு குறிப்பு இது.

முரணுற்ற இரு துருவங்களாயினும், ஒருவரையொருவர் விமர்சிக்கும் போது நாகரிகமான முறையில் தமது கருத்தை வெளிப்படுத்த முற்படுவதே ஒரு படைப்பாளியின் பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகவனால் தெரிந்தும் மறைக்கப்பட்ட செய்தியால் குழம்பிப் போகக் கூடிய புதிய வாசகர்களுக்காகவே இதனைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

கவியரசரின் 'யேசுகாவியம்' 1982ல் வந்தது. இராகவனின் 'யேசுகாவியம்' சிறு கதையில் குறிப்பிடப்படும் எழுத்தாளரின் தொகுப்பு வெளியான காலம் 1970 என நினைக்கிறேன். இலங்கையரசின் சாகித்தியப்பரிசு 1972இல் கிடைத்திருக்க வேண்டும்.

குறித்த சிறுகதைத்தொகுப்பு என் வசமிருந்து, மட். மெதடிஸ்த மத்திய கல்லூரியின் நூலகத்திற்குக் கைமாறியதால் சரியாகக் குறிப்பிட முடியவில்லை.

அந்த வேளையில் குறித்த எழுத்தாளர் அகவை இருபத்தைந்துக்குள் உள்ள இளைஞராகவே இருக்கவேண்டும். அவரது அந்தத் தொகுயில் கூட நெல்லை க. பேரன், குப்பிளான் ஐ. சண்முகன், ஐ. சாந்தன் போன்ற எழுத்தாளர்களும் பாத்திரமாக வார்க்கப்பட்டுள்ளார்கள்.

குறித்த நூலாசிரியர் வெளியிட்ட முதல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் குப்பிளான் ஐ. சண்முகனும் இருந்துள்ளார்.

இராகவன் ஒன்றுமறியாத அப்பாவிச் சிறுகுழந்தையல்லர். தேடலில் ஆர்வமுள்ள தேடி வாசிக்கும் பழக்கமுள்ள காத்திரமான சிறு சஞ்சிகைகள், நூல்களைச் சேகரித்தும், எழுதியும், ஆய்ந்தறிந்து உய்த்துணரும் ஓர் இளவயதுப் படைப்பாளி. குப்பிளான் ஐ. சண்முகனிடமிருந்தே குறித்த எழுத்தாளரின் நூலைப் பெற்று வாசித்திருக்கக்கூடும்.

குறித்த எழுத்தாளரின் 'புரிதல்' இதழில் இராகனும் எழுதியதாக ஞாபகம்.

'ஞானம்' அல்லது 'ஜீவநதி' எதுவென ஞாபகமில்லை. இவ்விதழ்களில் ஒன்றில் வெளியான குறித்த எழுத்தாளரின் கட்டுரையொன்றில் இராகவன் விமர்சிக்கப்பட்டது, இந்த வக்கிரப் படைப்பிற்கு ஒரு வடிகாலாக இருத்தல் கூடும்.

எது எப்படியோ, கவியரசரின் 'யேசுகாவியம்' வெளிவந்த காலத்தில் அம்பலவாணருக்கு 'யேசுகாவியம்' என்றொரு மகன் பிறந்தாரென்ற செய்தி அடிபட்டுப் போகிறது.

எழுபதுகளிலேயே 'கணையாழி'க்கு மிண்டு கொடுத்த அறிமுகப்படுத்திய அதன் ஈழத்து விற்பனைச் சந்தைக்கு உதவிய இலக்கிய ஆர்வலர்கள்பால் கொண்டு சேர்த்த ஒருவர் பற்றி அறியாமலே, கணையாழியே யேசுகாவியத்தைப் பிரசுரித்ததுதான் துர்லபம்.

இவரது வார்த்தையில் சொன்னால், அவருக்கு முதுகு 'சொறிதல்' என என்னை இவர் விளங்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**-வீக்கேயெம்**

*****

ஞானம்147ஆவது இதழ் கிடைத்தது.ஒவ்வொருமாதமும் சுமந்துவரும் கதைகள், கட்டுரைகள் மிகவும் அருமையானவையாக அமைந்துள்ளன. 147ஆவது இதழில் எனது ஊரைச் சேர்ந்த தீரன் ஆர். எம். நௌஸாத்தின் 'ஒய்த்தா மாமா' என்ற சிறுகதை அருமையிலும் அருமை. நௌஸாத்தின் சிறுகதைகள் நமது வாழ்வில் ஏற்பட்ட அருமையான சிறுகதைகளாக காணப்படுகின்றன. அவருக்கு எனது பாராட்டுக்கள். இவரின் பணி தொடரவேண்டும் என்று பிரார்த்தித்தவனாக. கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள் மிகவும் பளனுள்ளதாகவும்,நூலுருவில் கொண்டுவரவேண்டிய பொக்கிஷமாகவும் காணப்படுகின்றன. வாசகர் பேசுகிறார் பகுதிக்கு கடிதங்களை அனுப்புபவர்களின் பெயர்களுடன் அவர்களின் ஊரையும் குறிப்பிட்டால் நல்லது என்பது எனது கருத்தாகும்;வாழ்க ஞானம்.

**-சாய்ந்த மருதூர் ஆ. முகம்மது நிகான்**

*****

ஞானம் சஞ்சிகை 146ஆவது இதழ் வாசித்தேன். அதில் வெளிவந்துள்ள படைப்புகள் யாவும் சிறப்பானதாக அமைந்துள்ளன. இவ்விதழில் வெளிவந்த சமரபாகு சீனா உதயகுமாரின் 'ஒரு பலத்தின் இருப்பின் மௌனம் பற்றிப் பேசுதல்' என்னும் கவிதை மனதின் ஆழம்வரை தொட்டுச் சென்றது. இக்கவிதை தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட அவலங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்களையும் மிகவும் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. இவரது படைப்புகள் சிலிர்க்கவைக்கும் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கின்றன. அவை உள்ளத்து உணர்வுகளைத் தூண்டுவனவாக அமைகின்றன.

**- இளவரசி அருளானந்தம் பருத்தித்துறை.**

*****

ஆவணி 2012 கால 147 ஆவது இதழ் கிடைத்தது. தீரன்.ஆர்.எம்.நௌஸாத்தின் சிறுகதை முஸ்லிம்களின் சுன்னத்து வைபவ நிகழ்வின் அனுபவத்தை என்னைப் போன்றவர்களுக்கு எடுத்தியம்பியிருக்கிறது. அந்தப்பருவ பொடியள்தரவளியின் மனக் கிலேசத்தை ஒரு நல்ல தமிழ் சிறுகதையாக்கியிருக்கிறார். நகைச்சுவையாகவும் அதேநேரம் அந்தரங்கமாகவும் இருந்தது. கலந்தன் காக்கா இப்பவும் மனங்களில் வந்து போகிறார்.

அருகிவரும் மலையகக் பாரம்பரியக் கலைகள் - அவற்றைப் பேணிக் காப்பதன் அவசியம் என்ற ஆசிரியரின் உரை மனதைக் கொள்ளைகொண்ட விடயம். உரிய பல்கலைக்கழகப் பேராசியரிர்கள் தக்க கவனத்தை ஊண்டி எடுத்தல் அவசரமானதொன்றாகும்.

சி.விமலனின் பரந்துபட்ட சிந்தனை தொடரட்டும். ஞா.பாலச்சந்திரனின் கட்டுரை நிறைவுறுகிறது என்றபோது என்னிடமும் ஏதோவொன்று குறைவதாகவே நான் உணர்ந்தேன். இதற்குச் சமவிலியான இன்னுமொரு பயணம் தொடர வேண்டுகிறேன். புதுவிடயங்கள் அறிய யாருக்குத்தான் ஆவல் இருக்காது. பாலச்சந்திரன் தொடருங்கள்.

இலங்கை வானொலி எங்கே போகிறது. கலாநிதி துரை மனோகரனின் பத்தி எழுத்து படித்தபோது என் மனதுக்குள் தோன்றிய உணர்வான விடயங்களை அப்படியே சொல்லிவிடுகின்றேன்.இலங்கை வானொலி அறிவிப்பாளர் கவிஞர் ஏயெம்.தாஜின் நூல் வெளியீட்டின் போது கலாநிதி துரைமனோகரன் அவர்கள் ஆற்றிய உரையின் துணிச்சலைப் பலரும் பாராட்டினார்கள் என்றும் அக்கட்டுரை வாயிலாக அறிந்தேன்.காலநிதி துரை மனோகரன் மட்டும் தனியே விமர்சனத்திற்குள் அகப்படும் போது, பாராட்டினவர்கள் இவர் பக்கம் நிற்காமல் போனதன் மர்மம் என்ன? தனியொருவரை இத்தகைய பொது நிறுவனங்கள் ஊடாக மனக்கிலேசத்திற்கு உள்ளாக்க நினைப்பது என்பது ஒரு மனித உரிமை மீறல்தான்.

**-சமரபாகு சீனா உதயகுமார்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# THARSHANA CONSTRUCTION








No. 146/ 2c, Dadagamuwa-East
Veyangoda
Tel: 071 4445960

## 'ஞானம்' சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்

- **பூபாலசிங்கம் புத்தகசாலை**
  202, 340, செட்டியார் தெரு, கொழும்பு-11
- **பூபாலசிங்கம் புத்தகசாலை**
  309A/ 2/3, காலி வீதி, வெள்ளவத்தை.
- **பூபாலசிங்கம் புத்தகசாலை**
  4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- **துர்க்கா**
  சுன்னாகம்
- **ஜீவநதி**
  அல்வாய். தொலைபேசி: 077 5991949
- **லங்கா சென்றல் புத்தகசாலை**
  84, கொழும்பு வீதி, கண்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/17/News/2012


*With Best Compliments from*

**Luckyland**

உலக சாதனை எங்கள் பாரம்பரியம்
பிஸ்கட்டிலும் தான் !




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740
Email: luckyland@sltnet.lk


இச்சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களால் இல. 48 B புளுமெண்டால் வீதி, கொழும்பு 13. யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org